


கபிலமலைக் கோவை

கபிலமலைக் குழந்தைக் குமாரர்

வருக்கக் கோவை

நூலாசிரியர் :

பிள்ளைப்பெருமாள் சிறைமீட்டான்

முதுபெரும் புலவர், வித்துவான்

வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்

அவர்கள்

ஓலைச்சுவடியிலிருந்து பரிசோதித்தெழுதிய மூலம்

நூலாய்வுரை, குறிப்புரை முதலியவற்றுடன் கூடியது

வெளியீடு

★

10—9—1973 அன்று
டாக்டர் R. பழனிவேலன்
செல்வி
N. பர்வதவர்த்தினி
ஆகியோர் திருமண நாளில்

கோவை வழக்கறிஞர்
திரு. R. செங்கோட்டுவேலன், B. A., B. L.,
அவர்களால் வெளியிடப்பெற்றது

அச்சிட்டோர்:

COPRESS

கோவை கூட்டுறவு அச்சகம்

நூற்பயன்

கொற்றவர் போற்றுங் கபிலைக் குழந்தைக் குமரர்தன்மேல்
சொற்ற வருக்கைக் கலித்துறை தன்னைத் துகளறவே
கற்றவர் கேட்டவர் அன்புற் றிருந்தவர் கந்தரருள்
பெற்றயி ராவத ஆனையும் ஏறப் பெறுவர்களே.

பதிப்புரை

என் தம்பி டாக்டர் R. பழனிவேலன், M. B., B. S., என் அத்தை பேத்தி செல்வி பர்வதவர்த்தினி, M. Sc., ஆகியோர் திருமண நாளில் ஒரு நற்பணியை முடிக்க வேண்டும் எனக்கருதி, எனக்குத் தந்தையை நிகர்த்தவரும் எங்கள் குடும்ப நண்பருமாகிய திருவாளர் வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்களிடம் கூற, அவர்கள் மனமுவந்து தாம் அரிதின் முயன்று பெற்ற ஏட்டினின்றும், பிரதி செய்த இந்நூலை உதவி வெளியிடுமாறு பணித்தனர். எனது நல்லூழ் பயனூட்டியதன் காரணமாகவும், என் தாய்வழி பாட்டனுர் காலஞ்சென்ற திருவாளர் S. முத்துசாமிக் கவுண்டர் தாய்வழிப் பாட்டியார் திருமதி குட்டியம்மாள் ஆகியோர் என்னுயர்விற் கொண்ட சிரத்தையாலும் ஐயா அவர்களோடு பழகும் வாய்ப்பினைப் பெற்றேன். அவர், குப்பை மேட்டில் விளையாடிக் கொண்டிருந்த என்னைத் "தமிழ்" என்னும் கடற்கரைக்கு அழைத்துச் சென்று விளையாட விட்டார். கடலைக் கடக்க இயலவில்லை யெனினும், கடற்கரையில் விளையாடி நல்ல சங்குகளையும், கூழாங்கற்களையும் பெற்றிருக்கின்றேன்.

எங்கள் குடும்ப வழிபடு தெய்வம் கபிலைமலை முருகன். என் அருமைத் தம்பி இல்லறமேற்கும் இந்நன்னுளில் எம் வழிபடு தெய்வத்தைப் பாட்டுடைத் தலைவனுகக் கொண்ட அகப்பொருள் நூலாகிய "கபிலைமலைக் கோவை" யை வெளியிட ஐயா அவர்கள் செய்த உதவிக்கு என்ன கைம்மாறு செய்வதென்று அறியேன்.

நூன்முகத்தில், இக்கபிலைமலையே பதிற்றுப்பத்து ஏழாம் பத்தில் கூறப்பெறும் நன்ரு வென்னும் குன்று என்று ஐயா அவர்கள் நிறுவி யுள்ளார், இதையொட்டி எங்கள் ஊர்ப்புறத்தில் வினவியதில் மேலும் சில சான்றுகள் புலப்பட்டன. ஏழாம்பத்தின் பதிகத்தில் ஏழாம்பத்திற் பாடப் பெறும்சேரமன்னர் செல்வக் கடுங்கோ வாழியாதன் திருமாலுக்கு "ஒத்திர நெல்லின் ஒகந்தூர் ஈந்தான்" என்பதில் வரும் ஒகந்தூர், கபிலைமலைக்குத் தெற்கே இருகல் தொலைவில் உள்ள "ஒரம்பூர்" என வழங்கிவரும் ஊராக இருக்கலாம் எனத் தெரிகின்றது. அண்மையில் உள்ள பாண்ட மங்கலம் திருமால் கோவிலில் ஆண்டு தோறும் நடக்கும் உற்சவத்தின் முன் "கபிலருக்குப்" பூசையிடுவது இத்தலத்திற்கும் கபிலர் என்ற புலவருக்கும் எவ்விதத்திலேனும் தொடர்பிருக்க வேண்டுமென்பது புலனுகின்றது. இவை ஆய்தற்குரியன.


இந்நூலை நன்முறையில் படியெடுத்தும் ஒப்பு நோக்கியும் உதவிய என் உழுவலன்பர்களும் பேரூர் சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்களுமான திருவாளர்கள் ந. முத்துக்குமாரசுவாமி, M. A., B. L., சென்னியப்பனுர், M. A., ஆகியோருக்குப் பெரிதும் கடப்பாடுடையேன்.

கபிலைமலையையும் அதன்கண் எழுந்தருளியுள்ள குழந்தைக் குமாரரையும் ஓவியமாக வரைந்துதவிய என் நண்பர் ந. தங்கவேலு, சிறந்த முறையில் நூலை அச்சிட்டு உதவிய கூட்டுறவு அச்சகத்தார், குறிப்பாகச் செயலர் என் அருமை நண்பர் திரு. K. மாரப்பன், M. A., அவர்களின் உதவியாளர்கள் ஆகியோரின் முயற்சி பெரிதும் பாராட்டிற் குரியது.

இந்நூல் சிறந்த முறையில் வெளிவர உதவிய அனைவருக்கும் எல்லா நலன்களையும் அருளுமாறு கபிலைமலை மேய குழந்தைக் குமாரரை இறைஞ்சுகின்றேன்.

"வேலகம்"
சிவானந்த நகர், கோவை
1 — 9 — 1973

இன்னணம்,
R. செங்கோட்டுவேலன், B. A., B. L.,
வழக்கறிஞர்.



காசினிபோற்றுங் குழந்தைக் குமாரர்

உ

கபிலாசலபதி துணை

கபிலைமலை

நான்முகம்:

கபில மலை முருகனுக்குரிய குன்றுதோருடல் திருப்பதிகளில் ஒன்று. இம்மலையில் முருகக் கடவுள் குழந்தைக் குமாரராய் வீற்றிருந்தருளுகின்ருர். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தமென்னும் மூவகைச் சிறப்புமுடையது.

கொங்கு இருபத்து நான்கு நாடுகளில் ஒன்ருய் விளங்குவது அரையநாடு. அந்நாட்டில் செல்லும் வளமிக்க காவிரியாற்றின் கீழ்க்கரையில் விளங்குவது கீழ்கரையரையநாடு. கீழ்கரையரையநாட்டில் காவிரிக் கரையிலுள்ள சோழ சிரோமணியையடுத்துக் கிழக்கே நான்கு கல் தொலைவில் உள்ளது கபிலைமலை. இது விற்கிரி, கபிலாசலம், கபிலமலை என்னும் வேறு பெயர்களுடையது. கபிலைமலை நாமக்கல் வட்டத்தைச் சார்ந்து விளங்குவது. இம்மலைக்கு விற்கிரியென்பது முன்பு வழங்கிய பெயர்.

கருவை என்னும் ஊரில் கபிலை என்னும் காராம் பசுவொன்று பிறந்து நன்ருக வாழ்ந்து வந்தது. பின்பு அங்கு மழை பெய்யாமையால் பசும்புல்லின்தலை காண்பதும் அரிதாயிற்று. மேய்ச்சலுக்குரிய புல் கிடைக்காமையால் நெடுநாளாகப் பசியால் வருந்திய அக்கபிலைப்பசு மேய்ச்சலின் பொருட்டு விற்கிரி யென்னும் பிஞகமலையை யடைந்தது. அம்மலையில் கடும் பசியால் வருந்திய கொடும்புலி யொன்று காராம் பசுவைப் பற்றியது. அப்பசுவின் துயரத்தைக்கண்ட கடும்புலி அம்மலைவாழ் தெய்வத்தின் அருளால் இரக்கமுற்று அப்பசுவை விட்டது. அப்பசு பகலெல்லாம் அம்மலையில் மேய்ந்து இரவெல்லாம்

அம்மலையையடுத்த ஊரொன்றில் தங்கிக் கழித்து முடிவில் உயர்பதம் பெற்றது. ஆதலினுல் கபிலையின் சம்பந்தத்தைப் பெற்ற மலைக்குக் கபிலைமலை யென்றும், ஊருக்குக் கபிலைக்குறிச்சி யென்றும் பெயருண்டாயிற்று என்பது பழைய வரலாறு. கபிலைமலைக் கோவை 104-வது செய்யுளில் இவ்வரலாறு தெரிகின்றது.

இதற்குள்ள வடமொழித் தல புராண மொன்று இம் மலையில் கபில முனிவர் என்பவர் பெரு வேள்வி செய்து பின் தவம்புரிந்து வாழ்ந்தனரென்று கூறுகின்றது. கபில முனிவர் பேறு பெற்ற மலையாகலின் அது கபிலாசலம் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவது அத்தல புராணம். அங்குக் கபிலர் பெயரால் வழங்கும் கபில தீர்த்தமும் மலையுச்சியில் கபிலக் கல்லும் உண்டு.

"நன்ரு" வென்னும் பெயர் :

கபிலரென்னும் கடைச்சங்கப் புலவர் செல்வக் கடுங்கோவாழியாதன் என்னும் சேர மன்னனிடம் நூருயிரங்காணம்பொன்னும் நாடும் பெற்றபின் அந்தணராகலின் அம்மலையில் தங்கிப் பெரு வேள்வி செய்து வாழ்ந்திருக்கலாம் என்றும், அச்சேரமன்னன் கபிலருக்குக் கொடுத்த நாட்டைக் காட்ட ஏறிநின்ற நன்ருவென்னும் குன்றம் நல்ல ஆவாகிற கபிலைப் பசுவாற் பெயர் பெற்ற இக்கபிலைக் குன்றமேயாகலாம் என்றும் தோன்றுகிறது. இவ்வாறு தோன்றுவதற்கு இடமாயிருப்பது கபிலைமலையை யடுத்து விளங்கும் ஆறுநாட்டான் மலையில் கடுங்கோ வாழியாதன் என்னும் சேரலாதன் கல்வெட்டமைந்திருப் பதும், பதிற்றுப் பத்து என்னும் சங்கநூலின் ஏழாம் பத்தினிறுதியில் செல்வக் கீடுங்கோ வாழியாதன் என்னும் சேர மன்னன் கபிலர் பாடிய பத்துப் பாடல்களையும் கேட்டு மகிழ்ந்து "சிறுபுறமென நூருயிரங் காணங் கொடுத்து, நன்ருவென்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடெல்லாம் காட்டிக்கொடுத்தான் அக்கோ" எனக் கூறப்பட்டிருப்பதுமாம்.

மற்றும் இம்மலை இயல்பான செந்நிறமுடையதாகலின் கபிலமலையெனப் பெயர்பெற்றதெனக் கூறலுமாம். கபிலம்—செந்நிறம். பரிபாடல் 3-ம் பாட்டில் பதினொரு உருத்திரரைப் "பதினொரு கபிலரும்" என்று கூறியிருப் பதும் அதற்குப் பரிமேலழகர், உருத்திரரைக் கபில ரென்றார், அவர் செய்யராகலின் என உரைத்திருப்பதும் ஈண்டு நோக்கியறிதற்குரியன. இத்தலத்திலுள்ள கோவில் மிகவும் பழமையானது. கல்வெட்டுகள் சிதைந்து விட்டன.

கபில மலையில் குழந்தைக்குமாரரைக் குலதெய்வமாகக் கொண்டு பல திருப்பணிகள் செய்தவன் அம்மலையை யடுத்த வடகரை யாற்றூரில் வாழ்ந்த அல்லாளன் என்ற புகழ்பொருந்திய திருமலையிளைய நாயகன்; வேட்டுவ குலத்தலைவன் வாளரசன் எனக் கூறப்படுகின்றான். இவன் கலியுக சகாத்தம் 5560-ல் வாழ்ந்தவன். திருச்செங் கோட்டு வேலவருக்குப் பல திருப்பணிகள் செய்தவன். தேவருக்குந் திறம்பாத காவிரியைக் கொங்கேற்றித், திறை கொண்டோன். திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலையில் பாடப்பெற்றோன். மதுரைத் திருமலை நாயகனிடம் அதிகாரம் பெற்றவன். இவனைப் பற்றிய பாடல் ஒன்று கபிலை மலைக் கோவையில் 77 ஆம் செய்யுளாக விளங்கு கின்றது.

மூர்த்திகள் :

இம்மலையிலுள்ள மூர்த்திகள்: சித்திவிநாயகர், காளஹஸ்தீஸ்வரர், கமலாம்பிகை, நடராசர், சிவகாமி யம்மன், மூலஸ்தானம் சுயம்பு மூர்த்தி, குழந்தை வேலாயுதர், உத்சவ விக்கிரகம், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர், வீரவாகுதேவர், சூலதேவர், விநாயகர், நவக்கிரகம், சண்டிகேஸ்வரர், தட்சிணாமூர்த்தி, மலையுச்சியில் உச்சிவிநாயகர், கபிலக்கல், வழியிறக் கத்தில் இடும்பன் என்பன.

தீர்த்தம் :

இம்மலைக்குரிய தீர்த்தங்கள்: மலையுச்சி கபில தீர்த்தம், வடபுறம் பிரமதீர்த்தம், கிழபுறம் சரவணப் பொய்கை, தென்புறம் சண்முக தீர்த்தம், மேல்புறம் பால் தீர்த்தம் காவிரியாறு.

தல விருட்சம் :

தல விருட்சம் :— நாவல்மரம்.

கோவையிலக்கணம்

தமிழ் மொழிக்குரிய எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் ஐவகையிலக்கணங்களுள் ஒன்ருகிய பொருளிலக்கண நூல் களவு, கற்பு என்னும் இருவகைத் தமிழர் மணமுறைகளின் இலக்கணங் கூறுவ தாகும். தொல்காப்பியமென்னும் இலக்கண நூலின் வழியாக விரித்துச் செய்யப்பெற்றது நம்பியகப் பொருள் என்னும் இலக்கண நூலாகும். அவ்விலக்கண நூலுக்குச் சிறந்த இலக்கியமாகத் திகழ்வன கற்றுவல்ல புலவர்களாற் செய்யப்பெற்ற கோவை நூல்களாம். அவை தஞ்சை வாணன் கோவை முதலிய நூல்களாகும்.

இன்பத்தைப் பொருளாகக் கூறும் நூல்களில் தலைமை யுடையது அகப்பொருட் கோவையாம். இஃது அகப் பொருளுக்குரிய காட்சி முதலிய துறைகளைக் கோவைப் படக் கோத்துச் சொல்லுதலின் அகப்பொருட்கோவை யெனப் பெயர் பெற்றது. இது நானூறு கட்டளைக் கலித் துறைகளாற் பாடப்பெறும்.

"கலித்துறை நானூருய், அடுப்பதகப் பொருட்கோவை நாமமன்றே"

(சிதம்பரப்பாட்டியல் — மரபியல் — 3)

"ஆய்ந்த கலித்துறை நானூறகப்பொருள்மேல்
வாய்ந்த நற்கோவையாம்"

(வச்சணந்திமாலை செய்யுளியல் — 15)

கோவை நானூற்றுக் கோவையெனவும் பெயர் பெறும். நூறு செய்யுட்களிற் பாடப்பெற்ற கோவை நூல்களும் உண்டு. அவை நூற்றுக்கோவையெனப் பெயர் பெறும். அவை மல்லைக் கோவை முதலியனவாம். நூற்றுக்கோவையில் வருக்கக்கோவையுமொன்று. இது வருக்கமாலையெனவும் பெயர் பெறும்.

அகரமுதலாகிய மொழிக்கு முதலில் வரும் வருக்க எழுத்தினை ஒவ்வொரு கட்டளைக் கலித்துறையின் முதலில் வரும்படி அகப்பொருள்துறையமைய நூறு செய்யுட் பாடுவது.

> "மொழிக்கு முதலாகிய எழுத்துக்கெல்லாம்
> வருக்கமுரைப்பது வருக்கமாலை"
>
> (பன்னிரு பாட்டியல் — 89)

உயிர் வருக்கமும் உயிர்மெய் வருக்கமும் முதலில் அமையப் பாடப்பெற்ற கோவை நூல்கள் பாம்பலங்காரர் வருக்கக்கோவை முதலியனவாம். அவற்றுள் ஒன்று கபிலைமலைக் கோவை. கபிலை மலையில் கோவில் கொண்டருளும் முருகக் கடவுளாகிய குழந்தைக் குமாரரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப் பெற்றது. இதன்கண் கபிலைமலையின் சிறப்பும் அம்மலைமேற் கோவில் கொண்டுள்ள முருகக் கடவுளின் சிறப்பும் நன்கு கூறப்பெற்றுள்ளன. மற்றும் இந்நூலில் கிளவித் தலைவர்களாகிய தலைவன், தலைவி, தோழியாகியோர் கூற்றுக்களும் நன்கு அமையக் கூறப்பெற்றுள்ளன. அகப்பொருள் நூலாதலின் இதன்கண் சொல் நிகழ்த்தும் கிளவித் தலைவரின் பெயர்கள் கூறப்பெறவில்லை.

அகப் பொருள்

உலகிலுள்ள யாவரும் இன்பத்தை விரும்புகின்றனர். இன்பத்தை விரும்பாதவர் யாருமில்லை. இன்பம் பல திறப்படும். இன்பத்திற் சிறப்புடையதாகப் போற்றப்

படுவது காதலின்பம். காதலின்பம் ஒரே காலத்தில் ஒரு பொருளால் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடையது. ஆதலின் அதுவே இன்பமெனக் கொள்ளத்தக்கதாயிற்று.

காதலின்பமாவது முன்பு மெய்யுற்றறியாத ஒருவனும் ஒருத்தியும் ஊழ்வகையால் ஓரிடத்தே எதிர்ப்பட்டுப் புணர்ச்சி வேட்கை யுடையவராய்த் தம்முட் கூடி ஐம்புலன் களும் ஆரத்துய்க்கும் இன்பமாம். புணர்ச்சி வேட்கையின் மேலெல்லை காதல். அக்காதல் வேட்கையால் நிகழும் புணர்ச்சியால் பெறுவது இன்பம்.

"காதல் புணர்ச்சியைப் புலமெனக் கொண்ட
விருப்பின் விறு வேறுபாடாகுமென்பர்"
"நலங்கெழுமைம் புலநுகர்ச்சியதின்பே"

(அணியியல் விளக்கம் சுவைப்படலம் — 16)

இவ்வின்பம், மக்கள் இம்மையில் அடைதற்குரிய உறுதிப் பொருள்கள் மூன்றனுள் ஒன்றாகப் போற்றப் படுவது. மறுமையில் பெறும் வீட்டின்பம் போல இம்மை யில் பெறுவது மகளிரின்பமாம்.

"தாம்வீழ்வார் மென்றோட்டுயிலிளிதுகொல்
தாமரைக் கண்ணானுலகு"

என்பது குறள்.

இவ்வின்பம் இவ்வாறிருந்ததென்று புறத்தார்க்குப் புலனுமாறு கூறப்பெறாததாய்க் காதலர்களின் உள்ளமாகிய அகத்தே நிகழ்வதாதலின் அகமெனப் பெயர்பெற்றது.

"அகமெனப்படுவது வகையொரு மூன்றனுள்
இன்பமென்னுமியல் பிற்றாகி
யகத்து நிகழொழுக்கமாதல் வேண்டும்"

(இலக்கண விளக்கம் — அகத்திணையியல் — 3)

அறம் பொருளின்பமென்னும் மூன்றனுள் அறமும், பொருளும் புறத்தார்க்குப் புலனாகுமாறு புரியப்படுதலின் புறப்பொருள் என்றும், இன்பம் அகத்து நிகழ் பொருளா தலின் அகப்பொருள் என்றும் கூறப்படும்.

"புறமக மிருவகைத் துணையுறுஞ் செயலே
புறமது காட்சி யகமது காமம்"

(வரிநூல் — 39 — 40.)

உலக மொழிகளில் தமிழ் மொழி இனிமையானது போலத் தமிழ் மொழியில் மிகவும் இனிமையானது இவ்வகப் பொருளாம்.

"அன்பினைந்திணை யென்றறுபது சூத்திரங்
கடலமுதெடுத்துக் கரையில் வைத்ததுபோல்
பரப்பின்றமிழ்ச்சுவை திரட்டி மற்றவர்க்குத்
தெளிதரக்கொடுத்த தென்றமிழ்க் கடவுள்"

(கல்லாடம்)

"ஐந்திணை வழுவாதகப் பொருளமுதினை"

(கல்லாடம்)

"மலர்தலை யுலகத்துப் புலவோராய்ந்த
அருந்தமிழகப் பொருள்"

(நம்பி — அகப்பொருள் அகத்திணையியல் — 1)

"தள்ளாப் பொருளியல் பிற்றண்டமிழ்"

(பரிபாடல் — 9)

"இன்றமிழியற்கையின்பம்"

(சிந்தாமணி 2063)

"இனிய தமிழ்கூறிய இயற்கைப் புணர்ச்சியாகிய
இன்பத்தை"

(நச்சினார்க்கினியருரை — சிந்தாமணி — 2063)

அகப்பொருள் தமிழ் நூல்களில் கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என ஏழு வகையாக விரித்துக் கூறப் பெறும்.

"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக்கிளந்த எழுதிணையென்ப"

(தொல்காப்பியம் — அகத்திணையியல் — 1)

"கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
ஐந்திணை நடுவணகத்திணை யென்ப"

(வரிநூல் — 3)

"மலர்தலை யுலகத்துப் புலவோராய்ந்த
அருந்தமிழகப் பொருள் கைக்கிளை யைந்திணை
பெருந்திணை யெனவெழு பெற்றித்தாகும்"

(நம்பியகப்பொருள் — அகத்திணையியல் — 1)

இவற்றுள் கைக்கிளை என்பது தலைவன் தலைவியருள் ஒருவரிடத்தே நிகழும் அன்பு; ஐந்திணை என்பது தலைவனும் தலைவியும் ஒத்த அன்புடையவராய்க் கூடுதல்; பெருந்திணையென்பது தலைவன் தலைவியரிடத்தே பொருந் தாத கூட்டம். அகப்பொருள் கூறும் ஏழுவகையான திணை களில் ஐந்திணையே மிகவும் சிறந்தது.

"அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி"

என்பர் — கம்பநாடர்.

"அளவிலின்பத் தைந்திணை மருங்கின்"

என்பர் — நம்பி.

ஐந்திணை யாவன குறிஞ்சித்திணை, பாலைத்திணை, முல்லைத் திணை, மருதத்திணை, நெய்தல்திணை, என்பனவாம்.

"குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெய்தல் ஐந்திணைக் கெய்திய பெயரே"

(நம்பி — அகத்திணையியல் — 5)

திணை என்பது ஒழுக்கமாம். குறிஞ்சிக்குப் புணர்ச்சியும் பாலைக்குப் பிரிதலும், முல்லைக்கு இருத்தலும், மருதத்துக்கு ஊடலும், நெய்தலுக்கு இரங்கலும் உரிமையுடைய ஒழுக்கங்களாகக் கூறுவர்.

"குறிஞ்சியே புணர்ச்சி, முல்லையே யிருத்தல்
மருதமே யூடல், நெய்தலே யிரங்கல்
பாலையே பிரிவு பழையவர் கூற்றே"

(கூத்து — வரிநூல் — 52.)

"போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சேரூட லணிமருதம் — நோக்குங்கால்
இல்லிருக்கை முல்லை யிரங்கல் நறுநெய்தல்"

என்பது பழம் பாடல்

புணர்தல் முதலாகிய அகத்திணை யொழுக்கங்களைக்குறிஞ்சி முதலிய நிலவகையாற் கூறியதற்குரிய காரணம் புலப்படவில்லை. அவ்வந்நிலங்களுக்கு அவ்வவ்வொழுக்கம் சிறந்தன என்பது பற்றிக் கூறினர் போலும்.

“ எந்நிலத்துள்ளும் புணர்ச்சி மன்னும்
என்னினுந் திணைதிணைக்கேற்ற முடைத்தே
ஐந்திணை நெறியா மென்மனாரறிஞர் ”

(வரிநூல் — 5)

தம்முள் ஒப்புமையுடைய தலைவனும் தலைவியும் ஊழ்வகையால் எதிர்ப்பட்டுப் பிறரறியாதபடி கூடுவது களவு எனப்படும். இக்களவில் நிகழ்வது புணர்தல். களவின்பின் மணஞ் செய்துகொண்டு இல்லறம் நிகழ்த்துங் கற்பொழுக்கத்தில் பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல்கள் நிகழ்வனவாகும்.

களவு கற்பு என்னும் இருவகைத் தமிழ் நெறிகளில் முன்பு நிகழும் களவினையே மிகவும் சிறப்புடையதாகத் தமிழ் நூல்கள் போற்றிக் கூறும். “ அகத்திணைச் சிறப்புக் களவேயாமால் ” (வரிநூல் — 48)

முன்பு மெய்யுற்றறியாதாரிருவரும் ஒத்து அன்பு கொண்டு ஊழ்வகையால் எதிர்ப்பட்டுக் கூடி முதன் முதலிற் புணரும் புணர்ச்சி மிகுந்த இன்பந்தருவதாகலின் அதனைச் சிறப்புடையதாகக் கூறினர்.

“ நான் மறைவிரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவிர்! கேண்மின்! சிறந்தது
காதற் காமங் காமத்துச் சிறந்தது
விருப்போ ரொத்து மெய்யுறு புணர்ச்சி ”

(பரிபாடல் — 9 — அடி·— 12-15)

என்பர் ஆகலின். பின்பு நிகழும் அன்பு ஒவ்வாத கற்பிற் புணர்ச்சி, தலைவன் பிரிவினால் தலைவியினிடத்தே நிகழும் ஊடலால் இன்பந் தருவது.

"புலத்தலிற் சிறந்தது கற்பே"

(பரிபாடல் — 9 — 17)

ஆகலின் கற்பிற் புணர்ச்சியை இரண்டாவதாகவே கருதுவர்.

ஆசிரியர் நல்லந்துவனுர் வையை யாற்றைப் பற்றித் தாம் பாடிய பரிபாடல் 11-ம் பாட்டில், வையையாறு தாம் பிறந்த மலையை விட்டுத் தன் கணவனுகிய கடலை நோக்கிச் செல்லுவதற்கு முறையே அன்பிற் சிறந்த களவொழுக்கத்தை விட்டு அதனிற் சிறிய கற்பொழுக்கத்தை மேற்கொள்வதை உவமை கூறியுள்ளார்.

மாமயில் அன்னுர் மறையிற் புணர்மைந்தர்
காமம் களவிட்டுக் கைகொள் கற்புற்றெனை
மல்லல் புனல்வையை மாமலை விட்டிருத்தல்
இல்லத்து நீ தனிச்சேரல்! இளிவரல்,
எனவாங்கு"

இவ்வடிகளில் களவினைக் காமம் களவு என்றும், கற்பினைக் கைகொள் கற்பு என்றும், கூறி முடிவில் இல்லத்து நீ தனிச் சேரல் இளிவரல் என்றும் கூறினர்.

அரும்பத உரை:—

காமம் களவு — அன்பு நிறைந்த களவொழுக்கம்; கைகொள்கற்பு — சிறிய கற்பொழுக்கம்; இளிவரல் — இழிவு.

பரிமேலழகருரை:

மைந்தரைக் களவொழுக்கத்தில் கூடும் சிறந்த மயில் போன்ற சாயலையுடைய பெண்கள் காமத்தினையுடைய அக்களவொழுக்கத்தினைக் கைவிட்டுச் சிறிய கற்பொழுக்கத்தினை மேற்கொண்டாற்போல, மிக்க நீரினையுடைய வையையே! நீ பிறந்த இடமாகிய பெரிய மலையினை விட்டு நின் தலைவனுகிய கடலின் வீட்டில் இருத்தற்காகத் தனியே செல்வது இழிவாகும் என்று கூறுவர். மற்றும், இறையனுர் களவியற் சூத்திரவுரையில், "சிறப்பினுற் பெயர் பெற்றது

களவியல் என்பது, என்னை? களவு கற்பு என்னும் கைகோள் இரண்டனுள், களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன்'' எனவும், ''களவு சிறப் புடைத்து சுவர்க்கம், வீடுபேறுகளை முடிக்குமாகலான்'' எனவும் கூறியதும் கற்பின் மேம்பட்டது களவு என்பதை விளக்குவதாகும்.

தம்முள் ஒத்த குலமும் நலமுமுடைய தலைமக்கள் ஊழ் வகையாய் எதிர்ப்பட்டுக் கூடுங் கூட்டமாகலினாலும் பின்னர் மணம் செய்துகொண்டு இல்லற நிகழ்த்துதற் கேதுவாகலினாலும், வேதத்துட் கூறப்பட்டதாகலினாலும் இக்களவினை, ''அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கிற், காமக் கூட்டம்,'' என்று தொல்காப்பியனாரும், (தொல்— களவு) உளமலி—காதற்களவு—என்று நாற்கவிரா நம்பியும், சிறப்பிப்பர். தலைமக்களுடைய பேரன்பின் மேலெல்லையில் நிகழும் களவொழுக்கம், பின்னர்க் கற்பொழுக்கத்திலும் அன்பினாற் சிறந்து விளங்குவதாகும். ஆதல் பற்றியே ஆலவாயிறைவர் தாம் அருளிய களவி யலில், ''அன்பினைந்திணைக் களவு'' என்று முதற் சூத்தி ரத்திலும், ''களவு கற்பெனக் கண்ணியவிண்டையோர், உளநிகழன்பின் உயர்ச்சிமேன'' என்று இறுதிச் சூத்தி ரத்திலும் கூறுவாராயினர். தலைமக்களிடம் களவில் நிகழும் அன்பே பின்னர் வளர்ச்சியுற்று ஏனைய உயிர்க ளிடத்தும், கடவுளரிடத்தும் சென்று பயன் விளைவிப்ப தாகும். இவ்விதச் சிறப்புடைமை பற்றியே இறையனார் தாம் அருளிய அகப்பொருளிலக்கண நூலுக்குக் களவியல் என்று பெயரமைத்தனர். இக் களவின் தூய்மையும், மேன் மையும் விளங்கும்படி கபிலர் குறிஞ்சிப் பாட்டுப்பாடினர்.

தமிழ் நூல்களிற் சிறப்பாகப் போற்றப்பெறும் இக்கள வொழுக்கம், ஆரிய வேதத்திற் கூறப்பெற்ற பிரமம், பிரசா பத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக் கதம், பைசாசம் என்னும் எண்வகை மணங்களில் யாழோர் கூட்டமென்னும் காந்தருவத்தோ டொத்ததென்பர்.

" இன்பமும் பொருளு மறனுமென்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங்காலை
மறையோர் தேத்து மன்றலெட்டனுள்
துறையமை நல்யாழ்த்துணை மையோ ரியல்பே "

(தொல்-களவியல்-1)

" உளமலி காதற்கள வெனப்படுவது
ஒருநான்கு வேதத்திருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத்தியல்பின தென்பர் "

(நம்பி களவியல்-1)

எண் வகை மணத்திற் காந்தருவ மொழிய நின்ற எழு வகை மணங்களில் ஆசுரம், இராக்கதம், பைசாசமென்னும் மூன்றனையும் கைக்கிளையுள்ளும் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம் தெய்வமென்னும் நான்கனையும் பெருந்திணையுள்ளும் அடக்கிக் கூறினர் தொல்காப்பியனார்.

" முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே
பின்னர் நான்கும் பெருந்திணைபெறுமே "

(தொல் களவியல் —14-15)

பொருளிலக்கணமுணர்ந்த புலமையோரால் போற்றுதற்குரியது களவு. 'தள்ளாப் பொருளியல் பிற்றண்டமிழாய் வந்திலார், கொள்ளாரிக்குன்று பயன்' (பரிபாடல்-9) கூறுவதனாலும், அப்பாடலுரையுள் இனி " அக்களவிற்புணர்ச்சியையுடைமையால் வள்ளி சிறந்தவாறும், அத்தமிழையாய்ந்தமையால் முருகன் சிறந்தவாறும் கூறுகின்றார் " எனப் பரிமேலழகர் கூறியதும் ஈண்டு அறிதற்குரியது.

இக்களவுப்புணர்ச்சி ஒருவன் பல பெண்டிரையும் ஒருத்தி பல ஆடவரையும் காமவேட்கையால் விலங்குகள் புணர்வது போல் புணரும் காமப்புணர்ச்சியன்று. ஒருவன் ஒருத்தியையும், ஒருத்தி ஒருவனையும் அன்பின் மிகுதியால் உள்ளத்தாற்புணர்ந்து உடம்பாற் புணரும் சிறந்த காதற் புணர்ச்சியாம், இதுவே இன்பந்தரும் புணர்ச்சி. இது பேரின்பத்தையுணர்த்துவதோர் இன்பமாம், " மற்று

உலகத்துக் களவாயினவெல்லாம் கை குறைப்பவும், கண் தூலவும் கழுவேற்றவும்பட்டு பழியும், பாவமும் ஆக்கி நரகத் தொடக்கத்தீக்கதியிலுய்க்கும். இது மேன் மக்களாற் புகழப்பட்டு ஞானவொழுக்கத்தோடொத்த இயல்பிற்ருக லானும் பழிபாவம் இன்மையாகலானும் எனப்படுவ தென்று விசேடிக்கப்பட்டது'' என்று களவியலுரை ஆசிரியர் நக்கீரர் கூறுமாற்ருனறிக.

இல்லறத்தின் பயன் — வீடுபேறு

சிறப்பித்தோதப்பெற்ற யாழோர் கூட்ட மென்னும் களவின் வழியாக மணந்து இல்லற மென்னும் நல்லறஞ் செய்யாநின்ற தலைமக்கள் இருவரும் தாம் வெறுக்கு மளவும் காமவின்பம் துய்த்துப் புதல்வரைப் பயந்து மகிழ்ந்து முதுமைப் பருவம் வந்தெய்தியவுடன் தமது உறவுச் சுற்றத்தவருடன் கூடித் துறவறத்தை மேற் கொண்டு மனம் பொறிவழி போகாது தவத்தினை மேற் கொண்டுமெய்யுணர்வெய்தி வீடு பேறெய்துவர். இதுவே தொல்காப்பியர் முதலாகிய நல்லாசிரியருடைய கருத்தாகும்.

> "காமஞ்சான்ற கடைக்கோட் காலை
> ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
> அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
> சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

(தொல் — கற்பியல் 51)

சிறந்தது—தவம்; இறந்தது—கடந்துபோனது; இல்லற வாழ்க்கை :

இதனுல் இல்லறத்தில் நின்று அனுபவமிக்க தலைவனும் தலைவியும் அதனில் வெறுப்பு வருங்கால் தாம் அனுபவித்த இன்பத்தினும் சிறந்த பேரின்பத்தை நாடி வானப் பிரத்த சந்யாச நிலைகளை மேற்கொள்வர் என்பதை ஆசிரியர் தொல்காப்பியனுர் அறிவித்தாராயிற்று.

1784

"மக்களோடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காமத்து வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியும் தம்பதிநீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங்காப்ப"
(நம்பி அகப்பொருள் — அகத்திணையியல் — 116)

நூற்சுருக்கம்:

இந்நூல் காப்புச் செய்யுள் முதலாக 105 செய்யுட்களைக் கொண்டது.

இதன்கண் தம்முள் ஒத்த சிறப்பினையுடைய ஒருவனும் ஒருத்தியும் ஊழ்வகையால் கபில மலைச் சோலையின்கண் பிறரறியாது எதிர்ப்பட்டுக் கூடியின்பமுறுதலும், பின்னர்ப் பாங்கன் உதவியினாலும் பாங்கியின் உதவியாலும் அக் கூட்டம் நீடிக்கப் பெறுதலும், சில நாட்களின் பின்பு இருவரும் மணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தலும், தலைவன் பொருளீட்டல் முதலிய காரணங்கட்காகத் தலைவியைப் பிரிதலும், பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் தலைவியைக் கூடியின்புறுதலும், தலைவி மகப்பேறு பெறு தலும், தலைவன் மகவினைக் கண்டு மகிழ்தலும், தலைவனும் தலைவியும் மதனும் இரதியும் போல் மகிழ்வுடன் கூடி யிருந்து அரசாட்சி புரிதலும், பின்பு துறவறஞ் சேர்தலு மாகிய செய்திகள் கூறப்பெற்றுள்ளன.

பின்புள்ள மூன்று செய்யுட்களில் முறையே நூற் பயனும் ஆசிரியர் வரலாறு தெரிவிக்கும் சிறப்புப் பாயிரமும் கபிலமலைத் தலவரலாறும் கூறப்பெற்றுள்ளன.

முருகக் கடவுளும் தமிழும்:

முருகன் தமிழ்க் கடவுள். அவன் தமிழ் நாட்டில் படைவீடு கொண்டு விளங்குகின்றான். அகத்தியனாருக்குத் தமிழிலக்கணம் கற்பித்தவன், தமிழ்ச் சங்கப் புலவன். தமிழை ஆராய்ந்தவன், தமிழ்ப் பாடலைப் பெரிதும் விரும்பு கின்றவன், தமிழ்மக்களால் மிகவும் போற்றப்படுபவன். திருத்தகு மதுரை தன்னிலிருந்த நற்சங்கந்தன்னில், உருத்திர சன்மனாகி யுற்றிடு நிமலன், இறையனார் களவிய லுரை கேட்டவன்; அவ்வுரையுள் மெய்மையதைத் தெரி

வித்துவன்; தமிழகத்திற் படைவீடு கொண்டு சூரனை யழித்தவன்; தேவரைக் காத்தவன். தமிழிலக்கணம் கூறும் களவு, கற்பு என்னும் பழைய தமிழ்நெறி மரபுகளை விளக்கியவன். அவன் தமிழகத்துள்ள வள்ளிமலைச் சார்பில் களவு நெறியில் வள்ளியை மணந்தான். செந் தமிழ் நாட்டுப் பரங்குன்றில் கற்புமுறையில் இந்திரன் மகளாகிய தெய்வயானையை மணந்தான்.

மாநில வளாகத்துச் சிறந்த மலைநிலமாகிய குறிஞ்சித் திணைக்குரிய கடவுள் முருகனே. குறிப்பாகக் குறிஞ்சித் திணைக்குரிய களவுப் புணர்ச்சியின் ஆரம்பத்தில் தலைமகன் பின்னர் மணஞ் செய்து கொள்வதாகத் தலைவிக்குச் சூளுரை செய்து தரும் கடவுள் முருகன்,

> "அறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
> மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
> தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
> யந்தீந் தெண்ணீர் குடித்தலி னெஞ்சமர்ந்
> தருவிட ரமைந்த களிறுதரு புணர்ச்சி
> வானுரி யுறையுள் வயங்கியோ ரவாவும்
> பூமலி சோலை யப்பகல் கழிப்பி"
>
> (குறிஞ்சிப்பாட்டு — 208 — 214)

முருகக் கடவுள் உருத்திர சன்மன் என்னும் பெய ருடைய மூங்கைப் பிள்ளையாய் மதுரையிலுள்ள கடைச் சங்கத்தில் இருந்து இறையனர் களவியலுரையில் மெய்மை யுரை தெரிவித்த வரலாற்றுச் செய்தி இந்நூலில், "கற்பிக்க மூகையாயிருந்த குழந்தைக் குமாரர்" (21) என்பதனுல் விளங்குகின்றது.

தமிழ் நாட்டுக் கடவுளாய்த் தமிழையாராய்ந்து தமிழரது பழந்தமிழ் மணமுறைப்படி இரு தேவியரை மணந்து தமிழ்க் குன்றமாகிய கபிலைக் குன்றத்தில் குழந்தைக் குமாரராய் வீற்றிருந்து தம்மை வழிபடுவோ ருக்கு இம்மை மறுமைக்குரிய எல்லா நலன்களையும் தந்து கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் வீற்றிருக்கும் முருகக் கடவுள்மீது தமிழ்நெறி மரபு கூறும் ஐந்திணைக்கோவை பாடியது மிகவும் இயைபுடையதே.

நூலாசிரியர்

கபிலைமலைக்கோவை என்னும் அகப்பொருளிலக்கிய நூலைச் சுவைமிகப் பாடியவர் பிள்ளைப் பெருமாள் சிறை மீட்டான் கவிராயர் என்பவர். இவர் பாகை என்னும் நகரத்தில் தோன்றியவர். இவரது காலம் கலியுக சகாத்தம் 4740. இப்பொழுது கலியுக சகாத்தம் 5070. ஆகலின் இற்றைக்கு 330 ஆண்டுகளின் முன்பு வாழ்ந்த வரெனத் தெரிகின்றது. இவர் இயற்றிய வேறு நூல்கள் மல்லைச் சோழீச்சுரக்கோவை, அர்த்தநாரீச்சுரச் சந்திர சேகரமாலை என்பன. இவர் சைவசமயத்தினர். கபிலை மலைக்கோவையிலும், மல்லைக்கோவையிலும், சந்திர சேகரமாலையிலும் உள்ள பாயிரச் செய்யுட்கள் இவரைப்பற்றிக் கூறுவன.

இந்நூலாசிரியரைப்பற்றி அறிவதற்கான வேறுபுறச் சான்றுகளொன்றும் அகப்படவில்லை. இந்நூலின் இயல்பினை நோக்குமிடத்து இந்நூலாசிரியர் பன்னூல் களையும் பயின்று சொல்லினும் பொருளினும் சுவைபடப் பாடும் தெளிந்த புலமையாளரென்று தெரிகின்றது.

இந்நூலின் 77–ஆம் பாடலில் ''அல்லாளன் திருமலை யிளையான் நாயகன்'' என்பவனைக் கூறியிருத்தலின் உபகாரிகளைப் பாராட்டும் பெருங்குணமுடையவர் இந்நூலாசிரியர் என்று தெரிகின்றது. ''எங்கள் கன்ம மகற்றுங் குழந்தைக் குமாரர்'' (83) என்பதனல் இந்நூல் ஆசிரியர் குழந்தைக் குமாரரைக் குலதெய்வமாகக் கொண்டொழுகும் குலத்திற் பிறந்தவரென்று தெரி கின்றது. சிவபெருமானை ''எம்மைக் கண்டர்'' (51) என்பதனல் இவர் சைவ சமயத்தினர் எனத் தெரிகின்றது.

நூலாராய்ச்சி

இந்நூலாசிரியர் தல விநாயகராகிய கபிலையின் மேவும் இப முகத்தோனுக்குக் காப்புக் கூறி இந்நூலைத் தொடங்குகின்ருர். இந்நூலின் பாட்டுடைத் தலைவனுகிய

முருகக் கடவுளை "ஞானக் குழந்தைக் குமாரர்" என்றும் அவர் பூமியின் மேல் முற்றுந் துறந்த முனிவர்களாலும், தேவர்களாலும், அரசர்களாலும் துதிக்கப்படுபவர் என்றும் கூறுகின்றார்.

அவர் சிவக்குமாரர் என்பதனை 'அரன் காதலரான குழந்தைக் குமாரர்' (75) 'காமாரி தந்த குழந்தைக் குமாரர்' (70), 'கடுவுணி சேயர்' (59) என்பனவற்றாலும், பார்வதி தந்த புதல்வர் என்பதனை 'அத்தர் பங்கின் கவுரிதன் பாலர்' (36), 'சங்கரிதன் கரத்திற் குழந்தைக் குமாரர்' (47) என்பனவற்றாலும், விநாயகருக்கு இளையவர் என்பதனை 'வரமீந்தருளுங் கரிமுகர் பின்னர்' (25) என்பதனாலும், அவர் தெய்வயானையின் கணவர் என்பதனை 'தெய்வத் தந்திதன் பங்கரான குழந்தைக் குமாரர்' (65), 'வானவரிறைதன் புதல்வி தெய்வ வாரண மங்கை கேள்வர்' (33) என்பனவற்றாலும், வள்ளி கணவர் என்பதனை 'குறப்பூங் கொடிதன் காதற் பிரியர்' (16), என்பதனாலும் 'திருமால் மருகனார் என்பதனைப்' 'பொழில் கொண்ட வண்ணக் கருமால் மருகர்', (81) 'பையாருங் கட் செவி மேற்கண் வளரும் பரன்றிகிரிக் கையார் மருகர்' (85) என்பனவற்றாலும், மன்மதனுக்கு மைத்துனர் என்பதனை 'பொருவிற் காமன்ற னத்தர்' என்பதனாலும் அறிய வைக்கின்றார்.

2. தலம் :-

கொங்கில் காவிரி நதியை யடுத்து விளங்குகின்ற தென்பதனைக் 'காவேரி சூழும் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பு' என்பதனாலும், அம்மலை சோலைகளாற் சூழப் பட்டுள்ளது என்பதனைத் 'துவலையதாகக் கனிதேன் மலர் சொரி சோலை சுற்றுங் கபிலை (காப்பு)' 'பூங்கா விறை மேவுங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பு (2)' 'காவாசம் வீசும் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பு' (4) என்பவற்றாலும், அது தென்றல் வீசும் மலை என்பதனை 'மலையக்கால் நாளும் வீசும் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பு' (14)

என்பதனுலும், அம்மலையில் வண்டுகள் பாடிக்கொண் டிருக்கும் என்பதனைப் 'பண்முகாரியை நேர்கக வளிபாடும் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பு' (39) என்பதனுலும் அம்மலையில் வேதமோதுதலும் காவியம் படித்தலும் இடையருது நிகழ்ந்திருக்கும் என்பதனை ''மூன்னூற் காவியமோதுங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பு' (46) என்பதனுலும் அம்மலையில் உள்ள சோலையில் மயில் ஆடுதலும் சுரும்பு பாடுதலும் பறவைகள் ஓம் என ஒலி யெழுப்புதலும் இடையருது நிகழ்வதால் அது கூத்தியர் கூத்தாடும் நாட்டிய சாலை போன்றிருத்தலைத் 'தொடிக்கச் சியர் ... ... இருந்தனளே' (50) என்பதனுலும், அம் மலையைச் சூழ வாழைத் தோட்டங்கள் சூழ்ந்திருக்கு மென் பதனை அரம்பையங் காடக மேவும் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பு' (30), என்பதனுலும் புலப்படுத்துகின்ருர். அது வானுலகிலுள்ள பஞ்சதருக்களும் ஏழு மேகங்களும் நெருங்கி வசிக்கும் மலை என்பதனை 'ஐந்தருவும் எழு காருஞ் செறியுங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பு' (56) என்பதனுலும் அறிய வைக்கின்ருர்.

தலச் செய்திகள் :-

அத்தலத்தில் நாள்தோறும் தென்றல் காற்று குழந்தைக் குமாரரை வழிபட்டுக் கொண்டிருக்குமென்பது தலவரலாறு. இதனைத் ''தென்றல் காற்றுப் பரவும் குழந்தைக் குமாரர்''(99) என்பதனல் அறிவிக்கின்ருர். இன்றும் மூலத்தானத்திலுள்ள துவார மொன்றில் தென்றல் அங்குள்ள விளக்கினை அசைத்துக் கொண்டு இருத்தல் கண்கூடு.

அம்மலைக்கு முன்பு வழங்கிய பெயர் விற்கிரி என் பதும் அங்கு மேய்ந்து கொண்டிருந்த கருவை நகரிற் பிறந்த கபிலைப் பசு கடும்புலியின் வாயிலகப்பட்டு அம் மலைத் தெய்வத்தினருளால் விடுபட்டுத் தப்பி வாழ்ந்தமை யால் அம்மலைக்குக் கபிலைமலை என்பதும், அப்பசு தோன்றி வாழ்ந்த கருவைப்பதிக்குக் கபிலைக் குறிச்சி

யென்ற பெயருண்டாயது என்பதும் தல வரலாற்றுச் செய்திகள் ஆகும். இச்செய்திகள் 'கருவைப்பதியில் ... ... பெயர் பெற்றீதே' 104 என்னும் பாடலாலும் தெரிய வைக்கின்ருர்.

தீர்த்தம் :-

கபிலை மலைக்குரிய நதி காவேரி நதியாம் என்பதனை 23-ஆம் செய்யுளால் அறிய வைத்த ஆசிரியர், அம்மலை உச்சியிலும், அதன் சரிவுகளிலும் உள்ள கபிலை தீர்த்தம் முதலான தீர்த்தங்களைத் ''தடந்தோறும் வண்டு காம்போதி பாடுங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பு'' (90) என்னும் அடியிலுள்ள ''தடந்தோறும்'' என்பதனுல் அறிய வைக்கின்ருர்.

குழந்தைக் குமாரர் சிறப்புக்கள்

'சகந்தாங்க வச்ரக் கம்பமதான குழந்தைக் குமாரர்' (1)

'அரும்புவியாள் காவல ரேத்துங் குழந்தைக் குமாரர்' (20)

'கலையாய் பவரெண் குழந்தைக் குமாரர்' (22)

'காரிற் சிறந்த குழந்தைக் குமாரர்' (28)

'முப்பொருளு மிசை கற்றவர் போற்றுங் குழந்தைக் குமாரர்' (29)

'ஊழ்வினையைக் கருகும்படிசெய் குழந்தைக் குமாரர்' (34)

'தென்றல் வீச மணங்கமழுலகாள் பவர்' (38)

'எழுமைப் பிறப்பாங் கருமாலை நீக்குங் குழந்தைக் குமாரர்' (43)

'வெண்ணீ றுலகிற் காட்டிய வேலர்' (44)

'காமிஞ்சு சோலைக் குழந்தைக் குமாரர்' (54)

'அமரேசற் கென்றுங் கைத்தனமான குழந்தைக் குமாரர்' (55)

'கந்த முயர்த்த குழந்தைக் குமாரர்' (61)

'அமரரைக் காக்குங் கருணைக் குழந்தைக் குமாரர்' 63

'அன்பர்தம்பாற் கருணையதான குழந்தைக் குமாரர்' (71)
'அசுரர் கருப்ப மறுக்குங் குழந்தைக் குமாரர்' (74)
'கௌவைத் தவிர்த்த குழந்தைக் குமாரர்' (76)
'உலகைக் காத்தாள வந்த குழந்தைக் குமாரர்' (78)
'பகைஞர் கடற் கழிப்பறவெய்த குழந்தைக் குமாரர்' (88)
'காசினியோ ரெண்குழந்தைக் குமாரர்' (87)
'இமையோர் தமது கௌவைத் தவிர்த்த குழந்தைக் குமாரர்' (89)
'மன்னர் காகளம் பெற்ற குழந்தைக் குமார்' (91)
'காசினி போற்றுங் குழந்தை குமாரர்' (92)
'தொழுதடியார் கருதிய போற்றுங் குழந்தைக் குமாரர்' (94)
'தவம்புவிக்குட் காரணமான குழந்தைக் குமாரர்' (95)
'கொற்றவர் போற்றுங் கபிலைக் குழந்தைக் குமாரர்' (102)
என்பனவற்றால் தெரிவிக்கின்றார்.

மேலும் குமாரக் கடவுளுக்குரிய உருவம், கண், முகம், தோள், கரம், காது, மாலை, அணிபொருள்கள், கொடி, ஊர்தி, படை, வென்றி முதலியவற்றையும் ஆங்காங்கே கூறிச்செல்கின்றனர்.

1. உருவம் :

ஞானவடிவம். 'ஞானக் குழந்தைக் குமாரர்' (42)

2. கண் :

'மலர்ப் பன்னிரண்டு கண்ணார்' (7) கண் பனிரண்டர் (57), மலர்க்கண்ணறிரண்டர் (69), மலர்க் கண்ணான்கு மூவர் (98)

3. காது :

'நவரத்தினமணிக் காதாறிரண்டர்' (68)

4. தோள் கரம் :

'கடிப்பொற் புயத்தர்' (50), 'மலர்க்கையம் புயத்தர்' (49) மலர்ப் பன்னிரண்டு கையம் புயத்தர் (100), 'இரண்டாறு மலர்க்கரவர்' (67)

5. மாலை :

'குவளை குரவங் கடம்பணி மார்பர்' (5), கடப்பர் தொடைசேர் கடியார் புயத்தர் (19), கல்லார மார்பர் (77), அலங்கல் கமழ் பொற்புயத்தர் (89)

6. அணி பொருள்கள் :

'தார்ப்புயத்திற் களபமே சேருங் குழந்தைக் குமாரர்' (5) களபம்-கலவைச் சந்தனம் 'பொற்கலமே புனையுங் குழந்தைக் குமாரர்' (4), 'மார்பிற் பிரகாசப் புரிநூற் குழந்தைக் குமாரர்'(60)

7. படை :

'வேற்கைக் குழந்தைக் குமாரர்' (8), 'வேற்கையார் முருகர்' (9), 'கைக்கானசத்திக் குழந்தைக் குமாரர்' (79)

8. வெற்றி :

'சூரருரங் கௌவிய வேற்கைக் குழந்தைக் குமாரர்' (54), சூரனுடல் காயுஞ் செவ்வேற்கைக் குழந்தைக் குமாரர் (26)

'' நிசிதருயிர் கறக்குங்கை ஞாங்கர் '' (27)

'வெஞ்சூரனிருக்கையை யழிக்குங் குழந்தைக் குமாரர்'(73)

9. கொடி :

'கைக்காலாயுதத்தர்' (32) 'அழகான செங்கட் காலாயுதத்தர்' (58) 'செங்கமலக்கை வாரணத்தர்' (33)

10. ஊர்தி

'பணியைக், கௌவியுண் மஞ்ஞைக் குழந்தைக் குமாரர்' (64)

கந்தபுராண வரலாறுகள் குறிப்பன

'வள்ளிக்காய் வனத்திற் கால்நோவ வந்த குழந்தைக் குமாரர்' (6)
'நண்ணலரைக் காதிப் பொருத குழந்தைக் குமாரர்' (11)
'சங்கரற் கருளைக் கன்னமதிற் சொல் குழந்தைக் குமாரர்' (13)
'வச்சிரக் கையரிருக்க இடமீந்தருள் குழந்தைக் குமாரர்' (24)
'அலையெரியுங் கங்கைதன் செங்கைக் குழந்தைக் குமாரர்' (31)
'அமரரைக் காக்குங் கருணைக் குழந்தைக் குமாரர்' (63)
'சூரனிருக்கையை யழிக்குங் குழந்தைக் குமாரர்' (73)
'உமைமுலைப்பால் கௌவியே யுண்ணுங் குழந்தைக் குமாரர்' (101)
சிவபுராண வரலாறு (41), இராமாயண வரலாறு (3)

உவமைகள் :-

'தனியா மிராமற்கு முன்னீரனுசன் விற்றந்தது போல்' (3)
'ஈவாரைப் போல இரக்கமில்லாதாவாரைப் போல' (4)
'ஐயானனப்பன்னக மணியல்ல கற்றுங்கென' (9)
'உன்கட் செவி போலவும்' (12)
'குருமுயற் கண்ணி வலைகுட் காற்குன்று சிக்குமாறு நிகர்த்தனை' (18)
'சுற்றமுஞ் செல்வமு மாவியு மன்ன' (29)
'பண் முகாரியை நேர்' (39)
'திருமாளிகை தழலாற்றப் பகீரதி தீர்த்தங் கொடு வருமா றெனச் சொலு மாறெக்கும்' (43)
'ஓவியமாவி பெற்றுங் கென' (46)
'தொடிக்கச்சியர் நடமென்ன' (50)
பீதாம்பரனில் (68), 'தீமாரி போல' (70)
'பொழில் கொண்ட வண்ணம்' (81) 'கரிய நெளவல் நறுங்கனி போல்' (93); 'பையம்புயங்க மென' (100)
'எய்யம்பு வேளுமிரதியும் போல' (100)

உருவகம் :-

'சகந்தாங்க வச்சிரக் கழ்பமதான குழந்தைக் குமாரர்'
'பகைஞர் கடல்' (86)
'கையாலங்கண், நுதலிந்திர சாபம், முகம் நிறைமா மதியாகும்' (21)

திருக்குற ளொப்புமை :-

"தூவியனிச்சம் மிதிக்கச் சிவக்கும் துணையடியாள்" (46) என்பது "அனிச்சமும் அன்னத்தின் றூவியுமாதர், அடிக்கு நெருஞ்சிப் பழம்" என்னும் திருக்குறளையும்,

'வெளவியரேனும் மெய் ஞானிகளேனும் பின்மற் றெவர்க்கும் ஒவ்விய போனமிட்டில்லறங் காத்து' (101) என்பது, "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிறந்தார்க்கும் இல்வாழ்வா னென்பான் துணை" என்னும் திருக்குறளையும் நினைவு கூரச்செய்கின்றன.

'வானேக்கி நிற்குஞ் செய்ய புனத்தில்' (62) என்பது "வானேக்கி வாழு முலகெல்லாம்" என்னும் திருக்குறளின் தொடரை நினைவில் வைத்துச் செய்ததாம்.

பிறநூலொப்புமை :

'ஈவாரைப் போல விரங்குமோர் பார்வை யிரக்கமில்லா தாவாரைப் போல வகற்றுமோர் பார்வை' (4) என்பது "இல்லோ ரிரக்க வொன்றியார் மனமுமினி தளிக்க, வல்லோ ரிரக்கமும் போல் நின்றதால்" (3) என்னும் திருச்செங்கோட்டுக் கோவையையும், "இருநோக் கிவளுண்கணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன்றந் நோய் மருந்து" என்னும் திருக்குறளையும்,

'நலமே குலங்குலம் வேறுளதோ சொலு நாரி யர்க்கே'–41 என்பது 'கச்சுத் தடமுலையாய் நலமே குலங் கன்னியர்க்கே' (105) என்னும் குலோத்துங்க சோழன் கோவையடியையும், "குலம்பேசக் கணக்கிலைநீ, மெய்யினெழினலம் பார்ப்பதன்றோ கடன் மெல்லி

யர்க்கே'' (104) என்னும் குற்றாலக் கோவையடியையும், ''கற்றவர்க்கும் நலனிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை யுற்றவர்க்கும், வீரரென்றுயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக், கொற்றவர்க்கு முண்மையான கோதில் ஞானசரிதரா நற்றவர்க்கு மொன்று சாதி நன்மை தீமையில்லையால்'' (வில்லி பாரதம், வாரணாவதச் சருக்கம் 68) பாடலையும் நினைவு கூரச் செய்கின்றது.

''கலைமதிக் கோட்டாலுடைந்து செந்தேனருவி சொரியும் பொழில் மலர்க்கா'' (47) என்பது ''சிலைக்கோடு மேல்வைத்து கோற்றே னுடைந்து செந்தேறல் வயற்றலைக் கோடும்'' (97) ''முயற்கூடு தாக்க விருங்கூடுடையும் முடிச்சிலம்பா'' (79) என்னும் மறைசையந்தாதியடி களையும் நினைவிற் கொள்ளச் செய்கின்றது.

''கீதப்பிரிய மதோ'' (16) என்பது, ''அன்றியே ழிசைச் சூழல் புக்கோ'' என்னும் சிற்றம்பலக்கோவை (20)செய்யுள் தொடரை நினைவிற் கொண்டு செய்தது.

''தொடிக்கச்சியர் நடமென்னவக் கற்பகச் சோலைமயில்
நடிக்கச் சுரும்பிசை பாடப் புள்ளாயம் நலனிதென''50

என்பது ''கடிகமழ் மாங்குயின் முழவாக் கனைவரி வண்டிசை பாடக் கலாவ மஞ்ஞை, நடனவியல் நறுங் காந்தள் கைமதிக்கும் நளிகுடுமி நீலக் குன்றம்'' என்னும் இலிங்கபுராண வடிகளையும்

''படர்ந் தெழுந்த புல் பசுநிறக் கம்பளம் பரப்பிக்
கிடந்த போன்றன கேகயர் தோகைகள் கிளர
மடந்தை மாரென நாடகம் பயின்றெரு நவின்ற
தொடர்ந்து பாணரிற் பாங்கிசை முரல்வன தும்பி''
— கம்பர் — இராம. வனம்புகு 43

பாடலையும் நினைவு கூரச் செய்கின்றது.

''தோகைமாமயிலாடலைச் சோலைவாய், மேக மேனின்று பார்ப்பர் விண்ணோரெலாம்'' என்னும் (திரிகூடவரைப்—13) திருக்குற்றாலப் புராணவடிகளையும் நினைவு கூரச் செய்கின்றன.

"அயிலாய மிஞிறு பாணிசை மிழற்றப் பொதும்பர் தலையசைப்பத் தோகைமயிலாய நடம்புரியும் சிரகிரிச் சாரலின்னவரும்" என்னும் சென்னிமலைப் புராண வடிகளையும் நினைவு கூரச் செய்கின்றது.

"வெண்ணான்கு கோட்டியத் தோள்" (98) என்பது "ஈரிரண்டேந்திய மருப்பி னெழினடைத் தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை" என்னும் திருமுருகாற்றுப்படை யடிகளையும், "இடிக்கைக் குறவர்" (50) என்பதிலுள்ள இடிக்கை யென்பது "செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை" என்னும் திருமுருகாற்றுப்படையடிகளையும் நினைவிற் கொண்டும் "கற்றவர் போற்றும் குழந்தைக் குமாரர்" (29), என்பது "கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க் கரையூரிற் பாண்டிக் கொடுமுடி" என்னும் சுந்தரர் தேவார அடிகளையும் நினைவிற் கொண்டும் கூறியன வாகும்.

பரியாய மொழி:

'வேள்கற்கியே' 62, கடுவுணி 59, தெய்வத்தந்தி தந்தகனி 65, குறப்பூங்கொடி.

தொகை மொழி:

ஐந்தருவும் எழுகாரும் 56, மூவழல் வேள்வி 82, எண்ணான் கிரட்டி கலை 98, பெண்ணான்குகமெனும் 98, நாற்றிக்கும் 99, சதுர்வேதன் 15.

அணிகள் :

தற்குறிப்பேற்றவணி 47, எதிர்நிலையணி—தௌவை யெனச் சதபத்திர மாதைத் தன் தையல் 52.

உயர்வுநவிற்சியணி—உம்பரின் ஓங்கு பூங்கா!
விண்ணூரும் கற்பகப் பூங்கா - 7
விற்பூட்டுப் பொருள்கோளணி 26 - 103

சிலேடை :

1 — செய்யுள் காண்க.

8 — ஆர்கலி - கடல்போன்ற கண்கள், பொருந்திய வறுமைத்துன்பம், இருநிதியம்-பெருஞ்செல்வம், இருதனங்கள்.

17 — மான்கண்ணி - பெண் கண்ணில், மான்வலை.

30 — அரம்பைக் காடகம்-அரம்பை முதலிய தெய்வப் பெண்களின் மிகுந்த கூட்டத்தின் நடுவில், வாழைத் தோட்டத்தின் நடுவில்.

97 — வேடன்படை - வேடராசன் படை, மன்மத பாணம்.

திரிபு மடக்கணிகள் :

திரிபணி — 1, 33 யமகம் — 13

குறி — பெண்ணிற் கிடந்துடித்தல் நன்றென்பது - 51

பழமொழி, நீதி, உலக வழக்கு, மரபு:

பழமொழி :

வார்த்தை நவிலுங்கள் சீனத்தமுதஞ் சிதைந்திடுமோ 37, திருமாளிகைத் தழலாற்றப் பகீரதி தீர்த்தங் கொடு வருமாறு 43

உலக வழக்கு:

சீனத்தமுது, மோனத்தனம்
எண்ணுத கோடி மகாதீர்த்தமாடி யிரும்புவியில்
பண்ணுத பாவம் பலித்தனவோ - 69.
கூற்றுக்கிரையிட்டு-99

நீதி :

" ஔவிய நீக்கிப் புவியாளும் " 12.

" நலமே குலங்குலம் வேறுளதோ சொலும் நாரி யர்க்கே " 41.

" ஆதவர் வாழ்த்த மணஞ்செய்து கூடல் நன்ருட வர்க்கே " 42.

வையம் புகழ மனு நீதியோங்க வளஞ்சிறக்கப் பையம் புயங்கமெனப் புவிதாங்கினர்-100.

மரபு : 76, 82, 95, 96.

மகளிர் மலைநில விளையாட்டு :

"விருப்பமதா மலர்கொய்து தெண்ணீர் விளையாடுதுமே"-74.

"குடக்கையின் மணிச்செண்டடித் தெங்கள் தோகை
புனலாடவே போயினள்" - 30.

"செங்கயல்பாய் சுனைநீராடிக் கண்கள் சிவந்தது" - 31.
நீருங்கழங்கும் பொன்னூஞ்சலுமாடி நிறைவனத்திற்
குரங் கவியும் தளிருங் கொய்தே - 56

"போயூஞ்சனீர் கழங்காடுவ ரோ" - 26.

"நெடுவாரைச் சாரலூ மூசலுமாடு தெண்ணீர்ச் சுனையும்
உடுபதிதாவு சிலம்பெதிர் கூவலும்" - 59.

புணர்ச்சியின்பம் : 10 — 29 — 53.

இசைபண் : பண்முகாரி – 39. காம்போதி – 90.

உலக வழக்கு :

"நாலாபுவியினும் கண்டறியோன்"
"தெய்விகமாக வவ் வேளையிற் சென்றனள்
சேடியுமே"—64
"புண்ணுவெரிந்தன வென்னுளம்—பண்ணுத
பாவம் பலித்தனவோ" – 69
"பேசவென் வாயுளதோ" – 87
"மோகமிருந்ததினுலே வந்தார்"—91
"கால்நாளும் போகவெழா"—14

மலைநிலம் :

மலைநிலத்து ஆடவர் :
இடிக்கைக் குறவர் 50 : தாக்குஞ்சரவர் 63.

மலைநிலத்து மகளிர் : சிறக்குமெயிற்றியர் 27.

விளைநிலம் : காவற்புனம் 54.

விளைபொருள் : நுண்பயிரேனல் 57.

ஊர் : சந்தகில் சூழுமெம்மூர் 61 ; சீறூர் 63.
மலைவாழ் மகளிர் தொழில் :
கையார் கவணிற் கிளியோச்சி நிற்பது 21.

மலைவாழ் மகளிர் அணிதற்குரியன :
"வெள்ளணியானை மருப்பு மூத்தே, பாயுமை
வாயுமுளவையுகிர் பூணும் பயோதரமே"—26.

புண்ணியம் :
(அறங்கள்) "எண்ணாத கோடி மகாதீர்த்தமாடி" 69
வாரணமீது தனதானியங் கொடுவந்து நிறை
யாரணர்க்குப் புவியுடனீந்து 95.

இல்லற துறவறம்: 101.

சோதிடம்: சாரணர் நாட் சொல்லா.

தேவர்கள் :

பிரமன் : அம்பதுமாசனன் 1;

திருமால்: பீதாம்பரன் 68; சிவன்: கடுவுணி 59;

தேவேந்திரன்: வெண்ணான்கு கோட்டியத்தோன் 98
வச்சிரக்கையர் 24; மூதேவி: தௌவை;

இலக்குமி: சதபத்திரமாது 52; விநாயகர் கரிமுகர் 25;

மன்மதன் இரதி: வேளுமிரதியும் 100; ஐராவதம்: 102.

பொருளணிகள் :

உவமை: 3—4—9—12—18—29—39—43—46—50—68—70—81—93—100.

உருவகம்: 1—86—21.

காட்சி: உயர்வு நவிற்சி, உருவகவுயர்வு நவிற்சி—1.

ஐயம்: 2.

எதிர்நிலை: 52; சிலேடை 1—8—17—30—97.

சொல்லணி:

யமகம்: 13. திரிபு: 1—33.

பொருள்கோளணி: விற்பூட்டு 26—103.

மேற்காட்டிய அணிகளையெல்லாம் விரித்துக் கூறின் விரியுமாகலின் சில அணிகளைமட்டுமே விரித்துக் கூறி மேலே செல்லுதும்.

''அணியெனப்படுவது துணிவுறக்கிளப்பின், செய்யுட் கழகு செய்து நிற்பதுவே'' என்று அணியியலும், ''அணியிலாக் கவிதை பணியிலா வனிதை'' என அகத்தியனுரும் கூறுதலின் ஆசிரியர் இந்நூலில் பல அணிகளையமைத்துப் பாடியுள்ளார்.

உவமையணி :

''உவமை யென்பதோரிரு பொருளுக் கொப்புமை விளங்கச் செப்புவததுதான்'' என அணியியலும், ''இருவகைப் பொருளுக் கொருபுணர்ப்பாக, வொப்பனை செய்தலுவமையதாகும்'' எனக் குவல யானந்தமும் கூறுதலின், இருவகைப் பொருள்களை யொருவகையாக வொப்புமை செய்து கூறுதல் உவமையணியாம்.

4 — பாடல் : தலைவியின் அன்பு வெளிப்படும் சிறப்புப் பார்வைக்கு ''ஈவாரையும்'' அன்பு தோன்றாத பொதுப் பார்வைக்கு இரக்க மில்லாத உலோபிகளின் பார்வையையும் உவமை கூறுகின்றார்.

3 — பாடல் : தலைவி எவ்வுலகத்தாளோ என்று தலைவன் ஐயத்தால் வருந்தி நிற்கும்போது தலைவியின் வ்ல்லியும் (தொய்யில்) கண்ணும் தாள்களுமாகிய ஐந்தும் தலைவி பூவுலக மாதெனக் காட்டி மகிழ்வித்த தற்குத், ''தனியா மிராமற்கு முன்னிரனுசன் விற்றந்ததுபோல்'' என இராமாயண வரலாற்றை உவமை காட்டுகிறார்.

9 — பாடல் : தலைவியின் செவ்வாயில் தோன்றிய புன் சிரிப்பு தலைவனுடைய மனக்கலக்கமாகிய விருளைப் போக்கியதற்கு "பன்னகமணி யல்ல கற்றுங்கு" என உவமை கூறு கின்றார்.

12 — பாடல் : தலைவன் தன்னூர் மிக அண்மையிலுள்ள தென்பதைக் கூறுமிடத்துத் தலைவியின் கண்ணுக்கும் செவிக்குமுள்ள தூரத்தை உவமை காட்டுகின்றார். "உன்கட்செவி போலவும் நன்னகரே"

18 — பாடல் : தலைவன் ஒரு சிறுமியின் கண்பார்வையி லகப்பட்டு வருந்தியதற்குப் பாங்கன் குறு முயலின் கண்ணியில் யானை சிக்கியதை உவமை கூறுகின்றார்.

43 — பாடல் : தோழி, தலைவனை நோக்கி மணஞ்செய்த பின் தலைவியைக் கூடுவாய் என்று கூறிய தற்குத் தலைவன்' வீட்டில் பற்றிய தீயை யவிப்பதற்குத் (தூரத்திலுள்ள) கங்கைத் தீர்த்தம் கொண்டுவா எனச் சொல்லுதலை ஒக்கும் நின் பேச்சு என்கின்றான்.

100 — பாடல் : தலைவனும் தலைவியும் மகிழ்ந்திருந்ததற்கு "எய்யம்பு வேளுமிரதியும் போலவிருந் தனரே" என மன்மதனையும் இரதியையும் உவமை காட்டுகின்றார்.

39 — பாடல் : மலையிலுள்ள வண்டுகளின் பாடலுக்கு "பண்முகாரியை நேர்ககவளி பாடும்" என முகாரிப் பண்ணை உவமை கூறு கின்றார். தடாகத்திலுள்ள வண்டுகள் காம்போதி பண்பாடும் என்று 90-ஆம் பாடலிற் கூறுகின்றார்.

காட்சியணி :

உவமேயப் பொருள் வழங்கப் பெருமல் உபமானப் பொருளே வழங்கி வரச் செய்வது காட்சியணியாம் என்பர்.

"உபமேயப் பொருளொன்றி யெழாமல்
உபமானப் பொருளோதப் பெறினவை
காட்சியென மொழி காட்டினர் புலவர்"

என இலக்கணமும், "புயலுமிளம் பிறையும் பூவிலிதன் வெண்குடையும், கயலுந்தரித் தொருமென்காவில் விளையாடினளே" என உதாரணமுங் காட்டி, உதாரணத்தில் புயல்போல முடியெனவும் இளம்பிறைபோல நுதலெனவும் பூவிலிவெண்குடை (நிறைமதி) போல் முகமெனவும் கயல்போல விழியுமெனவும் சொல்லப் பெருமல் "புயலுமிளம் பிறையும் பூவிலிதன் வெண்குடையும் கயலும்" எனச் சொல்லப் பெற்றமையின் காட்சிக் குறுப்பாகிய புகழ்ச்சியெனக் கொள்க.

இந்நூலின் முதற் செய்யுளில் தலைவன் தலைவியைக் கண்டவிடத்து "தேர்முடிகசம் அம்புவினுதம்பரிதும்பி குடைகொம்பு மாய்மானென்றுலாவியதே" எனக் கூறுகின்ருன். இதில், தேர்போன்ற வல்குல், முடிபோன்ற தனம், பங்கசம் போன்ற முகம், அம்பு போன்ற கண், வில்போன்ற புருவம், தும்பியின் ஒழுங்குபோன்ற உரோமக் கொடி, பூங்கொம்பு போன்ற இடை, மான் போன்ற பெண் எனக் கூருமல் தேர்முடிகசம் அம்பு வில் நாதம்பரி தும்பிகுடை கொம்புமாய்...... மானென்றுலா வியதே" என உவமானப் பொருளை மட்டும் வழங்கியதால் இச் செய்யுள் காட்சியணியாம். இது உபமேயத்தைத் தன் சொல்லாற் சொல்லாமல் உபமானச் சொல்லினுல் இலக்கணையாகச் சொல்லுதலின் உருவகவுயர்வு நவிற்சியணியுமாம். ஏனைய கோவை நூலாசிரியரெல்லாம் காட்சியில் தலைவியைப் பூங்கொடியாகக் கூறுவர். இந் நூலாசிரியர் மானென்று கூறினர்.

ஐயவணி :

ஒரு பொருளை நோக்கியிதுவோ அதுவோவென்று வெவ்வேரு யெண்ணுதல் ஐயமாம். "ஒரு பொருளை நோக்கி யிதுவோ! அதுவோ! வென வேருகி யெண்ணுதல் ஐயம்". 'வஞ்சியிவள் கண்ணம்போ வல்லையமோடு கெண்டையோ கஞ்சமலரோ கடலோ, காணப்பெறுகிலமே' எனுஞ் செய்யுளில் இவள் கண் அம்போ வல்லையமோ (ஈட்டி) கெண்டையோ, கஞ்சமலரோ, கடலோ வென வெவ்வேருக வெண்ணப் பெற்றமையால் ஐயமெனக் கண்டுகொள்க. பிறவுமன்ன என்பது குவலயானந்தம்.

இந்நூலின் 2-வது செய்யுளில், தலைவியைக் கண்ட தலைவன் இவள் மருத நிலத்தியல்பும் கடல் நிலத்தியல்பும் நாகருலகத்தியல்பும் வானத்தினியல்பும் வாய்க்கப் பெற்றிருக்கிருள். இவ்விடங்களுள் இவள் எவ்விடத்த வளோ வென்று வேறுவேருகக் கருதினமையின் இச் செய்யுள் ஐயவணியாம்.

எதிர்நிலையணி :

உபமானத்திற்குக் குறைவு தோன்றச் சொல்லுதல் எதிர்நிலையணியாம். "எதிர்நிலையுவமானந்தனக் கிகழ்ச்சி, யடையவுரைப்பதா மை வகைத்தே" (அணியியல் — 9)

"வஞ்சியிவள் வதன வளங் கண்ட மானிடவர்
கஞ்சமலரதனைக் கான மனத்தெண்ணரே"

(குவலயானந்தம்)

"தௌவையெனச் சதபத்திர மாதைத் தன் தையல்" 52 என்பதில் தலைவிக்கு உவமை கூறுதற்குரிய சதபத்திர மாதாகிய அழகு வடிவான இலக்குமி தலைவியின் பேரழகை நோக்குமிடத்து அழகற்ற மூதேவி என்று சொல்லும்படி அழகற்றவளாகின்ருள் என்று உபமானத்திற் கிழிவு கற்பித்தலால் இச்செய்யுள் எதிர்நிலையணியாம். (இது பிரதீபகம் எனப் பெறும்).

நூற்பதிப்பு :

தமிழ் மண்ணிற் பிறந்த புலவர் பலர் சொற்சுவையும் பொருட்சுவையும் பொருந்தச் செய்து வைத்த நூல்கள் பலவாம். அவை தம்மைக் கற்போருக்கு மகிழ்ச்சியும் அறிவும் தரவல்லனவாம். ஆதலின் பழைய நூல்கள் பலவும் அழியாது பாதுகாத்து வெளியிடல் தமிழ் மக்களது கடமையாம். அம்முறையில் இளமை முதல் எனக்குத் தோன்றிய பேரார்வத்தால் பலவிடங்களிலும் சென்று பல்வகையான ஏட்டுச் சுவடிகளைத் தேடினேன். யான் தேடிவைத்த ஏட்டுச் சுவடிகளிலொன்று "கபிலமலை வருக்கக் கோவை". இதனைப் பிரதி செய்து பரிசோதித்துக் குறிப்புரையும் முன்னுரையும் எழுதினேன். "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என்பது மணி வாசக மாதலின் இந்நூல் பதித்தற்கு வேண்டும் பொருள் வரும் காலத்தை எதிர்நோக்கியிருந்தேன்.

அவ்வமயம் கபிலமலைக் குழந்தைக் குமாரக் கடவுளை வழிவழியாய் வழிபட்டொழுகி வருபவரும் செந்தமிழறிஞரும் வேலூர் வாசியும், கோயமுத்தூரில் மதித்தற்குரிய வழக்கறிஞருமாகிய திரு. ஆர். செங்கோட்டுவேலன், பி. ஏ., பி. எல்., அவர்கள் தாமே இந்நூலினை அச்சிடும் முயற்சியை மேற்கொண்டு பதிப்பித்துதவினார்கள்.

"வான்செய்த உதவிக்கு வையகமென்
செய்யுமதை மறந்திடாதே"

என்றபடி அவர்கள் செய்த நன்றியை மறவாமல் பாராட்டுவதல்லாமல் வேறியாது செய்யவல்லேன்.

எனது பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய திரு. ஆர். செங்கோட்டுவேலன் அவர்கள் இம்மை மறுமைக்குரிய எல்லா நலன்களும் பெற்றுச் சிறப்புற நெடிது வாழ வேண்டுமென்று கபிலமலையில் களிப்புற மேவும் குழந்தைக் குமாரருடைய திருவடிச் செந்தாமரை மலர்களைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

வேலம்பாளையம்
எழுமாத்தூர் வழி
ஈரோடு வட்டம்

வித்வான்,
வே. ரா. தெய்வசிகாமணி கவுண்டர்

உ
கபிலாசலபதி துணை.

கபிலைமலை குழந்தைக் குமாரர் வருக்கக் கோவை.

காப்பு

கட்டளைக் கலித்துறை:

குவலய மீது துறவோருமும்பருங் கொற்றவரும்
நவிலையர் ஞானக் குழந்தைக் குமாரரை நான்புகழ்ந்தேன்
துவலைய தாகக் கனிதேன் மலர்சொரி சோலைசூற்றும்
கவிலையின் மேவு மிபமுகத் தோன்பதங் கைதொழுதே.

குறிப்புரை: குவலயம்-பூமி, உம்பர்-தேவர், கொற்றவர்-அரசர், நவில்—புகழ்கின்ற, ஐயர்—தலைவர், துவலை—மழை, கவிலை—கபிலைமலையென்பதன் மரூஉ மொழி, இபம்—யானை, தொழுது புகழ்ந்தேன் எனக்கூட்டுக.

நூல்

கைக்கிளை, ஆண்பாற்கைக்கிளை, ஒருதலைக்காமம்.

காட்சி

அம்பது மாசனன் செய்தேர் முடிகச மம்புவிறு
தம்பரி தும்பி குடைகொம்பு மாய்ச்சகந் தாங்கவச்ரக்.
கம்பம தான குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
உம்பரி னேங்குபூங் காவினின் மானென் றுலாவியதே. [1]

[கு. ரை.] கபிலை மலைப்பூங்காவில் முதன்முதலில் தலைவியைக் கண்ட தலைமகன் அவளுடைய காட்சியை, மான் ஒன்று, தேர், முடி, கசம், அம்பு, வில், தும்பி, குடை, கொம்பு என்னு மிவற்றை மேற்கொண்டு உலாவுவதாய்க் கருதுகின்றான்.

மான் என்றது தலைவியை, அவளுடைய உறுப்புக் களாகிய அல்குல், கொங்கை, கூந்தல், கண், புருவம், உரோமக்கொடி, முகம், இடை என்னுமிவற்றை தேர், முடி, கசம், அம்பு, வில், தும்பி, குடை, கொம்பு எனக் கூறுகின்ருன். இவை உவமையாகுபெயர்கள்.

தேர்-தேர்த்தட்டு 'பட்டுடைய வல்குலுந்தேர்த்தட்டும்'
(திருக்கைலாய ஞான உலா - 103)

'ஆழித்தேர்த்தட்டனைய வல்குலாள்'
(ஷை ஞான உலா - 117)

'சீரிய வல்குற்றிருத்தேர்'
(தாயுமானவர் மடல்)

'அணங்கரவல்குற்றேர்மிசை'
(நைடதம்)

முடி — மன்மதன் கிரீடம், ''மாமகுடம் போலும் வன் முலையாள்''
(தஞ்சைப் பெருவுடையார் உலா 255)

கசம் - யானை, 'மதன் யானை போலும் மலர்க்குழலாள்'
(தஞ்சைப் பெருவுடையார் உலா - 253)

''படை மதனன் ஊருங்கரியாக வோங்கிருளைக் கூந்த லென வாரிமுடிக்க வருந்துவாள்''
(தணிகை உலா - 186)

அம்பு - கண், வில் - புருவம், ஆகுபெயர்கள்
தும்பி — கருவண்டினொழுங்கு ''கொண்டவுரோமக் கொடிக்கே எறும்பொழுக்கும் வண்டொழுக்கும்''
(உவமான சங்கிரகம் - 9)

குடை — மன்மதன் குடையாகிய சந்திரன், திங்கள் வெண்குடையோன் என்பதீ மன்மதன் பெயர், 'செப்பு முகம் கமலம் திங்கள்'
(உவமான சங்கிரகம் - 3)

கொம்பு — பூங்கொம்பு, 'பாரில் இடைக்கு அரவும் பைங்கொடியும் பூங்கொம்பும்'
(உவமான சங்கிரகம் - 10)

வச்சிரக் கம்பம் — வயிரத்தூண், முருகக் கடவுள் உலகிற்கு ஆதாரமாய் அதனைத்தாங்கி நிற்றலின், உலகந் தாங்க வச்சிரக்கம்பமதான குழந்தைக் குமாரர் என்றார்.
''மாசொன்றில்லாப் பொற்றூணர் காண், பொய்யாது பொழில் எழுந்தாங்கிநின்ற கற்றூண் காண்''

(திருநாவுக்கரசர் காளத்தித் திருத்தாண்டகம் - 1)

காட்சியில் தலைமகளைப் பூங்கொடி, பூங்கொம்பு, பூமாலை என்னுமிவற்றுள் ஒன்றைக்கண்டதாகக் கூறுவது மரபு. இந்நூலாசிரியர் புதியது புகுதலாக மானைக் கண்டதாகக் கூறினார்.

அம்பது மாசனன் செய் என்பது தேர்க்கு அடைமொழி; பிரமன் படைத்த என்பது பொருள். நாதம்பரி என்பது தும்பிக்கு அடைமொழி. ஒலி செய்கின்ற என்பது பொருள்.

ஐயம்

ஆனனம் போதெனக் கண்ணார் கலியென வல்குல்பணி
மாநக ரென்னத் தனவெற் பெனவிடை வானெனப்பூங்
காவின மேவுங் குழந்தைக் குமாரர் கயிலைவெற்பில்
யானதிவ் வாறிவ ரெவ்விடத் தாரென் றியம்புவதே. [2]

[கு. ரை.] யானதெவ்வாறு — (பி-ம்)

ஆனனம் — முகம், போது — தாமரைமலர், ஆர்கலி—கடல், பணிமாநகர் — நாகருலகம், வெற்பு — மலை, இடை — இடுப்பு, வான் — ஆகாயம், 'இடையாகாசந்தீட்டுதல் கைக்கரிதே' (மறைசையந்தாதி — 74) பூகான் — பூஞ்சோலை, இனம் — கூட்டம், நிலம், கடல், நாகருலகம், மலை, வானம் என்னுமிவ்விடங்களில் இவர் எவ்விடத்தைச் சேர்ந்தவர் என்று யான் இயம்புவது எவ்வாறு முடியும் என்றான் என்க. இஃது ஐயவணி.

துணிவு

இனியா மிதற்கென் செய்வோ மெனமனத் தெண்ணியெண்ணி
தனியாமி ராமற்கு முன்னிர நுசன் விற்றந்ததுபோற்
கனியா ரளித்த குழந்தைக் குமரர் கபிலைவெற்பில்
பனியார் மலரகில் வல்லிகண் டாளைந்தும் பாரென்றதே. [3]

[கு.ரை.] முந்நீர் — (பி–ம்)

மலரும் அகில்மணமும் வல்லியும் கண்ணும் தாளும் ஆகிய இவ்வைந்தும் தலைவி பாரிடத் தாள் என்பதைக் காட்டின.

வல்லி–முலையிலும் தோளிலும் எழுதிய தொய்யிற் கொடி

தனியாம் இராமற்கு முன்னிரநுசன் விற்றந்தது போல:

(வருணனை வழிவேண்டு படலம்) வருணனைத் துதித்து ஏழு நாட்கள் வரை பள்ளி கொண்டிருந்தும் அவ்வருண தேவன் வரவில்லை. அதனால் இராமன் துயரமும், சினமும் கொண்டு நாம் மனைவியைப் பிரிந்து வருந்தி அவளை மீட்ப தற்காகக் கடலைத் தாண்டிச் செல்லும் வழி காட்டும் பொருட்டு வருணனை வரும்படி முறையாக வேண்டியும் அவன் வராதிருக்கின்றான். நம்முடைய வலிமையை அவனுக்குக்காண்பிப்போம். ஓர் இமைப் பொழுதில் இந்தக் கடல்நீர் முழுவதும் வற்றும்படி செய்து இதன் வழியாக வானர சேனைகள் எல்லாவற்றையுங் கடந்து போகச் செய்வோம் என்று இலக்குவனைப் பார்த்து வில்லைக் கொடு என்றான். . தம்பியும் உடனே வில்லை இராமனிடம் கொடுக்க அவன் அதனைத் தாங்கி வளைத்து அதன்மேல் வடவைக் கனலினும் கடுநெருப்பைக் கக்கும் அத்திரங்களைத் தொடுத்துக் கடலை நோக்கிச் செலுத்தினான்.

"முகாந்த மிரவிக்கு மிரவியொப்பான் முனைவிற் றருகென்னத்தம்பி
தந்தான்"

[தக்கராமாயணம் வருணனடைக்கலப்படலம் - 3]

"நிருதி யென்பதோன் றழிதர ஆலியிற் சினவும்
பருதி மண்டிலமெனப் பொலி முகத்தினன் பலகால்
தருதிவில் லெனுமளவையிற் றம்பியும் வெம்பிக்
குருதி வெங்கனலுமிழ்கின்ற கண்ணினன் கொடுத்தான்

[கம்ப ராமாயணம் யுத்த-வருணனை வழிவேண்டுபடலம்]

துணிவு: சூத்திரம்

"எழுதிய வல்லியுந் தொயில்புனை கலனும் வாடிய மலரும் கூடிய
வண்டும் நடைபயிலடியும் புடைபெயர் கண்ணும் அச்சமும்
பிறவும் அவன்பா விகழும் கச்சமிலையங் கடிவனவாகும்"

(இலக்கண விளக்கம் அகத்திணை 118)

குறிப்பறிதல்:

ஈவாரைப் போல விரங்குமோர் பார்வை யிரக்கமிலா
தாவாரைப் போல அகற்றுமோர் பார்வையிங் காதலினற்
காவாசம் விசும் குழந்தைக் குமரர் கயிலைவெற்பின்
மாவாச மென்குழன் மார்பாலொரின்பம் வருநமக்கே.

[4]

[கு. ரை.] மென்குழலார் (பி-ம்) ஈவார்–கொடையாளிகள், இரக்கமிலாதாவர்–உலோபர்கள், கா–சோலை, மா–கருமைநிறம்.

"இருநோக்கிவளுன் கணுள்ள தொருநோக்கு
நோய்நோக் கொன்றந்நோய் மருந்து" [குறள்]

"அரிவை நாட்டமகத்து நிகழ்வேட்கை தெரிய
வுணர்ந்தும் குறிப்பென்ப"

[இலக். அகத் 119]

"பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழ மின்னும் பணியும்
புரைமருங் குற் பெருந்தோளி படைக் கண்களே"

[திருக்கோவையார் - 4]

"இல்லோரிரக்க வொன்றியார் மனமுரிளிதளிக்க
வல்லோரிரக்கமும் போல்கின்றதால்"

[திருச்செங்கோட்டுக்கோவை - 3]

2. இயற்கைப்புணர்ச்சி

[ஊழ்வினை கூட்டுவிக்கக்கூடும் புணர்ச்சி]

இரந்து பின்னிலை நிற்றற் கெண்ணல்

உடன்பட வேண மெபசார மாற்ற முரைத்து முத்து
வடம்புனை கொங்கை மருவிடலாங்கு வளைகுரவங்
கடம்பணி மார்பர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
நடம்புரி தோகை மயிற்சாயன் மாதுக்கு நாமினியே. [5]

[கு. ரை.] உடன்பட—வேட்கைக்கிணங்க, மாற்றம்—சொல், குவளை—செங்குவளை மலர் "கல்லார மார்பர் குழந்தைக் குமாரர்" குரவம்-குராமலர் சாயல்-மென்மை

இரந்து பின்னிலைநிற்றல்

ஊனோ கரையிதிங் கூனோன் பொரவேந்த னுள்ளத்துள்ள
மானோவு தன்னைக்கை மானோன் வலன்வள்ளிக்காய்வனத்தில்
கானோவ வந்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
ஏனோ வெறுமுனி வேனோவென் மீதுமக்கு ஏந்திழையே. [6]

[கு. ரை.] ஊன்—உடம்பு, ஊனோன்—மன்மதன், சிவபிரானது நெற்றிக்கண் பார்வையால் ஊனமடைந்தவன், பொர—போர்செய்ய மால்நோவு-மயக்கநோய், கைமானோன்—துதிக்கையுடைய விநாயகன், வந்த-வரச் செய்த, ஏனோவெனா-இரந்து பின்னிற்றல் எதற்காகவோ என்று கேட்காத, முனிவு ஏனோ—கோபம் எதனால் வந்ததோ.

பொய் பாராட்டல்

என்னாத கோடி மகாதீர்த்த மாடியிரும்புளியிற்
பன்னாத மாதவம் பன்னினவோ மலர்ப்பன்னிரண்டு
கன்னார் விசாகர் குழந்தைக்குமாரர் கபிலைவெற்பில்
வின்னாருங் கற்பகப் பூங்கா நிழலிந்த மின்னிற்கவே (7)

[கு. ரை.] பண்ணினதோ [பி. ம்.]
விசாகர்—விசாகநாளில் அவதரித்தவர். மின்—பெண்.

பொய் பாராட்டுதல்:

தலைவன் தலைவிமாட்டுள்ளதுமில்லதுங் கூறிப் புகழ்ந்து கொண்டாடுதல், ஆயின் உள்ளது கூறலும் பொய் பாராட்டலோவெனின் அற்றன்று: மற்றென்னையெனின், இல்லது கூறுவான் உள்ளதை விட்டு விடுவானல்லன்.

இடையூறுகிளத்தல்

தலைவி வெட்கமுற்றுக் கண்ணை மூடிக்கொண்டு நிற்றலினுல் எழுந்த துன்பத்தைக் கூறல்

ஏத முறுர்கலி தன்னை மறைக்க விருநிதியம்
போதவே தேடிப் புதையாமல் வைக்கவிப் போகவுரி
காதலர் வேற்கைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பி
லாதமன் விதியிம் மாவிடத் தேகண் டறிந்தனமே (8)

[கு. ரை.] ஏதம் உறு—துன்பம் செய்கின்ற; ஆர்கலி—பொருந்திய வறுமை. ஆர்கலி –கடல் போன்ற கண்கள்.

"கஞ்சந்தினளவிற் றேறுங் கடலினும் பெரிதே கண்கள்,"
[கம்பர்]

இருநிதியம்—[பெரியதனம்] மூலை; பெருஞ்செல்வம்; சிலேடை. புதையாமல்—கையால் மறைக்காமல்; நிலத்திற் புதைத்து வைக்காமல், வைக்க—வைக்க வேண்டும், இப்போ—இப்போது, கவுரிகாதலர்—பார்வதிபுத்திரன், ஆதம்மன்நீதி—விரும்புதற்குரிய நிலையான நியாயம், இமான்—இப்பெண், தலைவி நாணத்தால் கண்களை மூடிக் கொள்ளவும் தலைவன் தலைவியின் தனத்தைக் கண்டு வியந்து கூறியதிச் செய்யுள்.

"மதயானை வானைவரும் தஞ்சை சூழ் வையைய நாட்டுறைவோர்
புதையார் தனமென்பதோ மதர்வேற்கண் புதைந்ததுவே"
[தஞ்சைவாணன்கோவை]

முறுவற் குறிப்புணர்த்தல்

ஐயான னப்பன் னகமணி யல்லகற் ருங்கெனவே
மெய்யா ரிதய கமலத்திருளை விளக்கினவேற்
கையார் முருகர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பின்
மையார் விழியிலெ மையாள் கமலைச்செவ் வாய்நகையே (9)

[கு. ரை.] ஐயானனம் பன்னகமணி—ஐந்துதலை நாகத்தின் மாணிக்கமணி; அல்—இருள், கமலை—தலைவி,

"ஈவாரைப் போல விரங்குமோர் பார்வை"

என்றதனுல்

"மையார் விழியிலெமையாள்கமலை"

என்ருர்.

புணர்ச்சியின் மகிழ்தல்

ஒருவர்க் கொருவருடை விட் டணைத்தித ழூறன்முறை
பருகிச்சம் போகம் விளைத்தனவாறு பகையசுரர்
கருவறக் காய்ந்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
பொருவிற்கை வேட்கும் வராதின்னம் தான்கற்கப் போகினுமே
(10)

[கு. ரை.] இதழ் ஊறல்—உதட்டில் ஊறும்நீர், சம்போகம்—புணர்ச்சி, விளைத்தனவாறு—இன்பம் விளைத்ததுபோல, விற்கைவேள்—கரும்பு வில்லைக் கையிலேந்திய மன்மதன், கற்க—சம்போக விதங்களைப் பயின்றறிய; வாராது யாமனுபவித்தவின்பம் வரமாட்டாது.

இயற்கைப் புணர்ச்சி முற்றிற்று.

வன்புறை

[தலைவியின் ஐயம் தீரத் தலைவன் வற்புறுத்திக் கூறல்]

அணிந்துழி நாணிய துணர்ந்து தெளிவித்தல் :

"ஓதிச் செருகு மணமஞ் சரியு முடையு மெய்யில்
நாதித்த பூணு மணிந்தேன் முன்போலவே நண்ணலரைக்
காதிப் பொருத குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
மாதித் தரிப்பினிந் தோபாரு மென்கை மலரகத்தே [11]

[கு. ரை.] ஓதி — கூந்தல், மஞ்சரி — பூங்கொத்து. உடை — ஆடை, மெய் — உடம்பு, நாதித்த பூண்-ஒலிக்கின்ற ஆபரணங்கள், நண்ணலர்-பகைவர். மாது - மாதே அண்மைவிளி. இதரிப்பின் - இவ்வாறு தரித்ததை. இந்தோ — இதோ. பாரும் — பார்ப்பீர். என் கை மலரகத்தே முன்போலவே அணிந்தேன் எனக் கூட்டுக.

இடமணித் தென்றல்.

"ஒளவிய நீக்கிப் புவியாரு மெங்க ளரும்பதிக்குஞ்
செவ்விய தாமும் பதிக்கு மருகிணை செப்பினிணைங்
கௌவிய வேற்கைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
நவ்விய தானவுன் கட்செவி போலவே நன்னகரே [12]

[கு. ரை.] ஒளவியம் — பொருமை முதலிய குற்றங்கள். பதி— ஊர், அருகு—பக்கம். இணைசெப்பின்— உவமானம் சொல்லின். நவ்வியதுஆன— மான்விழியை ஒப்பான. உன் கண் செவி போலவும்—உன் கண்ணிற்கும் செவிக்கும் உள்ள தூரத்தை ஒப்பாகும். நன்னகர்— நம் இருவருடைய நல்ல நகரங்கள்.

பிரிந்து வருகென்றல்.

"கன்னல் மொழிக ழெம்பாக்க மெய்திக் கடுகியரைக்
கன்னலின் மின்ன லிருமிங்ஙனேசங் கரத்கருளேக்
கன்ன மதிற்சொல் குழந்தைக்குமாரர் கபிலைவெற்பில்
கன்ன மதக்குஞ் சரக்கோட் டிருதனக் கற்புடையே" [13]

[கு. ரை.] கன்னல் -கரும்பு. பாக்கம் - ஊர். கன்னலின்- நாழிகையில். அருள் — அருள் வடிவான பிரணவப் பொருளை. கன்னம் - காது. கன்ன மதம் - யானைமதத்தில் ஒன்று. குஞ்சரம் கோடு - யானைக்கொம்பு. இது தனத்திற் குவமை. கற்புடை - கற்புடையாள்.

இச் செய்யுளில் யமகம் என்னும் சொல்லணி காண்க.

4. தெளிவு.

(தலைவன் சொல்லைத் தலைவி தெளிந்தாற்றுவது)

தலைவி தன்னெஞ்சிற் றெளிதல்:

" கானுர் புளிஞர்தங் காவலைத் தப்பிக் கரைபெருகு
கானு றுகளுங் கடந்துவந் தேகடந் தார்மலையக்
கானும் விசுங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
கானும் போக வெழாநெஞ்ச மேயஞ்சல் கண்டிருமே [14]

[கு. ரை.] கான்ஆர்புளிஞர் — காட்டில் பொருந்திய வேடர். கானறு — காட்டாறுகள். வந்து — நம்மிடம் வந்து. கடந்தார்—மீண்டும் அவற் றைக் கடந்து தம்மூர் சென்றார். மலயக்கால் — தென்றல் காற்று. கால் — கால்கள் "கால் போகா போகா" தாயுமானர் பாடல். நாளும்—ஒருகணப் பொழுதும், போக — நம் இல்லத்திற்கு (ஊர்க்குப் போதற்கு) : எழா— உடன்படாத. அஞ்சல் — அஞ்சாதே. கண்டு — தலைவர் கூறிய உண்மையைத் தெரிந்து. இரும்—ஆற்றியிருப்பாய்.

5. பாங்கற் கூட்டம்

தலைவன் பாங்கனைச் சார்தல்:

" கிளர்மலரி வானுத லின்பமென் னுளினிக் கிட்டு மென்றே
தளர்வுறு மெந்தன் றனிநெஞ்ச மேயஞ்சல் தார்ப்புயத்திற்
களபமே சேருங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
வளர்சது வேத னெருவனுன் டேநமை வாழ்விக்கவே [15]

[கு. ரை.] வாள்நுதல் — ஒளி பொருந்திய நெற்றியை யுடையவள். அஞ்சல் - அஞ்சாதே. களபம் - சந்தனம். தெய்வயானையார் எனினுமாம். சதுர்வேதன்—பார்ப்பனப்பாங்கன்.

பாங்கன் தலைவனையுற்றது வினாதல்

கீதப் பிரியம தோமல் லயர்வோ கெளிமை போய்ப்
போதப் படுதுய ரானதென் றேகுறப் பூங்கொடிநன்
காதற் பிரியர் குழந்தைக் குமரர் கபிலைவெற்பில்
ஓதப்படி குறை யேதுவந் தானு முவாமன்னனே [16]

[கு. ரை.] கீதம்பிரியம்-இசைவிருப்பம். மல்-மற்போர். அயர்வு-சோர்வு. ஓது-எனக்குச் சொல்வாய். உவா-யானை. "ஏ ழி சை ச் சூழல் புக்கோ." (திருக்கோவையார்)

தலைவன் உற்றதுரைத்தல்.

குறைவே றிலையினிச் சொல்லா திருப்பவுங் கூடிலையான்
நறைசேர் புனத்தொரு மான்கண்ணியிற் சிக்கி நைந்தனன்சூர்க்
கறைசேர் ரயிற்கைக் குழந்தைக் குமரர் கபிலைவெற்பில்
பொறை சேரறிஞ வறியச்செல் லேனப் பொருப்பிடத்தே (17)

[கு. ரை.] பொறை சேரருது [பி. ம்.]
கூடிலை—கூடவில்லை, நறை—தேன், புனம்—மலைசார் கொல்லை, மான் கண்ணி—மான்வலை, பெண்ணின் கண்வலை, "என்கலைமுழுதும் பட்டதாலொரு மான்முடிக்கண்ணியிலே"
[தஞ்சைவாணன் கோவை-41]

சூர்—சூரபன்மன், கறை—இரத்தம், அயில்—வேல், பொறை—பொறுமை, அறிய—அப்பெண்மானின் நிலையை யறிதற்கு, செல் —போவாய், ஏனப்பொருப்பு —பன்றிகளையுடைய மலை.

பாங்கன் தலைவனைப் பழித்தல்.

கூறுங் குறுமுயற் கண்ணரி வலைக்குட்காற் குன்றுசிக்கு
மாறு நிகர்த்தனை யேயன்னை லேவனைங் காவசுரைக்
காறுங்கை வேலர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பிற்
சீறுஞ் சமரினி லேறுந் துரககத் தேர்மன்னனே (18)

[கு. ரை] குறுமுயற் கண்ணிவலை—குறுமுயல் பிடிக்கும் கண்ணியாகியவலை, கால்குன்று-(காலையுடைய குன்றம்) யானை, "வருங்குன்றம்" என்பது சிற்றம்பலக் கோவையார்-15. [இல்பொருளுவமை] ஆறு—விதம், காறும்—அழிக்கின்ற, சமர்—போர், துரகதம்—குதிரை.

தலைவன் பாங்கனைப் பழித்தல்.

கெடியால் குழைவிழி யார்க்காசை கொண்டவர் கேட்கிலிந்தப்
படியா னதுதன்னி லென்னள வோகடப் பந்தொடைசேர்
கடியார் புயத்தர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
முடிநா அகலத்தி லேன்றரித் தார்திரி மூர்த்திகளே (19)

[கு. ரை.]: கெடியால் — அச்சத்தால்; குழை — கலங்கச் செய்கின்ற; கடப்பந்தொடை-கடம்பின் பூமாலை; கடிஆர்—மணம் நிறைந்த; திருமூர்த்திகள்-சிவன், பிரமன், மால்—இவர்கள் முறையே முடி, நா, அகலம் என்னும் மூவிடத்தில் பெண்ணைத் தரித்துள்ளவர்கள்; முடி—தலை, அகலம்—மார்பு.

பாங்க னெவ்விடத் தெவ்வியற் றென்றல்.

கேவலம் நின்னை வலதழித் தாள்செய் கிரியைகளும்
ஆவல தாக விளையாடு காவு மரும்புலியாள்
காவல ரேத்துங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பிற்
பூவலஞ் செய்கதிர் வேல்வலந் தாங்கிய போர்மன்னனே (20)

[வனத்தாக்கிய—பி. ம்.]
கேவலம்—அற்பமாக, வலது—வல்லமை, கிரியை—செய்கை, கா—சோலை, காவலர்—அரசர், பூவலம் செய்—பூமியைவலம்செய்ய, [திக்கு விசயம் செய்த] வலம்— வலப்பக்கம்.

அவனஃது இவ்விடத் திவ்வியற்றென்றல்

கையாலங் கண்ணுத லிந்திர சாபங் கமலத்தின்மங்
கையா முகநிறை மாமதி யாகுமுன் கற்பிக்கமூ
கையா யிருந்த குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
கையார் கவணிற் கிளியோச்சி நிற்பதுங் காவிடமே (21)

'' கையா முகம்பினை வேறிலை யாகுமுன் '' (பி. ம்.)

கை—கசப்பு, ஆலம்—நஞ்சு, கருநிறத்தாலும் கொடுமையாலும் மகளிர் கண்ணிற்குவமையாம். '' நஞ்சினிற் கருகி '' (நைடதம் அன்—தூது—13) நுதல்—புருவம், இந்திரசாபம்—இந்திரவில், ''மேவில் புருவம் '' (உவமா—சங்—2) கமலத்தின் மங்கை ஆம்-திருமகளை ஒப்பாவாள். முன்—கடைச்சங்கப் புலவருடைய முன்னிலையில், முன் காலத்தில் எனினுமாம் கற்பிக்க—இறையனார் களவிய லுரைகளில் சிறந்தவுரையின்னதென்று தெரிவிக்க. மூகையாய்—ஊமையாய், முன்பு மதுரையில் முருகக் கடவுள் ஊமைப் பிள்ளையாயிருந்தார் என்பது வரலாறு. '' இவ்வூர் உப்பூரிகுடி கிழான் மகனுவான் உருத்திர சன்மனென்பான், பைங்கண்ணன், புன்மயிரன், ஐயாட்டைப் பிராயத்தான், ஒருமூங்கைப்பிள்ளை உள்ளான், அவனை அன்னனென்று இகழாது கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தால் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளாவிருக்கும், அவன் குமார தெய்வம் ஆங்கோர் சாபத்தினுல் தோன்றினுன்.''

, (இறையனுர் களவியலுரை)

'' மணிக்காலறிஞர் பெருங்குடித் தோன்றி இறையோன் பொருட்குப் பரணர் முதல்கேட்பப் பெருந்தமிழ் விரித்தவருந் தமிழ்ப் புலவனும் '' (கல்லாடம் 2—52—54)

ஓச்சி — ஓட்டி, காஇடம் — சோலையிடம்

"சொற்கின்ற சங்கப் பலகையிலேறித் துகளறநூல்
கற்கின்றவர் திருச்செங்கோடை வெற்பில்"

(திருச் — கோவை - 67)

பாங்கன் தலைவனைத் தேற்றல்

"கொலையா ரயிற்படைக் கொற்றவ னென்சொற் குறிப்படிபோய்ச்
சிலையார் திலத நுதன்மாதைக் கண்டு திரும்பளவுங்
கலையாய் பலரெண் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
நிலையாக நீகலங்காதேயுன் னிராச நெறிதனையே" [22]

[கு. ரை.]: நீ கலங்காதிருராச நெறிதனையே (பி. ம்.)
சிலைஆர் — வில்லையொத்த, திலதம்நுதல் — பொட்டணிந்த நெற்றி, கலை-நூல், எண்-நினைக்கின்ற, இராசநெறி-அரசதருமம்.

பாங்கன் குறிவழிச் சென்று இறைவியைக் காண்டல்

"கோவேரி துன்னி விளை நாடன் சொன்ன குறிப்புறிதாம்
மாவேறி வீசு மிதணுமிதாம் வள மேவுதிருக்
காவேரி சூழுங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
பூவே ரிசைக்கு மிவரே யவர்சொன்ன பூவையுமே" [23]

[கு. ரை.]: பூவோர் - (பி.-ம்.)
கோ—மலைகள், வேரிதுன்னி — தேன் நிறைந்த, விளை — முதிர்கின்ற, குறிப்பு — அடையாளம், மாவீசும்-மிருகங்களை எறிகின்ற, இதண்-காவற்பரண், வளம்-செழுமை, பூஏர்-மலரின் அழகு, இசைக்கும் --பொருந்தியுள்ள, காவேரி—காவிரி ஆறு, 'செழுங்காவிரித் திருச் செங்கோடைநாதர்' [திருச்செங் கோவை] "காப்பட்ட தண்டலைக் காவேரியும்". 54 இரங்காவிரித் துறையேரகத்தோன்" 53.

(திருச்செங்கோட்டுக் கோவை)

பாங்கன் இகழ்ந்ததற்கு இரங்கல்

" கௌவிட வாசுகி தாங்குல காலுநங் காவலனே
கௌவிட முஞ்சொலச் செல்லாது வச்சிரக் கையரிருக்
கௌவிட மீந்த குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
கௌவிடக் கொங்கை மினைநீத் தெம் பால்வரல் கண்டிருந்தே "
[24]

[கு. ரை.]: கௌ - கவ்வுதல், விடம்வாசுகி - விடத்தினை உடைய வாசுகியென்றபாம்பு, இது அட்டநாகத் தொன்று, காவலனோ-தலைவன்மீதோ, கௌவிடம்-பழிச்சொல், செல்லாது - பொருந்தாது, வச்சிரக்கையர் - தேவேந்திரன், இருக்க - வாழ்ந்திருக்க அவ்விடம்-அந்த வானிடத்தை, கௌவிடு-மனதைக் கவர்கின்ற, மின்னை-தலைவியை, காவலன் மின்னை நீத்து எம்பால்வரல் கண்டிருந்தும் அவன் மீது பழிச்சொல் சொல்லுதல் பொருந்தாது என்றான்.

தலைவன் தனக்குத் தலைவி நிலை கூறல்

" சரிமலர்க் கூந்தலு மேனெடு மூச்சுந் தருவுகிரால்
வரிவிழி நீரைத் தெறித்தல்கண் டேன்வர மீந்தருளுங்
கரிமுகர் பின்னர் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
விரிமலர்ச் சோலையில் நின்வரல் நாடிய மின்றனையே " [25]

[கு. ரை.] சரி-சரிந்த, மேல்தரும்-மேலும் உண்டாகின்ற, உகிர்-நகம்; தெறித்தல்-சுண்டுதல், எண்ணும்மை தொக்கது, கரிமுகர்-விநாயகர், நின் வரல்—உன்னுடையவருகை, மின்தனை-பெண்ணினிடத்தில், வேற்றுமை மயக்கம்.

இதனிலும் அடுத்த 2 பாடலிலும் தலைவனைப் பிரிந்த தலைவியின் இயல்புகள் காண்க.

தலைவன் குறிவழிச்சேறல்

சாயுங் கதிர்நிற மாணிக்கத் தாளிதண் டன்னைவிட்டுப்
போயுஞ்ச லீர்கழங் காடுவளோபொருஞ் சூரனுடல்
காயுஞ்செவ் வேற்கைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
பாயுமை வாயுழு வையுகிர் பூணும் பயோதரமே (26)

பாயுஞ்செவ்வாய்; பயோதரியோ, (பி-ம்)

[கு. ரை.] பயோதரமே சாயும் எனக்கூட்டி விற்பூட்டு பொருள்கோள் காண்க. மாணிக்கத்தாள்—மாணிக்க மணிபோற் சிறந்த தலைவி, இதண்—பரண், உஞ்சல்—ஊஞ்சல், குறுக்கல் விகாரம்: கழங்கு—கழற்சிக்காய், கைகொண்ட பந்தும் கழங்கும் எய்தாது (திருச்செங் - கோவை-70) காயும்—கோபித்த, பாயும்—பாய்கின்ற, ஐவாய்—சிங்கம், (பஞ்சானனம்) உழுவை-புலி, உகிர்—நகங்கள், பூணும்-ஆபரணமாகத் தரித்த, பயோதரம்-முலை.

"ஆலுமின்னிடை சூழ்மாலைப்பயோதரம்
அசைய வந்தாள்" (பெரியபுராணம்)

இறைவியைக் காண்டல்

பிறக்கும் எயிற்றியர் ஆயத்தை நீக்கித் திகைப்புஞ் செம்பொன்
நிறக்கும் தனமும் கிலேசமு மாக நிசிதருயிர்
கறக்குங்கை ஞாங்கர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
அறக்கங்குற் கூந்தல் சரியநின் றுளேநி ராகவந்தே (27)

நிற்கும்பி.-ம்.

[கு. ரை.] எயிற்றியர் ஆயம்—வேடமகளிர் கூட்டம் பொன்-பொன்போன்ற தேமல், நிறக்கும்-நிறஞ் செய்கின்ற, கிலேசம்-கவலை
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்கு தற்கே. (கந்தரலங்காரம்—60)

நிசிதர்—அரக்கர், கறக்கும்-கவரும், ஞாங்கர்—வேல் அற—முற்ற, கங்குல்—இருள்.

புணர்ச்சியின் மகிழ்தல்

சீரிக் கமல முகமலர்ந் தன்பு சிறக்கவின்பம்
பாரிக்க நம்போ லெவரணைந் தார்பரி வாகநெஞ்சே
காரிற்சிறந்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பிற்
பூரித்த கொங்கைகண் மென்மேலு மின்பம் புளகிக்கவே (28)

[கு. ரை.] சீரி — சிறந்து, பாரிக்க — பெருக. பரிவு — அன்பு காரின் — மேகத்திலும். சிறந்த — ஈதலிற்சிறந்த 'கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டு மாரி' (குறள்)

பூரித்த — பருத்த, புளகிக்க — தோன்றும்படி

தலைவன் தலைவியைப் பாங்கியோடு வருகெனப் பகர்தல்:

சுற்றமுஞ் செல்வமு மாவியு மன்னவுன் றோழியுடன்
பொற்றநு வாநுதலாய்வரு வாய்முப் பொருளுமிசை
சுற்றவர் போற்றுங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
நற்றரு நீழலி னும்மிளை யாடவும் நாளையுமே (29)

[கு. ரை.] ஆவி — உயிர், அன்ன - போன்ற, பொன்தனு - பொன்னுலாகியவில், நுதல் — நெற்றி, "தனி வாணுதற்கு நிகர் வெண்பிறையும் செஞ்சிலை யுமே" (உவமான — சங் — 1) முப்பொருள் — பதி பசு பாசம், இசை — இசைநூலும் நற்றரு — நல்ல மரம்.

6. பாங்கி மதியுடன் பாடு

தலைவன் தலைவி ஆகிய இருவருக்குமுள்ள காதலைத் தோழி தன்னறிவாலறிந்து அதற்கு உடன்படுதல்.

தகையணங்குறுத்தல்

தலைவியின் வேறுபாட்டைக் கண்ட தோழி அவளைத் தெய்வப் பெண்ணாக வற்புறுத்திக் கூறல்.

"நடகக் கையின் மணிச் சென் டடித்தெங்க டோகையுள
ளாடவே போயினள் வந்தில ளியவ ளாமரம்பைக்
காடக மேவுங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
ஏடதின் வெண்மை யுமைக்கட் டுவரு மிலையவட்கே" [30]

[கு. ரை.]: யுமைகட்டுவரும்-(பி.-ம்.) போயினம்-(பி.-ம்)
சூடகம்-வளையல், "சூடகக் காந்தளஞ் செங்கை மின்னே" (கோடீச்சாரக்கோவை - 184) மணிச் செண்டு — அழகிய பந்து, தோகை — பெண், புனலாட-நீராட, அவளாம்-அவளையொப்பாவாய், அரம்பைக்காடு—வாழைத்தோட்டம், "அரம்பை யங் காட்டக வேதாரணியத்தன்"

(மறைசையந்தாதி-87)

ஏடு — வாயுதடு, மைக்கண் — மையெழுதியகண், துவர்-சிவப்பு, அவள்-எங்கள் தலைவி (பெண்)

"குவளை சிவந்துக் குமுதம் வெளுத்த குறையல்ல வேல்
அவளை மறைத்துன்னைக் காட்டவு மாமலர்த் தேன்குதிக்கத்
தவளை குதிக்கும் தடம்பொய்கை சூழ் தஞ்சைவாணன் வெற்பில்
இவளை வரக்கண்டு நீயணங்கே! பின்னெழுந்தருளே!

(தஞ்சைவாணன்கோவை-67)

"விண்ணிற் சிறந்த விருத்தா சலத்தர் வியன்சிலம்பிற்
கண்ணிற் சிவப்பும் கவிரிதழ் வெண்மையுங் காட்டிலையேற்
பெண்ணிற் சிறந்த அவளைமறைத்துன்னைப் பேசலுமாம்
நண்ணிற் சிறந்த அவள் வந்த பின்னர் நடந்தருளே"

(பழமலைக்கோவை-67)

சுனையாடியதுரைத்தல்

"செங்கயல் பாய்சுனை நீராடிக் கண்கள் சிவந்ததல்லால்
அங்கயலான வசிகையொன் றில்லையலையெறியுங்
கங்கை தன் செங்கைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
இங்கயம் வேறிளைச் சொல்வதுனக்கிங் கியல்பலவே" [31]

[கு. ரை.]: அங்கயலான், இங்கையம்-(பி.-ம்.)
செங்கயல்-சிவப்பாகிய கெண்டைமீன்கள், சுனை-பொய்கை, இயற்கைத் தடாகம், அயல்-வேறு பாடு, அசிகை-குற்றம், பொய், செங்கை-சிவந்த கையால் வளர்க்கப்பெற்ற, வேறுஐயம்-வேறுபா டான சந்தேகம், இயல்பு — நீதி.

அயிர்த்துரையாடல் - சுனைநயப்புரைத்தல்

"சேலார் நயனந் திருவேமெய் வேர்வுந் திலதமுநின்
மேலார முஞ்சிதை யாமலே யாடிய மென்சுனை கைக்
காலாயுதத்தர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
நாலார் புவியினுங் கண்டறியோ மின்னவநிதமே" [32]

[கு. ரை.]; நயனம்—கண், திரு—இலக்குமிபோன்றவள், ஆரம் - முத்துமாலை, சந்தனம், காலாயுதத்தர் - கோழிக் கொடியையுடையவர், நவநிதம்-புதுமை முருகன் கையில் கோழிக் கொடி

"போழ்படக்கிடந்த ஒருபங்கு எழுந்து, மின்னின் மாண்ட
கவிர் அலர் பூத்த, சென்னிவாரணக் கொடும்பகையாகித் தேவர்
மெய்ப்பலிப்புற வான் மிடையுடுத்திரள், பொறியின் கொறிப்ப
புரிந்த பொருள் நாடித், தாமரை பழித்த கைமருங்கமைத்தோய்"

கல்லாடம் : 2.

நாலார்புவி—நான்கு வகையான பூமி

"நாமநீர் வைப்பின் நாவில வளாகமும்"

(சிதம்பர மும்மணிக்கோவை-2)

நடுங்கநாட்டம்

[தான் கூறிய மொழியால் தலைவி நடுங்கா நிற்பதைத் தோழி ஆராய்தல்]

சைவா ரணர்துதி செய்வா னவரிறை தன் புதல்வி
தெய்வா ரணமங்கை கேள்வர் கவின்பெறு செங்கமலக்
கைவா ரணத்தர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
மைவா ரணங்களந் நேர்பொரல் பார்பிறை வாணுதலே

(33)

[கு. ரை.] சைவாரணர்-வைதீகசைவர், (சிவப்பிராமணர்) வானவர்இறை—தேவேந்திரன், தெய்வாரண மங்கை கேள்வர்—தெய்வயானை கணவர் "குழற்காடு சுமந்த யானை மகட் புணர்ந்தோய்" வாரணத்தர்—கோழிக் கொடியையுடையவர், வாரணம் கேடகம் எனினுமாம், மைவாரணங்

கள்—கரு நிறமுடைய யானைகள், பொரல்—போரிடுதல், அந்தோ-இரக்கக் குறிப்பு, யானைப் போரால் தலைவனுக்கு ஏதேனும் ஏதம் நிகழ்ந்ததோ என அறிவிப்பாள் அந்தோ என்னும் இரக்கக் குறிப்புச் சொற் கூறினாள்.

இதுவுமது

சொருகுஞ் சரத்தொடை யாய்நம் புனத்தொருதோன் றறன்னை
ஒருகுஞ் சரமெடுத் தாங்கென வேங்கின னூழ்வினையைக்
கருகும் படிசெய் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
பெருகுஞ் சரத்தெய் தனரெனத் தேறினன் பின்றெளிந்தே (34)

[கு. ரை.] சொருகு—கூந்தலில் செருகும், சரம்தொடை—சரமாகிய பூமாலை, தோன்றல்—ஆண்மகன், குஞ்சரம்-யானை, எடுத்தாங்கென—எடுத்ததென்று, ஊழ்வினை—முன்வினை, கருகும்படி—(தோன்றாமல்) கருகிப்போம்படி, "ஊழ் வினையை மாற்றி உளவாத பேரின்பவாழ்வு தரும் செய்மலர் முகமும்" [கந்தர்கலி வெண்பா], சரத்து—அம்புகளினால், தெளிந்து தேறினான்-தெரிந்து மனதில் தேர்வு கொண்டேன், இச்செய்யுள் திரிபணி.

பிறை தொழுகென்றல்

சோம னெழுந்தனன் பார்தொழு வோமென்று சொல்லவதற்
காமன் றெனவொன்றுஞ் சொல்லில வேயத னாற்பொருவிற்
காமன் றனத்தர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பிற்
பூமன் குழலிடத் துண்டினம் வேறு புதுமைகளே (35)

[கு. ரை.] சோமன்-சந்திரன், பார்-அவனைப்பார், ஆம்-தொழுவாம் [உடன்பாடு], அன்று-தொழேம், (எதிர்மறை), சொல்இல்—சொல்லுவில்லை, காமன்—மன்மதன், அத்தர்—மைத்துனர், பூமன்குழல்—மலர்கள் மிகுதியான கூந்தலை

யுடைய தலைவி, (அன்மொழித் தொகை) இனம்வேறு—இன்னும் வேறான, புதுமைகள்—தலைவி ஒருவன் மேல் காதல் கொண்டதை யறிவதற்கான புதிய செயல்கள், உண்டு—உள்ளன.

வேழம் வினுதல்

[பாங்கியைத் தன் குறையிரத்தற்குத் துணிந்த தலைவன் தன் அம்பு பட்டதனால் ஒழுகிய உதிரத்துடன் யானை வொன்று வந்த துண்டோ எனக்கேட்டல்]

சௌரியத் தோடெதிர் முத்தாரத் தந்தியென் சாயகம்பட்
டவிருதி ரத்துடன் வந்ததுண் டோசொலு மத்தர்பங்கிற்
கவுரிதன் பாலர் குழந்தைக்குமாரர் கபிலைவெற்பில்
பவுரிகொ டோகை மயிற்சாய்கை யிருங்கள் பைம்புனத்தே
(36)

[கு. ரை.] முத்தானம்-(பி. ம்.) சௌரியம்–வீரம், பலம். எதிர்–எதிர்ந்த. (முத்து ஆரம்–இருபெய ரொட்டு) முத்து ஆர் தந்தி–முத்தினைப் பொருந்திய தந்தத்தையுடைய யானை. முத்தானம் என்ற பாடத்திற்கு மும்மதம் எனவும் பொருள் கொள்க. மும்மதமும் பொழி யானைமுன்–(தனிப்பாடல்) சாயகம்–அம்பு. அவிர்–ஒழுகுகின்ற. அத்தர்–சிவ பெருமான். கவுரி–பார்வதி. பவுரி–கூத்து வகை. சாய்கை–சாயல்.

மொழி வினுதல்

ஞானத் தமர்குழ லீரொரு வார்த்தை நவிலினுங்கள்
சீனத் தமுதஞ் சிதைந்திடுமோ குறத் தேமொழிக்காய்க்
கானத்தில் வந்த குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
மோனத் தனமுமக் கேன்வேணுஞ் சேரல் முனிவர்கட்கே
(37)

[கு. ரை.] சொல் (பி. ம்.) ஞானம் - (நானம்) கஸ்தூரி. "நகரத்திற்கு ஞகரம் போலி" "நவ்வொடு சில்வழி ஞஃகா னுறமு மென்மருமுளரே" (நன்னூல் - எழுத்து. 124) அமர் - பொருந்திய. குழலீர் - கூந்தலையுடையவரே. ஞானத்தமர் - தெளிவோடு அமர்ந்திருக்கின்ற எனினுமாம் சீனத்தமுதம் - சீனிச் சர்க்கரை; சீனப்பாகு. மோனத்தனம் - மௌனத் தன்மை. "மோனம் என்பது ஞான வரம்பு" என்றபடி ஞானிகளைச் சேரலுடைய மௌனத் தன்மை உங்களுக் கேன் வரவேண்டுமென்றான்.

எதிர் மொழி கொடுத்தல்

ஞிமிறுழு தார்ப்புய நீயெய்த தின்றெங்கள் நேரிழைதன்
விமுதன வேழ மதுபலி யாதென்றல் விசுமணங்
கமழுல காளுங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பிற்
நமர் சிறி தேயறிந்தாற் பெரிதாகு நடுக்கங்களே. (38)

[கு. ரை.] ஞிமிறு—வண்டு. உழு—கிண்டுகின்ற. தார்—பூமாலை. "கொள்ளை வண்டிழிந்து தாது குடைந்து முக்குழவு" (பிரபுலிங்கலீலை—கைலாசகதி. 2) எய்தது—நீ குறிவைத்து எய்தது. புய—தோளையுடையவனே; அண்மைவிளி. நேரிழை—பெண். விம்மு—பருத்த தனம் வேழம் - முலையாகிய யானையை "முலையானைக் கோடணிந்தமார்பு" (சிதம்பரச் செய்யுட்கோவை - 25.) அது — அம்முலை யானை. பலியா—வாய்க்காது. நமர்—நம்மவர். நடுக்கங்கள்—அச்சங்கள்

7. பாங்கியற் கூட்டம்

(பாங்கியால் தலைவியைத் தலைவன் கூடுவது)

[தன் உள்ளத்தில் கொண்ட காதலைத் தலைவன் பாங்கிக்குக் கூறுவது]

தலைவனுட்கோள்சாற்றல் :

ஞெகிழியைப் போலென்றுங் காயா துமக்கு நிழலிடுகோ
முகிழிளையாமுலை முத்தனி கோபன் முகாரியை நேர்
ககவளி பாடுங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பிற்
சிகழிய நாடு மயிர்ப்பாவை யிரொன்று செப்புகவே (39)

[கு. ரை.] ஞெகிழி-நெருப்புறுகொள்ளி. என்று-சூரியன். இடுகோ - இடுவேனே. முகில் - அரும்பு. பண்முகாரி - முகாரிப்பண். ககம் - பறவை. அளி-வண்டு. சிகழி-பூமாலை. மயிர்-கூந்தல். ஒன்று-ஒருசொல்.

குலமுறை கிளத்தல்

[பாங்கி இருவர் குலமுறை கூறி இயையாதென மறுத்துரைத்தல்]

" ஞொள்குங் களங்கனுங் கொவ்வா வடுவுற்று நோக்கிநெறி
கொள்கும் புவிமன்ன வியவள் கானக் கொடிச்சியசுரமுன்னர்க்
கள்குன் றெறிந்த குழந்தைக் குமாரர் கபிலை வெற்பிற்
றெள்குஞ் சரங்கொய் யுளைபாவ லர்க்கரு டேர்மன்னனே " [40]

[கு. ரை.[; "(பி. ம்.) களங்க நுமக்கெய்தவோவுற்று" கள்குன்று - களவுத்தன்மையுடைய கிரவுஞ்சமலை எறிந்த—பிளந்த, குன்றமெறிந்ததுவும், ஞொள்கும்-மெலிவுதரும், கானம் கொடிச்சி-காட்டிலுள்ள குறப்பெண், நெறிக்கொள்கும்-இராச நீதியைக் கொள்ளும், தெள்குஞ்சரம்-தெளிவான அழகினையுடைய யானை, கொய் உள்-கொய்து கட்டிய புறமயிரையுடைய குதிரை " அலங்குளைப் புரவி (புறம்-2)

• புலவர்க்குப் புரவலன் பரிசுகள்:- "வாரிக் கொள்ளா வரை மருள் வேழம்... பொலம்படைப் பொலிந்த கொய்சுவற்புரவி... இலம்படு புலவரேற்றகை நிறைய... மழை சுரந்தன்ன ஈகை நல்கிக் குன்று சூழிருக்கை நாடு கிழவோனே"

(மலைபடு கடாம் 572-580)

தலைவன் தலைவியையுயர்த்தல்

"தலமே யறியச் சகதியி னுறுசெந் தாமரையின்
மலரேன் பரன்றிரு மாலோ ளளிக்க மகிழ்ந்தனன் பொற்
கலமே புனையுங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
நலமே குலங்குலம் வேறுள தோசொலு நாரியர்க்கே" [41]

[கு. ரை.]: தலம்–உலகம், சகதி-சேறு, நாறு-மணக்கின்ற பரன் – சிவபெருமான், ஏன் – எதற்கு, சிவபெருமானைத் திருமால் ஆயிரம் தாமரை மலர்களால் அருச்சித்தான் என்பது வரலாறு, நலம் அழகு, குலம் – சாதி, நாரியர் – பெண்கள், குலங்குலம் – சொல்மடக்கு சேற்றில் பிறந்திடுங் கமல மலர் கடவுளின் திருமுடியின் மேலிருக்கும் (குமரேச சதகம் அவையடக்கம்) "சேற்றுவளர்தாமரை" (புறம் 27)

"குணம் பேசக் கணக்கிலை நீ மெய்யினெழினலம்
பார்ப்பதன்றே! கடன் மெல்லியற்கே"

(திருக்குற்றாலக்கோவை-94)

"காவின்ற பூங்குழ லாய் நலமே குலங் கன்னியர்க்கே" [104]

"நச்சுந்தருமிசைத் தேன் பிறந்தாலு நவையிலை யாற்
கச்சுந் தடமுலையாய் நலமே குலங் கன்னியர்க்கே"

(105 குலோத்துங்க சோழன் கோவை)

"கற்றவர்க்கும் நலனிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
யுற்றவர்க்கும் வீரர் என்றுயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
கொற்றவர்க்கு முண்மை, ஞானகோதில் ஞானசரிதரா
நற்றவர்க்குமொன்று சாதி நன்மை தீமையில்லையாம்"

(வில்லிபாரதம் வாரணவதம்-68)

நீ வரைகென்றல்

[நீ தலைவியை மணஞ்செய்து கொள்க என்று பாங்கி தலைவனுக்குக் கூறல்]

"தாதவிழ் கோதைக்குக் காதல் கொண்டானந் தமரறியப்
பேரதவ நேக நிதியளித் தேகலன் பூட்டியுமை
காதலர் ஞானக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
ஆதவர் வாழ்த்த மணஞ்செய்து கூடினன் றாடவரே" [42]

[கு. ரை.]: தாது–மகரந்தப் பொடி பூவிதழ், அவிழ்–விரிகின்ற, நெகிழ்கின்ற, கோதை–பூமாலை அணிந்துள்ள தலைவி, நம் தமர் — நமது சுற்றத்தார், நிதி–மூலவிலைப்பணம், கலன்–ஆபரணம், உமை காதலர் — பார்வதிபுத்திரர், ஆதவர் — அந்தணர், ஆடவர்–ஆண்மக்கள், தலைவரெனினும், ஆம்

"கோடி ரெல்வனைக் கொழுமடற் கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயிற்
றெண்கழிச் சேயிறப் படூஉந்
தண்கடற் சேர்ப்ப வரைந்தனைக் கொண்மோ"

(ஐங்குறுநூறு)

"நைந்தீர் குடைசிறி தோடா முலைகண்டு நைந்துசிந்தை
நொந்தீர் கிளைநும ரேமிய விண்ணவர் நோக்கலரூர்
வெந்திக் கடவிய வேலர்செங் கோட்டில் விதித்தமறைச்,
செந்திக் கடவுள் வலம்வந்து கொள்ளல் சிறப்புடைத்தே"
(திருச்செங்கோட்டுக் கோவை-100)

பாங்கி சொல் மறுத்தல்

திருமா ளிகைதழ லாற்றப் பகரேதி நீர்த்தங்கொடு
வருமா றெனச்சொலு மாறெக்கு மேயெழு மைப்பிறப்பாங்
கருமாலை நீக்குங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
பொருமாரன் போர்க்கு மணஞ் செய்து கூடென்றல் பொற்றொடியே
(43)

தழலேற்ற [பி. ம்.] வாறெக்குமே [பி. ம்.]
கருவாழி [பி. ம்.]

[கு. ரை.] தழல் ஆற்ற—பற்றிய தீயைத் தணிக்க, பகீரதி—கங்கைநதி, வரும் ஆறுஎன—வரும்படி சொல்லென்று. ஆறு—விதம், எழுமை—ஏழு, கரு [கருப்பம்] உற்பத்திக்குக் காரணமாகிய, மாலை—மயக்கத்தை, பொருமாரன்—போர் செய்கின்ற மன்மதன். "குழைக்குப்புரஞ் சென்ற கூர் வேலெனும் விழிக் கூற்றுக்கின்று, பிழைத்துப் பெறுவதன்றோ நாளை நான் பெறும் பேரின்பமே"

(திருச்—கோவை 101)

நாமக்குழலை வரைந்து கொண்டே வெங்கைத் தாணு வெற்பிற், காமக்கனலைத் தணிப்பாய் என்றோதிய காரிகைநீ, நாமக் கிணறு அகழ்ந் தந்நீர் கொடு நன்னகரிற்பற்றி, வேமக்கனலைய விப்பாயென் போர்களின் வேறல்லையே"

(திருவெங்—கோவை 98)

தலைவன் கையுறை கொடுத்தல்

திட்டிய வாசுகஞ் செய்க்கய லேற்றுந் திறையிடப்போர்
நீட்டிய கூர்விழி யாயிம் மணியை வெண் ணீறுலகிற்
காட்டிய வேலர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
பூட்டிய லாகக் கனதன மேவுமும் பூங்கொடிக்கே (44)

[கு. ரை.] ஆசுகம்—அம்பு, செய்கயல்—வயலிலுள்ள கெண்டைமீன், இவ்விரண்டும் மகளிர் கண்களுக்கு உவமையாம் பொருள். திறையிட—கப்பம்தர; மணி—முத்தணி, பூட்டு இயல்—பூண்பதற்குரியது, தனம்மேவும்—முலையில் பொருந்தும், பூங்கொடி—தலைவி, முருகக் கடவுள் ஞானசம்பந்தராகத் தோன்றித் திருவெண்ணீறே உலகில் உண்மைப் பொருளெனக் காட்டியவர் ஆகலின் வெண்ணீறுலகிற்காட்டிய வேலர் என்றார்.

உண்டெனை மறுத்தல்

[தலைவன் கையுறையாக முத்துமாலையைக் கொடுக்கவும் பாங்கி இவை எம்முடைய நாட்டிலும் உள்ளதெனக் கூறி வாங்க மறுத்தல்]

துள்ளணி யாய்புன னாடர்முன் யாங்கள் தொடுவதெல்லாம்
வெள்ளணி யானை மருப்புமுத் தேயிவை வேண்டிலபூங்
கள்ளவிழ் சோலைக் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பின்
மள்ளர்தங் கட்கிங் களப்பதெல்லாமிவ் வளைமுத்தமே (45)

[கு. ரை.]

துள்—ஒலிக்கின்ற, அசைகின்ற எனினுமாம் அணியாய்-ஆபரமணிந்தவளே, புனல்நாடர் முன்—மருதநிலத்துத் தலைவர்முன்பு, யாம்—குறிஞ்சிநிலத்தவராகிய நாங்கள், தொடுவது—அணிவது, தீண்டுவது, யானை மருப்பு முத்தே-யானைத் தந்தத்தினின்றும் தோன்றிய முத்துக்களையே, மள்ளர்தங்கட்கு—குறிஞ்சி நில மக்களுக்கு, ''குறவர் கானவரே மள்ளர் குன்றவர் புனவரோடும், இறவுளர் குறிஞ்சி தன்னிலின்புறு மாக்கள் பேரே'' [சூடாமணி -2-66 பாட்டு] அளப்பது—கூலியாக அளந்து கொடுப்பது, இவளை முத்தமே—சங்கினின்றும் பிறந்த இந்த முத்துக்களையே, ''கவைக் கானண்டளையினில் நத்தீனு முத்தினையே'' [மறைசையந்தாதி] இவை வேண்டில—இம் முத்தம் மிகுதியும் எம்மிடமுள்ளனவாகலின் இவற்றையாம் விரும்புவதில்லை.

படிபுடை சூழும் கடலில் உலாவும் பணிலமணி
பிடியும் இந்தாரும் எனச் சொல்லினீர் விப்பிரர்விடுத்த
அடல்மழுவேந்திய சோமீசர் மல்லைவயலிற் செந்நெல்
முடிநடு மள்ளரளப்பார் வலம்புரி முத்தங்களே

(மல்லைக்கோவை — 36)

''ஒண்டொடியூர், குன்றுலி நாட்டவர் கொள்ளாருனது குளிர் முத்தமே'' (மறைசையந்தாதி—22)

தலைவி கையுறை ஏற்றமை பாங்கி தலைவற் குணர்த்தல்

தூவியனிச்ச மிதிக்கச் சிவக்குந் துணையடியாள்
மேவி நகிலத் தணிந்துகொண் டேபுவி மீதின் முன்னூற்
காவிய மோதுங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
ஓவிய மாவிபெற் றாங்கெனப் பூரித் துவந்தனளே **(46)**

[கு. ரை.] ''ஒருவன் திருவுள்ளத் திலழகொழுக எழுதிப் பார்த்திருக் குமுயிரோவியமே'' (மீனாட்சி—பிள்ளை வருகை 9.) ''அத்தன்மனத் தெழுதிய வுயிரோவியம் ஆடுகஅம்மனையே (அம்மானைப் பருவம் 7.) தூவி—அன்னத்தின் சிறகு. அனிச்சம்-அனிச்சப்பூ. இவை மிகவும் மெல்லியன. ''அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம்'' (1120 குறள்) ''மோப்பக் குழையு மனிச்சம்'' (குறள் 90) ''அனிச்சப் பூக்கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்லபடாஅபறை'' (குறள் 1115) நகிலம்—முலை. அம்—சாரியை. முன்னூல்—முதல் நூலாகிய. காவியம்—பொருளிலக்கண நூல். இது முருகக் கடவுள் அகத்தியருக்குப் பொருளிலக்கணம் உபதேசித்த வரலாற்றினை யுட்கொண்டு கூறியது. ''அகத்தியனுக் கோத் துரைக்கும் அண்ணல்.'' (சிவப்பிரகாசம்) ''குறுமுனி தேறநெடு மறை விரித்தோய்'' (கல்லாடம்) ''இறைஞ்சுங் கலசக் குறுமுனிவற் கினியவியற் சொற்றனிவுணர்த்து மொழியுங் கனிவாய் தமிழ் மணக்கும் முருகா முத்தம் தருகவே. (திருச்செங்கோட்டுப் பிள்ளைத்தமிழ்) ஓவியம் ஆவி பெற்றுங்கு—ஓவியம், உயிர் பெற்றது போல (இல் பொருளுவமையணி).

பாங்கி குறியிடத் திறைவியைக் கொண்டு சேறல்

நெரியுங் கலைமதிக் கோட்டா லுடைந்து செந்தேனருவி
சொரியும் பொழின்மலர்க் காவூடியாமின்று தோன்றியசங்
கரிதன் கரந்நிற் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
விரியும் புனலின் மலர்கொய்து நாமினி மீளுதுமே (47)

[கு. ரை.] கலைமதி—கலைமானுடைய சந்திரன் (மோதுவதால்) கோட்டால்—மலைச் சிகரத்திலுள்ள, மரக்கொம்பிலுள்ள எனினுமாம். உடைந்து—செந்தேன் கூடுகள் உடைந்து. செந்தேன் அருவி சொரியும்—சிவந்த தேனை யருவியாகச் சொரியப் பெறுகின்ற. பொழில் மலர் கா ஊடு—மலைப் பொழிலாகிய பூஞ்சோலையில். புனல் - சுனைநீர். மீளுதும்—மீண்டுவருவேம்.

முன்னிரண்டடிகளுடன் மறைசையந்தாதி 97-ம் பாடலில் வரும் "சிலைக்கோடு மேல் வைத்த கோற்றேனுடைந்து செந்தேறல் வயற்றலைக் கோடும் வேதவனப் பெருமான் மலைச்சங்கரிதன்" என்னும் அடிகளை ஒப்பு நோக்கியறிக.

தலைவியைக் குறியிடத்துய்த்து நீங்கல்

[கூட்டிச் சென்ற தலைவியைக் குறியிடத்து நிறுத்தி விட்டுப் பாங்கி நீங்குதல்]

தேங்கமழ் சோலையின் முல்லையுங் காந்தளுஞ் செண்பகமும்
நாங்கூறின் றெம்மைப் பழித்தன கொய்து தருமளவுங்
காங்கயன் வேற்கைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
ஈங்கிரு வேல்விழி யாய்நள ராம விமைப்பொழுதே (48)

[கு. ரை.] தேம்—தேன், மணம். எம்மை—எம்முடைய அவயவங்களை, முல்லையரும்பு பற்களையும் செங்காந்தள்மலர் கைகளையும் செண்பகமலர் நாசியையும் பழித்தனவென்க. கொய்து—அவற்றைப் பறித்து

பூாங்கி நந்தலைவியிப்பால் வந்தனளென ஆங்கவன் மகிழ்ந்து முத்தலங்களித்தல்

தைய லீனக்கொடு வந்துமுன்சொன்ன தலத்தில் வைத்துக்
கொய்ய மலர்த்தொடை யான்றனக் கவ்வனங் கூறமெச்சிக்
கைய்யம் புயத்தர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பிற்
ரெய்யுங் கொடியிடை யாட்குமுத் தின்ருெடை சூட்டினனே
(49)

[கு. ரை.] தையல்—தலைவி. தலம்—குறியிடம். கொய்—கொய்த. அம்மலர்—அழகிய பூக்கள். தொடையான்—மாலையணிந்த தலைவன். அவனம்—அக்குறியிடத்தே நிறுத்திய விதம். கை—கரங்களையும். அம்புயத்தர்—அழகிய தோள்களையுடையவர். கை அம்புயத்தர்—கரங்களாகிய தாமரை மலர்களையுடையவர் எனினுமாம். ''தாமரை பழித்த கை மருங்கமைத்தோய்'' —(கல்லாடம்-2) கொடியிடையாள்—தோழி. தொடை—மாலை. சூட்டினன்—வெகுமதியாகச் சூட்டினான்.

இறைவி மயில் நடங்காண்டல்

தொடிக்கச் சியர்நட மென்னவக் கற்பகச் சோலைமயில்
நடிக்கச் சுரும்பிசை பாடப்புள் ளாயம் நலனீதெனக்
கடிப்பொற் புயத்தர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
இடிக்கைக் குறவர் புதல்விகண் டின்புற் றிருந்தனளே (50)

[கு. ரை.] தொடி—வளையல். கச்சியர்-கச்சணிந்த நாடக மாதர். நடம்என்ன — நடனமாடுவதுபோல. சுரும்பு—வண்டு. புள்ளாயம்—ஏனைப் பறவைக் கூட்டம். இது நலன் என்ன—இந்நடம் நன்றாயிருக்கிறது என்று சொல்ல. கடி—(சந்தன) மணம். இடிகை—இடிபோன்ற கைகள். பகைவரையழித்தலின் இடிக்கை என்றார். செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை (திருமுருகாற்றுப் படை).

நற்குறியானது நாயகி காண்டல்

தோளிடந் துள்ளக் குருகுக்கண் மார்பு துவரிதழ்வேள்
வாளிடமான வளியுந் துடிப்ப வெம்மைக்கண்டர்பங்
காளிடர் தீர்த்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
நாளிடம் நல்ல தெனவிருந் தாள்வரு நன்மையென்றே

(51)

[கு. ரை.] இடம் என்பதனை தோள் கண் மார்பு இதழ் என்பவற்றோடு கூட்டுக, பெண்களுக்கு இடந் துடித்தல் நற்குறியாம். ''எஞ்சல வீண்டு தாமிடந்துடித்தலால் அஞ்சலென்றிரங்குதற் கடுப்பதியா தென்றாள்,'' [கம்பர்-சுந்தர-காட்சிப் படலம்] குருகுக்கண்—வண்டு போன்றகண் (குருகு-பறவை) 'விழிக்குவண்டும் தாமரையும்' உவமானம், துவர்—சிவப்பு, இதழ்—உதடு, வேள்—மன்மதன், வாழிடம் என்பது எதுகை நோக்கி வாளிடம் என வந்தது, வேள்வாழ்தற் குரிய தேராகவுள்ளது தென்றல் ஆதலின் அதனை வேளிடமானவளி என்றார். காற்று என்னும் பொருள்தரும் வளிஎன்பது, வேள் வாழிடமான என்னும் அடைமொழியால் ஏனைய காற்றை யொழித்துத் தென்றற் காற்றை யுணர்த்திற்று. மைக்கண்டர், சிவபெருமான், எம்மைக் கண்டர் என்பது நூலாசிரியார் சிவ சமயத் தரென்பதை யுணர்த்திற்று. பங்காள்-பார்வதி ''தாய்க்கு இளைய பிள்ளை மேல் விருப்பமதிகமாதலின் பங்காளிடர் தீர்த்த, குழந்தைக் குமாரர்'' என்றார். இடர்—மனதிற் றுன்பம், நாளிடம்—இந்நாளும் இவ்விடமும், நன்மை என்று—நன்மை தருவன என்று

வண்டுறை தாரோன் வந்தெதிர்ப்படுதல்

தௌவை யெனச்சதபத்திர மாதைத்தன் றையனிற்குஞ்
செவ்வயற் காதலர் வந்தெய்த லாற்றிரட் சூரருரங்
கௌவியல் வேற்கைக் குழந்தைக் குமாரர் கயிலைவெற்பில்
கொவ்வை யிதழ்த்திருக் கண்டுதன் னாகங் குளிர்ந்தனளே
(52)

[கு. ரை.] சதபத்திரம்—தாமரைமலர் ''செய்யோளமர்ந்த செம்பொற்றாமரை'' (பெருங்கதை 1-38) மாதை—இலக்குமியை, தௌவை—மூதேவி, என—என்று சொல்லும்படி (சொல்லெச்சம்), தையல்—அழகிற் சிறந்து விளங்கும் தலைவி, செவ்வயல்—அழகான இடம் (எதிரிடம்), காதலர்—தலைவன், சூரர் உரம்—அசுரர்களின் மார்பு, கௌஇயல்—கவ்வுகின்ற தன்மை, கொவ்வை இதழ்—கொவ்வைக்கனி போன்ற சிவந்த உதடு, திரு-தலைவி, கண்டு-தலைவனைக் கண்டு, ஆகம்-உடம்பு, மகிழ்ச்சியால் உடல் குளிர்ந்தனள், சதபத்திரம்—நூறு இதழ்களை யுடைய தாமரைமலர், சேற்று வளர்தாமரை நூற்றிதழ் அலரின் (புறம்-27) தாமரை மலரில் வீற்றிருப்போள் திருமகள் ஆதலின் அவளைச் சதபத்திரமாது என்றார், எதிர்நிலையணி.

கலவியின் மகிழ்தல்

நளினத் திருமுகம் வேர்ப்பப்புள் ளார்ப்ப நகக்குறிகள்
புளினக் குவிமுலை மீதே யழுந்தப் புளகித் துள்ளங்
களியுறப் பெற்றுக் குழந்தைக் குமாரர் கயிலைவெற்பில்
அளிநற்று பூங்குழ லாய்நன்று நாமின் றணைந்தனவே (53)

[கு. ரை.] நளினம்—தாமரைமலர், புள்—வண்டு, கைவளையல், புளினம்—மணற்குன்று, இது முலைக்குவமை, புளகித்து—மெய்ம்மயிர் சிலிர்த்து, அளிநற்று—வண்டுகள் விரும்புகின்ற.

தலைவன் தலைவியைத் தண்புனம் விடுத்தல்

நாமிங் கிருக்கி லுமைத் தேடி யாய நளினமின்னார்
தாமிங்கு வந்தெங்ஙன் போயின ளென்னத் தளருமுன்பூங்
காமிஞ்சு சோலைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
போமின் குவளை விழியிர்நின் காவற் புனந்தனக்கே (54)

[கு. ரை.] ஆயம்—மாதர் கூட்டம், மின்னார்—தோழியர், மிஞ்சு—மிகுந்த, காவாகிய சோலை எனக் கூட்டுக, போமின்—போவீர், குவளை—நீலோற்பலமலர், புனம்— தினைக்கொல்லை,

பாங்கி தலைவியைக் குறியிடத் துய்த்து நீங்கல்

[கூட்டிச் சென்ற தலைவியைக் குறியிடத்து நிறுத்தி விட்டுப் பாங்கி நீங்கல்]

"புனந்தனிற் றலைவியைப் பொதும்பரில் வைத்து
வனந்தனிற் பாங்கி மலரெடுத் தளித்தல்"

(பொதும்பர்—சோலை)

நித்தில வெண்ணகை மாதே பகைத்தன நீண்மலர்க
ளத்தனை யுங்கொய்து கொண்டு வந் தேனம ரேசற் கென்றுங்
கைத்தன மான குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
சித்திரமாக வணியு மிழந்த சிகழிகைக்கே [55]

[கு. ரை.]; நித்திலம்-முத்து, நகை-பல், பகைத்தன-நின் உறுப்புடன் பகை கொண்டவைகள், அமரேசன்-சிவபெருமான், கைத்தனம்—கைப்பொருள், "தம்பொருளென்ப தம் மக்கள்" [குறள்] சித்திரம்—அலங்காரம், இழந்த—பொலிவிழந்த புணர்ச்சியால் நீங்கிய

தலைவியைப் பாங்கிற் கூட்டல்

[பாங்கி தலைவியை மகளிர் கூட்டத்தில் சேர்த்தல்]

"வேயுயர் மொய்ம்புடை மென்மொழிப் பாங்கி,
ஆயிழை தன்னெடு மாயங்கூடல்"

நிருங் கமழங்கும் பொன்னூ சலுமாடி நிறைவளத்நிற்
ருருங் கனியுந் தளிருங்கொய் தேயைந் தருவுமேழு
காருஞ் செறியுங் குழத்தைக் குமாரர் கபிலை வெற்பில்
கூருங் கணைவிழி யாயிவி யாயத்தைக் கூடுதுமே [56]

[கு. ரை.]: தார்–பூந்தார் பூ, ஐந்தரு–ஐவகை நிலத்தற்குரிய மரங்கள், ''ஐந்திணை மரனும் பைந்தளிர்க் கொடியும்,'' கொங்குவேள் 2-13-14 ''சந்தான தேவதாரங் கற்பகம், மந்தாரம் பாரிசாதமைந்தரு வருக்கம்'' பிங்கலம், இம்மரமைந்தும் தெய்வ மரபென்ப (பிங்கலம் 2650-51) வேய்–முங்கில், மொய்ம்பு-தோள், ஆயிழை–தலைவி, எழுகார்-ஏழு வகையான மேகம் ''புட்கலாவர்த்தம், சங்காரித்தம், ஆவர்த்தம், சம்வர்த்தம், துரோணம், காளமுகியொடு நீலவருணம் என ஏழு முகிலின் பெயராகும்மே'' (சேந்தன் திவாகரம்), ஆயம்—தோழியர் கூட்டம்,

பகற் குறியிடையீடு

[பகற் காலத்தில் குறித்த இடத்தில் கூடி வந்த தலைவன் தலைவியர் கூட்டத்திற்கு இடையில் சில தடைகள் நிகழ்தல்]

பாங்கி இறைவனைக் குறிவரல் விலக்கல்

நுன்பயி ரேனலுஞ் செங்குர லிங்க நொடிக் கொருகால்
நன்பது வாக வருமெங்க ளன்னை நமரும் பொல்லார்
கன்பவி ரன்டர் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
பன்பல முன்போல் வரா தொழி நீ யெங்கள் பாலண்ணலே ''
[57]

[கு. ரை.]: பயிர் ஏனலும் – பயிரா இருந்த திணையும், செங்குரல்—சிவந்த கதிர்களை ஈன்று விட்டன (ஆதலின்) நொடி–ஒரு கை நொடிநேரம், நண்பு–பிரியம், நமர்-நம்மவர், வேடர்; பொல்லார் — கொடியவர், பாங்கி யிறைவனைக் குறிவரல்

விலக்கல்—இனி அடிக்கடி தாய் வருவள். வேடர் பொல்லாதவராதலின் நீ வந்தாற்பழியுண்டாகு மென்று பாங்கி தலைவனைப் பகற்குறியிடத்தே வராதேயென்று கூறுதல்

மாவேடருக் கஞ்சியன் றேன்புனத்தே மரமாய்ப் பிழைத்தன
னெங்கள் செங்கோடையில் வானவனே ''

(திருச்செங் - கோவை-102)

பாங்கி இறைவியைக் குறிவரல் விலக்கல்

நுலான நுண்மருங் காயுந்த னான நோக்கியன்ன
யாலாலம் போற்கண் வெறித்தகன் றாழ கானசெங்கட்
காலாயுதத்தர் குழந்தைக் குமாரர் கயிலை வெற்பில்
மேலாயும் போதினி லேதாகு மோபின் விளைவதுவே [58]

[கு. ரை.]: ஆன-ஒப்பான, மருங்கு-இடுப்பு, ஆனனம்-முகம், ஆலாலம்-விடம், கண்வெறித்து-கண் பார்வையால் பயமுறும்படி பார்த்து, காலாயுதத்தர்-கோழிக்கொடியுடையவர்

தலைவி ஆடிடம் நோக்கியழிதல்

[தலைவி தான் ஆடிய இடங்களை விட்டுப் பிரிதற்கஞ்சி மனமழிதல்]

நெடுவரைச் சாரலு மூசலுமாடு தெண்ணீர்ச் சுனையும்
உடுபதி தாவு சிலம்பெதிர் கூவலு மும்பருய்யக்
கடுவுணி சேயர் குழந்தைக் குமாரர் கயிலைவெற்பில்
நடுகழு தும்மினி வந் தென்று காண்பது நன்னெஞ்சமே [59]

[கு. ரை.] வரைச்சாரல்-மலைப்பக்கம், ஆடு-நீராடுகின்ற, உடுபதி-சந்திரன், தாவு-பாய்கின்ற, சிலம்பு-மலை, எதிர்கூவல்-எதிரொலி உண்டாகுமாறு கூப்பிடுதல், கடு உண்ணி—சிவபெருமான், சேயர்-புத்திரர், நடு-நடப்பெற்ற, கழுது-பரண் ''பணவையிதணம் கழுது பரணே'' [சேந்தன் திவாகரம்-செயற்கை வடிவப் பெயர்த் தொகுதி]

தலைவற்கிரங்கல்

[தான் இல்லாத புனத்தைக்கண்டு தலைவர் வருந்து வரெனத் தலைவியிரங்கல்]

நேசப்பண் பேயு மென்னையில் லாதன வின்புனமு
மாசற்ற வென்றன் குரலரி தானதும் மார்பிற்பிர
காசப் புரிநூற் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
ஆசற்ற நண்பர்கண் டென்படு வாரென் றறிகிலமே (60)

[கு. ரை.] நேசப்பண்பு-அன்புத்தன்மை, புனம்-தினைப் புனம், குரல்-பறவையோட்டும் ஒலி, தினைக் கதிர் எனினுமாம், அரிதானது-இல்லையானது, புரிநூல்-முப்புரிநூல், நண்பர்-தலைவர், என்-என்ன துயரம்.

ஆடிடம் விடுத்துக் கொண்டகறல்

[தலைவியைப் பாங்கி விளையாடிடத்தை விடுத்துக் கொண்டகறல்]

நைந்துளம் வாடித் திகைத்தேனைத் தேடியென் னன்பரும்பால்
எந்தனக் கென்சொலிப் போயின ளோவென் றிடிற் கிளிகாள்
கந்த முயர்த்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
சந்தகில் சூழுமெம் மூர்நாடி யேவரச் சாற்றுகவே (61)

[கு. ரை.] நண்பர்-தலைவர், கந்தம்-வாசனை, சந்து அகில்-சந்தன மரங்களும் அகில் மரங்களும், நாடி-விரும்பி.

பின்னா ணெடுந்தகை குறிவயினீடு சென்றிரங்கல்

[அடுத்தநாள் தலைவன் குறியிடமாகிய மாதவிப் பந்தலிடத்து வந்து காலம்நீட்டித்திரங்கல்]

நொய்ய நுசுப்புக் கலையதெங் கோவா னோக்கிநிற்குஞ்
செய்ய புனத்திற் குரலதெங் கோவமர் செய்கதிர்வேற்
கையர் கடம்பர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
வெய்ய புனமிப் புனமலவோசொலும் வேள்கற்கியே (62)

(கு. ரை.) நொய்ய-நுட்பமாகிய, நுசுப்பு-இடுப்பு, கலை-மான்போன்ற தலைவி, எங்கோ-எங்கே, குரல்-தினைக்கதிர்கள், வெய்ய-கொடிய, தலைவியும் தலைவியாற் காக்கப்படும் தினைக் கதிர்களுமில்லாதபுனம் தலைவனுக்குத் துன்பம் தருவதாயிருத்தலின் வெய்யபுனம் என்றான் வேள்கற்கி-கிளி, (மன்மதன் குதிரை) "மன் மதன் விருதின் வகை பதினெட்டும் வழுத்தக் கேண்மின் வண்டமிழ்ப் புலவீர், தேர்தென்றற் காற்று சிறந்தப்பரிகிளி"

(மன்மதன் பிரதாபாலங்காரக் கொத்து-1)

தலைவன் சிற்றூர் நோக்கிச் செல்லல்

நோக்குங் குயிலினங் காள்மயில் காள்வின் னுதலிசெல்லும்
போக்கிங் கறிந்தில வோவறி யோமெனும் போதமரைக்
காக்குங் கருணைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
தாக்குஞ் சரவர்தஞ் சீறூர்க் கதர் நினைச் சொலுமே (63)

[கு. ரை.] சிற்றூர்-தலைவியின் ஊர், (குறிச்சி) வில்நுதலி-வில்லைப் போன்ற வளைவான புருவமுடைய தலைவி, போக்கு-போவதற்குறிய வழி, அறிந்திலவோ-அறியவில்லையோ. அறியோம்-அசுரர் செய்யும் கொடுமையிலிருந்து தப்புவதற்கு உன்னையன்றி வேறுவழி தெரிந்திலம், எனும்போது-என்று முறையிட்ட காலத்தில், அமரை-தேவர்களை, ர-தொகுத்தல் விகாரம், தாக்கும்-பாய்கின்ற, சரவர்-அம்பையுடைய வேடர், சீறூர்-சிற்றூர், அதர்-வழி.

— பகற்குறியிடையீடு முற்றிற்று. —

13. இரவுக் குறி

[தலைவியாலும் தோழியாலும் காட்டப்பெற்ற குறி யிடத்தை இரவிலும் தலைவன் அடைந்து தலைவியைச் சார்தலாம்] "மாறூரெயினர் வனங்கடந் திறைவன் சீறூர் புக்குச் சேடியைக் காண்டல்."

நௌவியம் பான விலோசனக் கோகநகையிருக்க
எவ்வகை யெய்திடு மோவென் றிருப்பவங் கேபணியைக்
கௌவியுண் மஞ்ஞைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
தெய்விக மாகவவ் வேளையிற் சென்றனள் சேடியுமே (64)

[கு. ரை.] நவ்வி-பெண்மானையும். அம்புஆன-அம்பை யும் ஒப்பான. விலோசனம்-கண்கள். கோகநகை-திருமகளை ஒப்பான தலைவி. இருக்க-இல்லில் காவலில் இருக்கவும். எய்திடுமோ-வருவாளோ. இருப்ப-தலைவன் ஏக்கமுற்றிருக்க. பணி-பாம்பு. மஞ்ஞை-மயில். தெய்விகம்-தெய்வாதீனம். தற்செயல். மகளிர் கண்ணுக்கு மான் உவமையாதல் "மானுதிக் கண் முலையீருங்கள் வார்தடங்கண் பொருங் கலைமானென்று" [மறைசையந்தாதி - 12] அம்பு ஒப்பாதல், "அம்பிலுங் கொடிய கண்ணள்." (விவேகசிந்தாமணி)

பாங்கி தலைவனைவினுதல்

பனிதங்கு திங்க ளிலாதவி யாமினிப் பாதியினி
தனிவந்த வல்லமை தானெளி தோதெய்வத் தந்திதந்த
கனிபங்கரான குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
குனிவெஞ்சிலைக்கை யெயினர்தங் காவலிற் கொற்றவனே
(65)

[கு. ரை.] இபாதியாமினி-இந்த நடுராத்திரி, தெய்வத் தந்தி தந்த-ஐராவதயானை வளர்த்துத்தந்த, கன்னி-தெய்வயானையை, பங்கர்-இடது பக்கத்தில் உடையவர், எயினர்-வேடர்.

தலைவி தலைவனைக் காண்டல்

பாதியதான விருட்போதின் மெத்தப்பதம் வருந்தத்
நீதில வாங்கவ ளெய்தல்கன் டோடியச் சேடிசொலக்
காதிய வேற்கைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
மாதிய லாயெதிர் வந்துகன் டாள்முடி மன்னனையே (66)

[கு. ரை.] சேடி–தோழி, காதிய–பகைவரைக் கொன்ற, மாது–தலைவி, இயலாய்–மெதுவாய்.

காணரிதான கங்குல்வாய் வந்த பூணவிர் கொங்கையைப் புணர்ந்திறை புகழ்தல்

பிரச மலர்க்குழல் மாதேவின் னோர்மெத்தப் பேயர்முன்னு
வரவ மறக்கட லைக்கடைந் தாரிரன் டாறுமலர்க்
கரவ ரருட்சேய் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
இரச மெழக்கலந் தென்போ லமுதுண்டி ராமலுமே (67)

[கு. ரை.] பிரசம்-வண்டுகள், பேயர்–மதிகேடர், அரவம் அற-வாசுகி யென்னும் பாம்பு உடலறும்படி. மலர் 'கரவர்–தாமரை மலர்போன்ற கரங்களை யுடையவர், ''தாமரை பழித்தகைமருங்க மைத்தோய்'' (கல்லாடம்) இரசம்–சுவை, இனிமை. கலந்து—உன்னைப் புணர்ந்து, அமுது–கலவியமுதம், உண்டு–அனுபவித்து, தேவர்கள் என்னைப்போலக் கலவியமுதுண்டு களிக்காமல் கடலமுதத்தை விரும்பிக் கடைந்து துன்புற்றனரென்றான் தலைவன். கனக்குங்குமப் புயமீராறுடையகைவேலர். (திருச்—கோவை—337)

இல்வயின் விடுத்தல்

பீதாம் பரன்றனின் றுஞ்சு நின் னன்னை பிறப்படுமுன்
னேதா னுமது மனையெய்து வீர்நவ ரத்தமணிக்
காதா ரிரண்டர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பிற்
பாதார விந்தச் சிலம்பலம் பாமற் பயோதரியே (68)

[கு. ரை.] பீதாம்பரன் தனில்-திருமாலைப்போல, துஞ்சும்-தூங்குகின்ற, அன்னை-தாய், பிறப்படுமுன்-கண் விழித்து வெளியே புறப்படுவதற்கு முன்பு, நவரத்நமணி-ஒன்பது வகையான இரத்தின மணிகள், "வைரமுத்த மாணிக்கம் பவளம்-மரகதங் கோமேதகம் வைடூரியம், நீலம் புருடராகமென்ன, நானிலம்புகழு நவமணிப் பெயரே" (பிங்கலம் — 436), பாதாரவிந்தம்-தாமரை மலர்போன்ற பாதங்கள், அலம்பாமல்-ஒலிக்காதபடி, பயோதரி-கரும்புபோன்றவள்.

14. இரவுக் குறியிடையீடு

15. வரைதல் வேட்கை.

[இரவுக் குறியிடையீடு பட்டதனல் தலைவி மணஞ் செய்து கோடலை விரும்புதல்]

நற்ருய் தலைவியை முனிதல்

புண்ணு வெரிந்தன வென்னுள நீயெங்ஙன் போயினையான்
பண்ணுத பாவம்பலித்தன வோநம் பழுதைமலர்க்
கண்ணு ரிரண்டர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
நின்ஞர் முலைமட வார்கேட்கி லெம்மைச் சிரிப்பர்களே (69)

[கு. ரை.] புண்ணு தொகுத்தல் விகாரம், மகள் இல்லில் இல்லாமை கண்ட நற்ருய் மனங்கொதித்தனள் என்பார் "புண்ணு எரிந்தன என்னுளம்" என்ருர், பண்ணுதபாவம்—செய்தறியாத கொடும்பாவம், வாய்த்தனவோ—பலித்ததோ, மணம் செய்யப் பெருத மகள் இல்லைவிட்டு வெளியிற் செல்லுதலாகிய இழி செயலுக்குக் காரணம் முன் செய்த பாவமே என்பார் "பண்ணுத பாவம் பலித்தனவோ" என்ருர். பழுதை — கயிறு, பழுதைமலர் — கயிற்றில்

கோக்கப்பெற்ற மலர் போல தொடர்பான, மகள் வெளியிற் சென்று வருகிருள் என்ற செய்தி பிறமகளிர் அறியின் அது தனக்கு (அவமதிப்பு) பழியா மென்பாள் "திண்ணூர் மூலமடவார் கேட்பினெம்மைச் சிரிப்பர்களே" என்ருள்.

16. வரைவு கடாதல்

[பாங்கித் தலைவனுடன் மணம் வினுதல்]

நற்ருய் வெறுத்தமை பாங்கி தலைவற்குணர்த்தல்

பூமாரி பெய்த வணைமீதி லன்னைதன் புத்திரியை
மாமாரின் மீதினிற் காணுதெழுந்து மனங்கொதித்துக்
காமாரி தந்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
தீமாரி போலப் பறக்கக்கண் சீறினள் நேர்மன்னனே (70)

[கு. ரை.] பூமாரி பெய்த அணை—பூக்களை மழைபோலச் சொரிந்தமைத்த மெல்லிய பஞ்சு மெத்தை, மார்—மார்பு, பு—விகாரத்தால் தொக்கது, காமாரி— சிவபெருமான், தீ—கோபத்தாலாகிய தீப் பொறிகள், மாரி போலப் பறக்க—மழைத்துளிகள் போல இடைவிடாது தெறிக்கும்படி.

உடன் போக்கு

[தலைவன் தலைவியைத் தன்னூர்க்கு உடன் கொண்டு போகுதல்].

பாங்கி தலைவற்கு டன் போக்குணர்த்தல்

(காவலதிகப் படுதலால் தலைவியையுன்னூர்க்குடன் கொண்டு போதியெனப் பாங்கி தலைவனுக்குக் கூறல்).

"உரவில்லிறையை யொண்டொடி யோடு மிரவில் வழி கடந்தேகுதி யென்றல்".

பெருகவிவ் வூரலர் தூற்றுமுன் னேயிந்தப் பேர்நிசிபோய்
அருக னெழுஞ்சம யத்தினின் னூர்புக வன்பர் நம்பாற்
கருணைய நான குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
இருணிற மென்குழல் மானைக் கொண்டேகங் கினிமன்னனே
(71)

[கு. ரை.] பெருக-மிகுதியாக, இவ்வூர்-இந்த ஊரிலுள்ளவர்கள், அலர்-தலைமகளது களவொழுக்கத்தையறிந்து கூறும் பழிச்சொல், தூற்றும்முன்—மிகுதியாகக் கூறிவதற்குமுன்பே, பேர்நிசி—பெரிய இராத்திரிக் காலம், அருகன்—சூரியன், எழுஞ்சமயம்—உதிக்கும் நேரம், நின்ஊர்புக—உன்னுடைய ஊரின்கண் செல்வதற்கு, அன்பர்—அடியார், மான் - தலைவி, கொண்டு—உடன் கொண்டு, அங்கினில் ஏகு—அவ்விடம் செல்வாய்.

ஆங்கவன் மறுத்தல்

"மானனையாளொடு மாது செல்வழியில் யானையுண்டென இறையஞ்சியச் சுறுத்தல்"

பேராத வோவியத் தாடி பங்காண்டலும் பேதலிக்கும்
போரானை கான்மிலங் கென்படு மோகோடு போம்வகையென்
காராருஞ் சோலைக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
வாராரும் பூண்முலை மாதே யிரவில் வழிகடந்தே (72)

[கு. ரை.] ஓவியந்தீட்டிய—(பி. ம்.)
ஓவியத்து-சித்திரத்தில், ஆடு-இபம்ஆடலையுடைய யானையை, பேதலிக்கும்-பேதலிப்பாள் போர்ஆனை-போர்செய்யும் யானை, என்படுமோ-என்னதுயர் படுவாளோ, வார் ஆரும்—கச்சணிந்த

பாங்கி கையடை கொடுத்தல்

'' ஆவலிற் பாங்கி யவ்வச்சமிகலக் காவலற்குரைத்துக் கையடை கொடுத்தல் ''

பைய விடையைக் கண்டமட் டேகிப் பின்பாகும்கொடு
வெய்யவை யானனச் சியமென் றஞ்சிவெஞ் சூரனிரு
கையை யழிக்குங் குழந்தைக் குமாரர் கபிலை வெற்பில்
ஐய மினித்நவிர் கொண்டே யிவளுன் னடைக்கலமே (73)

[கு. ரை.] பையமிடை (பி. ம்.)
கையடை—அடைக்கலம், பைய—மெல்ல, மிடை-நெருங்கிய தூறு, ஐயானனம்-சிங்கம் கொடு வெய்ய ஐயானனம் பைய இடையைக் கண்டமட்டு சீய மென்று அஞ்சிபின்பாகும்: தலைவியின் இடைக்குச் சீயம் உவமை, சீயம்-சிங்கம், ''பாரிலிடைக்கரவும் . . . . துடியளவுங் கோளரியுஞ் சொல்'' (உவமானசங். 10)ஐயம்-மிருகங்களைக் கண்டு தலைவி அஞ்சுவாளோ என்னும் சந்தேகம், அடைக்கலம்-கையடை

தலைமகள் அசைவறிந் திருத்தல்

[தலைவியினது வருத்தத்தை யறிந்து தலைவனுடனிருத்தல்]

'' விரைசெறி குழலாள் மெலிவுறக் கண்ட குரைகழல் வேலோன் குளிர் நெறி யுரைத்தல்''

பொருப்புஞ் சுரமுங் கடந்தே மினிநறும் பூம்பொழிலும்
அருப்பமுந் தானந் திகழவந் தெய்திடு மன்றசுரர்
கருப்ப மறுக்குங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
விருப்பம தாமலர் கொய்து தெண்ணீர் விளையாடுதுமே (74)

[கு. ரை.] பொருப்பு-மலை, சுரம்-பாலை நிலம், பூம்பொழில் -பூஞ்சோலை, அருப்பம்-மருதநிலத்தூர், தானம் (சோலை முதலியவற்றுடைய இடம்)

தலைவன் தன் பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல்

"மின்னனனையாள் மனமெய்ப்பவணின்று தன்னக ரணிமை தலைவன் சாற்றல்"

போதணி கோதைய ராடுந்தடமும் பொழிலுமிதாங்
கோதறு கோபுர மும்மணி மாடக் கொடியுமரன்
காதலரான குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
ஓதநிகர் விழி யாயதைப் பாரெம் முறைபதியே (75)

[கு. ரை.] போது-இதழ் விரியாத மலர் (பகலெல்லாம் போதாக [குறள்])
கோதையர்-கூந்தலையுடைய மகளிர், தடம்-வாவி, பொழில்-சோலை, மாடம்-உபரிகை வீடு ஓதம் நிகர் வழியாய்-கடல் போன்ற கண்களை யுடையவளே. "கஞ்சத்தினளவிற் றேனுங் கடலினும் பெரிய கண்கள்" (கம்பர்-இராமா) உறைபதி-வாழ்நகர்

தலைவன் தலைவியுடன் தன்னகர் புகுதல்.

"ஆங்கவர் சென்றெதி ராயஞ் சூழத் தேங்கமழ் மொழி யோடுந் திருநகர் புகுதல்."

பௌவப் புணரி யெனத்தமர் சூழப்பல் லாண்டிசைப்பக்
கொவ்வைக் கனியிதழ் மின்னரயினி கொடுவரவாங்
கௌவைத் தவிர்த்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
மௌவற் சிறுநகை யுங்கோவு மெய்தினர் மாநகர்க்கே (76)

[கு. ரை.] பௌவம்—கடல், புணரி—அலை, கடலலை சூழ்ந்து வரும் சுற்றத்தாருக்கு உவமை. தமர்—சுற்றத்தார், பல்லாண்டு—வாழ்த்து; பல யாண்டுகள் வாழ்கென வாழ்த்தும் வாழ்த்து. இதழ்—உதடு, மின்னர்—மகளிர், அயினி—ஆலத்தி. கௌவை—துன்பம், மௌவல் சிறுநகை-முல்லையரும்பு போன்ற சிறு பற்களை யுடைய தலைவி, கோ—தலைவன்.

நகரமாந்தர் வாழ்த்துதல்

"தன்னிலை யுணர்ந்தோர் சகலருமகிழ்ந்து மன்னையுந் தோகையு மனையிடை வாழ்த்துதல்"

மல்லார் புயத்தன் வடகரை யாறையில் வாளரசன்
அல்லாளன் சொற்றிரு மலையினை யாளு யகன்றனையாள்
கல்லார மார்பர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
வில்லார் நுதலும் விறல்வேந்தும் மாளிகை மேவினரே (77)

[கு. ரை.] நாயக்கனையாள்-(பி, ம்.)

மல்ஆர்–பலம்பொருந்திய, வடகறையாறை–வடகறையாற்றூர், வாள்அரசன்–வாளையேந்திய அரசன்: வேடுவரில் தலைவனுயினேன் பெறும் சிறப்புப்பெயர், அல்லாளன் சொல்—அல்லாளன் என்ற புகழ் பொருந்திய, திருமலையினையா நாயகன், "கொற்றமிகு மாறையல்லாளனினை யானருள் குமார திருமலையுபயமே" (262) தார் மேவு வாகைபுனை கண்ணப்ப சேகரன் தருமமே கனி நெஞ்சினன் தருமருவு திருமலையல்லாள னினையான் மரபு தருமந் தழைத் தேறவே" (263) (திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை,) இவன் கலியுக சகாத்தம் 5560ல் வாழ்ந்தவன், யாவர்க்குமினையான். தேவருக்குந் திரும்பாதகாவிரியைக் கொங் கேற்றித் திறை கொண்டோன்" கபிலைமலைக் குழந்தைக் குமாரரைத் தெய்வமாகக் கொண்டு திருப்பணி செய்தவன், கல்லாரம்–செங்குவளை மலர்மாலை. வில்லார் நுதல்–வில்லைப் போன்ற வளைவான புருவமுடைய தலைவி, விரல்வேந்து–வலிமை யுடைய தலைவன்.

கற்பொடுபுணர்ந்த கௌவை

தலைவி தலைவனுடன் கற்பொடு கூடிச் சென்றதை அயலார் விராய சேரியர் பலருமறிதல்

செவிலி பாங்கியை வினுதல்

தலைவியைத்தேடிக் காணுமற் செவிலிபாங்கியைக் கேட்டல் "ஐயமுற் றுளங் கொதித் தணங்கின ளெங்கெனச் செய்ய மெய்ப் பாங்கியைச் செவிலி வினுதல்"

மார்த்தாண்டன் றேன்று முன்னன்னை புணர்ந்து மலரணையிற்
பார்த்தாள் சிறுமியைக் காணும லாகம் பதைத்துலகைக்
காத்தாள வந்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
வேர்த்தா ணெடிதுயிர்த் தாள்பாங்கி தன்னை வினவினளே (78)

[கு. ரை.] மார்த்தாண்டன்-சூரியன், அன்னை-செவிலித் தாய், மலரணை-மலர் போன்ற மெல்லிய மெத்தை, ஆகம்-உடம்பு. வேர்த்தலும் உயிர்த் தலும் வெகுளியின் மெய்ப்பாடுகளாம், வேர்த் தல் உடற்புறத்து நீரரும்பல் உயிர்த்தல்-பெரு மூசசு விடல் கௌவை-பலரறிசொல்

பாங்கி செவிலிக்குணர்த்தல்

தலைவி தலைவனுடன் சென்றதைப் பாங்கி செவிலிக் குணர்த்தல்

"அனைதுயிலறிந்து அகற்றிய சேடி வினவிய செவிலிபால் மின் கருத்துணர்த்தல்"

மிக்கார் மதமலை விட்டின ரன்றி மிகுபொன்றர
நக்காற் கெனைச்சம் மதித்தன ரென்றுளந் தான்சலித்தாள்
கைக்கான சந்திக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
அக்கார மென்மொழியாள் கருந் தேதென் றறிந்திலமே (79)

[கு. ரை.] விட்டினர் கன்றி (பி.-ம்)
மிக்குஆர்—மேற்பட்டு வந்த. மதமலை—யானை. விட்டினர்—வெட்டிவீழ்த்திய தலைவருக்கு, அன்றி—மணஞ்செய்து கொடுப்பதையல்லா மல், எனைசம மதித்தனர்-என்னை மணம்செய்து

கொடுக்க இசைந்தார்கள். சலித்தாள்—துக்கப் பட்டாள். சத்தி—வேல், பார்வதியுமாம்—சிலேடை. அக்காரம்—சர்க்கரை, கரும்பு. அயலார்க்கு மணம் பேசியதால் துக்கமுற்ருள் தலைவியென்று கூறியதால் அவள்தன் கற்புக் கெடும் என்று காதலனுடன் சென்றிருப்பாள் என்பது குறிப்பு, அயலார்க்கு மணம் பேசும் பொழுது மகளிர் தம் காதலருடன் போய் விடுவர் ரென்பதனை ''இருங்கற்பகப் பொழி லேரக வேலரெண்ணுர் கிளைபோல், வருங் கற்புடைந்தது கேளிரெல்லா மறுத்தார் வரை வென், றருங்கற் பெருஞ் சுரத்தாளியன்னு னுடரியமழை தருங்கற்புட னடந்தாள் பிறர் பால் மணஞ்சாருமென்றே'' என்னும் (செங்கோட்டுக் கோவை 319) செய்யுளாமாறு காண்க.

செவிலி தேடல்

''கூறிய தோழிமேற் கொடுமைக ளுரைத்தே சீறடி மீள்வகை செவிலிபின் றெளிதல்.''

மீனர் விழியணங் கேநீயு நென்னல் விளம்பிலையே
யானுநு நீமெத் தசடியன் ரேவறி யாமலர்ப்பூங்
காறுறுஞ் சோலைக் குழந்தைக் குமாரர் கயிலைவெற்பிற்
போனளக் கோவுடன் சந்தேகமில்லைப் புணர்ந்துகொண்டே

[80]

[கு.ரை.] மீன்ஆர்-கெண்டைமீன் போன்ற, அணங்கே-தோழியே, நென்னல்—நேற்று, அசடி—குற்ற முடையவள், அறியா—வண்டுகளுமறியாத, பூகாண்—பூவின்மணம், அகோ-அத்தலைவன், புணர்ந்து—சார்ந்து, கூடி.

செவிலியிரங்கல்

"குன்றிடந் தோறுங் கோதையைத் தேடிச் சென்ற அந்நெறியிற் செவிலி நின்றிரங்கல்."

முருகாரும் கூந்தற் சிறுமியை நாடி முயன்றனைதான்
குருகாருஞ் சோலை கடந்தேகி யேபொழில் கொண்டவண்ணாக்
கருமால் மருகர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
இருதாரை பாணி சொரியநின் றுள்ள மிரங்கினளே [81]

[கு. ரை.] முருகு ஆரும்-மணம் நிறைந்த, சிறுமி-தலைவி, அனை—செவிலி, குருகு—பறவைகள், பொழில் கொண்ட—சோலையை ஒத்த (பசுமையாகிய) வண்ணம்-அழகு, கருமால்—கரிய நிறமுடைய திருமால்.

செவிலி வேதியரைவினுதல்

"சந்தகில் சூழுந் தாரியில் வந்த வந்தணர்தமை நின்றன்னையர் வினுதல்"

[கு. ரை.] தாரி—வழி

மூவழல் வேள்வி வளர்த்துரி சாத்திமுக் கோல்பிடித்துப்
பாவள மோதி வருமந்த ணிரேங்கள் பாவையிங்கோர்
காவள மேவுங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
மாவளந் தோன்றல் பின்சென்றனள் காணில் வழுத்திடுமே
[82]

[கு. ரை.] காணில் வலித்திடுமே (பி ம்.)
காவளம் 47-வது பாடல் காண்க

முவழல்—முத்தீ "காரு கபத்திய மாகவனியந் தக்கணுக் கினியமிக்கமுத் தீயே" (பிங்கலம் 55) "மூன்று வகை குறித்த முத்தீச் செல்வத் திருபிறப்பாளர்" (திருமுருகு 181) "நறுநெய் பயந்த நன்னகர் முத்தீ மறுமைக் கெண்ணிய மயலறுகிரிசை, யந்தணர் சேரியும்" (பெருங்

கதை 143 –173—5) உரிசார்த்தி—மரவுரியை ஆடையாக அணிந்து ''சீரை தைஇய உடுக்கையர் மரநாரின் உடையினன்'' (கம்பர். இரா. அயோத், வனம்புகு படலம் 183) உரி - மான்தோல் எனினுமாம், ''மானின் உரிவைதைஇய ஊன்கெடு மார்பின் ''(முருகு 128-9) '' உரிமானின் சருமன் '' (அயோத் -- வனம்புகு படலம் 183) முக்கோல்-திரிதண்டம், '' முக்கோலந்தணர் '' (மறைசையந்தாதி) ''கோண் மூன்று கொண்டு குறும்பொரு மூன்றுங் குமைத்தவரே'' (கலைசைக் கோவை 357) '' முக்கோலினுலைந்து கோலை வென்றே சென்ற முன்னவரே'' (குலோத்துங்கச் சோழன் கோவை 391) '' நிமிர்கோலன் '' (கம்பர் -- அயோத்திய-வனம் 183) வளம்பா ஓதி— வளமுடைய நான்மறைச் சுலோகங்களைப்பாடி '' நான்மறைபாடி முக்கோல் வகையால் கரங் கொண்டு'' (கோடீச் சுவரக் கோவை 351) ''வேதமுறு வனபாட்டுள '' (நான்மணிக் கடிகை) தோன்றல் பின்–தலைவனுடைய பின் பக்கம், பணைத்திறு மாந்த பயோதரத்தோர், பித்திதற் பின்வர பின் வருமோவொர் பெருந் தகையே '' (திருச்சிற்றம்பலக் கோவை 242) '' சீரைசுற்றித் திருமகள் பின் செல '' (கம்ப- அயோத்தியா).

மிக்கோர் ஏதுக்காட்டல்
(உலகியல்புரைத்தல் எனினுமாம்)

[செவிலி வினயதற்கு உயர்ந்தோர் அஃது உலகியல் என்னும் காரணம் காட்டல்]

''வன்மை கண்டறியா மதலையைத் தேடுந் தன்மை கண்டுயர்ந்தோர் தாயினைத் தேற்றல்''

மென்மலர்ச் சீறடிப் பாவையிக் காளிலோர் வேந்துடனே
நின்மகள் நின்னையல் லாதகன் ருலிங்கினிச் செல்லலென்
கன்மக மகற்றுங் குழந்தைக் குமரர் கயிலைவெற்பில்
தன்மம தல்லநும் மூர்க்கேகு மீண்டினித் தாயன்னையே [83]

[கு. ரை.] பாவை – பெண்ணே, அண்மைவிளி, நின்னை – உன்னிடத்தில் [வேற்றுமை மயக்கம்] அகன்ருல்–தன்னை விரும்பிய தலைவனுடன் சென்ருல், நீ செல்லல்–நீ அவளைத் தேடிச் செல்வது, என்–எதன் பொருட்டு, கன்மம்-ஊழ்வினை, "ஊழ்வினையைப் போக்கியுல வாத பேரின்ப வாழ்வு தருஞ் செய்ய மலர் முகமும்" (கந்தர் கலி வெண்பா) தன்மம் அல்ல–தலைவனுடன் சென் றவளைத் தொடர்ந்து தேடிச் செல்வது நீதியல்ல, அறமாகாது எனினுமாம், மகளிர் தம்மை விரும்பிய தலைவனுடன் செல்லுதல் உலக இயல்பு, "சுரும்பிவர் சந்துந் தொடுகடன் முத்தும் வெண்சங்கு மெங்கும், விரும்பினர்பாற் சென்று மெய்க்கணியாம் வியன் கங்கையென் னும், பெரும்புனல்சூடும் பிரான் சிவன் சிற்றம் பலமனைய, கரும்பன மென்மொழியாரு மந்நீர் மையர் காணுநர்க்கே" (திருக்கோவை–247) "விண்ணிற் கருக்கொண்ட கார் சொரிந்தாற் பார் விழுந்தறு காதவை போல் விளைப்பயனுற உருக்கொண்ட மாதும் பருவத் தயன்மனையுட் புகுமே" (குற்ருலக்கோவை–354) "காயுங்கனியும் பருவத் தருந்துநர் கைப்படு மால் . . . . . ஆயும் பொழுது மின்னுருமந் நீர் மையர் அன்பினர்க்கே"

(கலைசைக் கோவை 19)

தலைமகள் தன் செலவு ஈன்றாட்குணர்த்தி விடுத்தல்

"அலமுறு மன்னை யென்றறிந்தன ரோடும் தலைவி தன்னிலை தான் சொலிவிடுத்தல்"

மேதினி பாரம் பரிக்குமெம் மன்னரென் மீதில்வைத்த
மாதியந் தன்னையு மில்வாழ்க்கை நீதியு மாணலரைக்
காதிய வேற்கைக் குழந்தைக் குமரர் கபிலைவெற்பில்
ஆதிய தாம்வரு ணத்தீ ருரையுமென் னன்னையர்க்கே [84]

[கு. ரை.] மேதினிபாரம்—பூமியைக் காக்கும் சுமை, பரிக்கும்-சுமக்கும், மாதியம்-காதல், இல்வாழ்க்கை நீதி-தாம் நடத்தும் இல்லற வாழ்க்கை முறை, மாணலர்-பகைவர், காதிய-கொன்ற, ஆதியதாம் வருணத்தீர்-முதல் வருணத்தவர்களே (அந்தணர்) அன்னையர்-நற்றாயர், செவிலித்தாயர்

அந்தணர் மொழிந்தமை கேட்டுத் தோழியும் செவிலியரும் வாழ்த்தல்

"முப்புரி நூலோர் மொழிந்தமை யிகுளையர் செப்பனையோடுஞ் செவிலியர் வாழ்த்தல்"

மையார் சுரிகுழற் சேடியர் கேட்டன்னை மார்க்குரைப்ப
பையாருங் கட்செவி மேற்கண் வளரும் பரன்றிகிரிக்
கையார் மருகர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
மெய்யாரு ஞாலத் திறையுடன் வாழ்த்தினர் மின்னையுமே [85]

[கு. ரை.] சுரிகுழல்-சுரிந்த கூந்தல், கட்செவி-பாம்பு, கண்வளரும்-யோகநித்திரை செய்கின்ற, பரன்-திருமால், திகிரி-சக்கரம், இறையுடன்-தலைவனுடன், மின்னை-தலைவியை.

— கற்பொடு புணர்ந்த கௌவை முற்றிற்று —

கற்பியல்

கற்பியல் பெயர்க்காரணம்: தலைவிக்கு ஆசாரமும் அறிவும் தலைவனாலும் இருமுது குரவராலும் செவிலியாலும் அந்தணர் முதலிய சான்றோர்களாலும் கற்பிக்கப் படுவது ஆதலால் இவ்வியல் கற்பியலாயிற்று.

இல்வாழ்கை

[தலைவனும் தலைவியும் இல்லின் கண்ணே வாழும் வாழ்க்கையைக் கூறல்]

தலைவனைப் பாங்கி வாழ்த்தல்

[தலைவிமுன் தன்னைப் புகழ்ந்த தலைவனைப் பாங்கி வாழ்த்தாநிற்றல்]

''சொன்னெறி தவறாத் தோழி வந்தன்பாய் மின்னொடு வேந்தையும் வினவியங்குரைத்தல்''

மொழிப்படி பாங்கி யவைகேட் டுவந்து முடிமன்னனைப்
பழிப்பற வாழ்த்திப் பணிந்து நின்றேத்திப் பகைஞர்கடற்
கழிப்பற வெய்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
எழில்பெறக் கூடி விளையாடி யின்புற் றிருந்தனளே [௮௦]

[கு.ரை.] மொழிப்படி-அந்தணர் மொழிந்தபடி, அவை-அவருடைய சொற்களை, வந்து-தலைவனார்க்கு வந்து, பகைஞர்கடல்-பகைவராகிய கடல், களிப்பு எதுகை நோக்கி கழிப்பு என்றாயிற்று மகிழ்ச்சி என்பது பொருள், ''தெரியாடக விதழ்ப்பூங் கொன்றைவேணியும் தேவியும் போல் பிரியாதுறையப் பெறுகுதிரால்''-இதனைப் பாங்கி வாழ்த்தல் என்பர்.

பொருள்வயிற் பிரிவு

[பொருளீட்டுதல் காரணமாகப் பிரியும் பரிவு]

பாங்கி மறுத்தல்

[பாங்கி தலைவன் பொருள்வயற் பிரிவை மறுத்துரைத்தல்]

"தன்மையிலிறைவன் முன்பொருட்கேகல் வன்மையிற் பாங்கி மறுத்தெதிர் மொழிதல்"

மோசம தாமென்று நீபொருட் கேகிலெம் மொய்குழற்கு
நேசம தாகவுரை யுமென் றிவை நேரமென்றுங்
காசினி யோரென் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
பேசவென் வாயுள தோமன்ன னீர்செயும் பேதமைக்கே [87]

[கு. ரை.] மோசம்-அவத்தம், "ஆவிக்கு மோசம் வருமாறறிந்து" "எள்ளுநர்ப் பணித்தலும் மிரந்தோர்க்கீதலும், நள்ளுநர் நட்டலும் நயவாரொறுத்தலும்" என்னுமிவை பொருளாலெய்தும் ஆதலினாலும் தன்முதுகுரவரால் படைக்கப்பட்ட பொருள் கொண்டு பயன் துய்ப்பது ஆண்மையன்றுமாகலானும் தனது தாளாற்பெற்ற பொருள் கொண்டு வழங்கிப் பயன்துய்ப்பதே தக்கதாமாதலினாலும் பொருள்வயிற் பிரியும் என்க. மொய்குழல்-தலைவி, இவை-தலைவிக்கு மோசந்தரும் பொருட் பிரிவு குறித்த இச்சொற்களை, நேரம் என்றும்-எப்பொழுதும் காசினியோர்-பூமியிலுள்ளவர், என்வாய்-எனக்குவாய், பேதமை-அறிவின்மை.

பொருள்வயிற் பிரியுந் தலைவன் தான் வருமளவும் தலைவியைத் தேற்றுகவெனப் பாங்கிக்குக் கூறல்

''தனந்திரள் தேடத் தலைவன்செல் போதுமின், மனந்தளராமல் வைத்திரு மென்றல்''

மௌவற் சிறுநகை வாணுத லேயொரு வாசகங்கேள்
இவ்வற் பொழுதினி லேவரு வேனிமை யோர்தமது
கவ்வைத் தவிர்த்த குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
கோவ்வைக் கனியிதட் டையலை யாவணங் கொண்டிருமே [88]

[கு. ரை.] மௌவல்-முல்லை யரும்பு. சிறுநகை-சிறுபல், வாணுதல் - ஒளி பொருந்திய நெற்றியை யுடையவள். ஒரு வாசகம் — ஒரு சொல். இவ்-இந்த கை நொடிக்கின்ற. வன்பொழுது-விரைவான காலம். கவ்வை — துன்பம். இதழ்—வாயுதடு. தையல்—தலைவி. நையா வண்ணம் — வருந்தாதபடி. கொண்டு இரும்— தேற்றிக்கொண்டிருப்பாய்.

தலைவன் மீண்டமை பாங்கி தலைவிக்குணர்த்தல்.

[பொருள் வயிற்பிரிந்த தலைவன் வருகையைப்பாங்கி தலைமகளுக்கு உரைத்தல்.]

''பொருள் வயிற் சென்ற புரவலன் வரவு
அரிவைதன் பாங்கி யகமகிழ்ந் துரைத்தல்''

யமனைக் கருவும் விலோசனத் தாயெம் மிறைபனில
வமரத்தி லேறிப் பொருள்தேடிக் கொண்டுவந் தாரலங்கல்
கமழ் பொற் புயத்தர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
திமிரக் குழன்முடி பூணரந் திட்டு நிலந்தையே [89]

[கு. ரை.] கருவும் — கோபிக்கின்ற. விலோசனத்தாய் — கண்களையுடையவளே. இறை — தலைவன்.

பணிலம்—சங்கு. அமரம்—தோணியின் பின் பக்கம் "(கழகத் தமிழ்க் கையகராதி 20-ம் பக்கம்) அலங்கல்—பூமாலே. பொன்—அழகு. திமிரம் குழல்—இருள் நிறமுடைய கூந்தல். முடி—வாரி முடிப்பாய். ஆரம்பூண்—மாலே தரிப்பாய். "ஆரம்பூண்ட மணிமார்பா" என்பார். திலகம்-பொட்டு. தீட்டு-தீட்டுவாய், வைப்பாய்.

நினேந்தமை விறைதல்

(பாங்கி எங்களே நினேத்ததுண்டோ என விறைதல்)

யாம்போ திடத்தி லந்தி சந்தியில் விடாதெங்களே நீர்
தாம்போ திமைப்பு நினேந்ததுண் டோதடந் தோறும் வண்டு
காம்போதி பாடுங் குழந்தைக் குமரர் கபிலே வெற்பில்
போம்போ தணுவும் மறவோமென் றேசொலிப் போனவரே [90]

[கு. ரை.] யாம் போம் போது-நான் பிரிந்து செல்லும் காலத்தில் அணுவும்-சிறிது பொழுதும். போனவரே- பிரிந்து சென்ற தலேவரே. போது இடத்தில்- பிரிந்து சென்றுபோன இடத்தில். அந்தி-அதிகாலே. சந்தி–மாலே. நீர்தாம்—நீர். தாம்—அசைச் சொல். இமைப் போதும்—ஒரு மாத்திரை நேரமாயினும் "இயல்பெழு மாந்தர் இமை நொடி மாத்திரை" (நன்னூல்) தடம்-தடாகம். காம்போதி-காம்போதிப்பண்.

பாங்கி தலேவன் உடல் இளேப்புற்றிருக்கக் காரணம் விறைதல்

"தனத் திரள் கொண்ட தலேவன் வந்தபின், மனத் துயர் யாதென மடமயில் விறைதல்"

பூகமுன் விட்ட வேலோய்நன் றுச்சுநின் றும்முடைய
வாக மிகத்தளர் வெய்திய தென்சொலு மன்னரன்பாற்
காகளம் பெற்ற குழந்தைக் குமரர் கபிலேவெற்பில்
மோக மிருந்தத னுலேவந் தார்பெண் முயங்குதற்கே [91]

[கு. ரை.] யூகம் — படை. முன்னிட்ட — முதன்மை பொருந்திய. நன்று ஆச்சுது — நீ வந்தது மிகவும் நல்லதாயிற்று. ஆகம் — மேனி. "நிறந்தோயுமேனி மெலிவான தென்ன நினைவுரையே (குற்ருலக்கோவை-40.) "ஏதோ அறிகின்றிலேன் றிருமேனிஇளைத்ததுவே" (குலோத்துங்க சோழன் கோவை-48.) காகளம்—எக்காளம். மோகம்--மகளிரிடத்தாசை. முயங்குதல் — தழுவுதல். "விம்ம முயங்கும் துணையில்லார்" (நாலடியார் 392) "கூடி முயங்கப் பெறின்" (திருக்குறள் 1330) மடமயில் — பாங்கி, தலைவியுமாம்.

தலைவன் தான் சென்ற இடத்தில் உன்னை நினைத்தேன் எனத் தலைவிக்குக் கூறல்.

"தனை நிகரில்லாத் தலைவனங் கவண்முன் வினவிய செயலொடு மெய்ப்ப மீண்டுரைத்தல்"

யோசனை வேறினி யாதுள வங்கணுனை நினைந்தேன்
தேசசு குன்றியிவ் வாறடைந்தேன் கையிற் சேர்ந்தருள்வேற்
காசினி போற்றுங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
வாசனை சேருங் குழற்றிருவேயெமை வாழ்வியுமே [92]

[கு. ரை.] அங்கண் — பொருளீட்டச் சென்ற அவ்விடத்தில். தேசசு குன்றி — (இடைவிடாது நினைந்தமையால்) உடலின் அழகு குறைந்து. இ ஆறு அடைந்தேன் — (உடல் இளைப்புற) இவ்விதம் வந்தேன். திருவே — திருமகள் போன்றவளே. காசினி—பூமியிலுள்ளவர்கள். [ஆகுபெயர்] போற்றும் — புகழ்கின்ற. எமை வாழ்வியும் — என்னைக்கூடி உயிர் வாழச் செய்வாய்.

மகளிர் நினைவால் உடலிளைத்தல்:—

''கோம்பிக் கொதுங்கி மேயா மஞ்ஞை குஞ்சரங் கோளிழைக்கும், பாம்பைப் பிடித்துப் படங் கிழித்துத், தாங்கப் பணைமுலைக்கே, தேம்பற் றுடியிடை மான்மட நோக்கி த்தில்லைச் சிவன்ரு ளாம் பொற் றடமலர் சூடுமென் னுற்ற லகற்றியதே'' (திருக்கோவையார்-21)

''முப்பாலின் சிந்தையிற் குற்ருலர் வெற்பினள் மோகவரா, இப்பா லென்னெஞ்சவரையுஞ் சுழற்றி நச்சிட்டனவே''

(குற்ருலக்கோவை-41)

பரத்தையிற் பிரிவு

[பரத்தையின் இன்பம் நுகர்தற்குத் தலைவன் பிரிதல்]

தலைவி மங்கல நாளில் மகவினைப் பெறுதல்

யௌவன வேளையிற் கர்ப்பமுன் டாய்க்குய மாங்கரிய
நௌவ லறுங்கனி போற்கன் கருத்துமுன் னாலமெல்லாங்
கௌவிய லாளர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
செவ்வன சந்திரு வின்ருள் நன்னாளிற் சிறுவனையே [93]

[கு. ரை.] யௌவனவேளை-அழகுள்ளகாலம், இளமைப் பருவம், குயம்—முலையானது, மா—கருமை, மாகரிய—மிகவும் கருமையான, நௌவல்—நாவல், கண்—நுனி, ஆலம்—பாற்கடலில் தோன்றிய ஆலகாலவிடம், கௌ—கவர்ந்த, இயல்ஆளர்-தன்மையுடையவர் சிவபெருமான் (குமாரராகிய) முன்—எதிர்வரும்; ஆலம் எல்லாம் கௌவியல் ஆளர்-விடப்பாம்புகள் அனைத்தையும் வாயினுல் கவ்வும் இயல் புடைய மயிலை ஆளும் முருகர் எனினுமாம், செவ்வனசம்திரு—செந்தாமரை மலரில் விற்றிருக்கும் இலக்குமியை யொத்த தலைவி,

நன்னாள்—சுப வேளை, சிறுவன்—புதல்வன், இனிப் பரத்தையர்ப் பிரிதல் என்பது தலைமகளை வரைந் தெய்தின பின்னர் வைகலும் பாலே நுகர்வா னொருவன் இடையே புளிங்காடியு நுகர்ந்து அதனினிமை யறிந்தாற் போல அவனுகர்ச்சி யினிமை யறிதற்கும் புறப் பெண்டிர் மாட்டுப் பிரியா நிற்றல், (திருக் கோவையாருரை பேராசிரியர்.)

இகுளை நெய்யாடியதுரைத்தல்

[தலைவி புதல்வனைப் பயந்த புனிறு தீர்த்தற் பொருட்டுச் சுற்றத் தாருடன் நெய்யாடியதைப் பாங்கி தலைவனுக்குக் கூறுதல்.]

வரிசையதாக முடிமன்னர் வேணா வளமளிக்கச்
சுருதியோ டந்தணர் அட்சதை நீடத் தொழுதடியார்
கருதிய போற்றுங் குழந்தைக்குமாரர் கபிலைவெற்பில்
அருவையர் வீதிக டோறும் பன் னீர்புழு காடினரே [94]

[கு. ரை.] வேணா—விரும்பிய, வளம்—பல பொருள், சுருதி-வேத வொலி, அட்சதை-மங்கலவரிசி, நீட—கொடுக்க, கருதிய—கருதி, அரிவையர் என்பது எதுகை நோக்கி அருவையர் என வாயிற்று, அரிவையர்—ஊரிலுள்ள மகளிர், பன்னீர்—வாசனை நீர், புழுகு—புனுகு கலந்த எண்ணெய், "புழுகு நெய்ச் சொக்கர்" (மதுரைக் கலம்பகம் 54) ஆடினர்-முழுகினர்.

தலைவன் மகவினைக் காண்டல்

வாரண மீது நளநாளி யங் கொடு வந்துநிறை
யாரண ருக்குப் புவியுட னிந்துந் தவம் புவிக்குட்
காரணமான குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
சாரணர் நாட் சொல்ல வந்துகண் டான்தன் தனையனையே

[95

[கு. ரை.] வாரணம்-யானை, தனம்-பொன், கொடுவந்து-கொண்டுவந்து, நிறை ஆரணர்—நிறைந்த அந்தணர், புவி-பூமி, ஈந்து-தானம் கொடுத்து, புவிக்குள் தவம் காரணம் ஆன-பூமியில் தவம் புரிவதற்கு மூலகாரணமான, சாரணர்-சோதிட நூற் புலவர், நாள்—குழவியைப்பார்த்தற்குரிய நல்ல முகூர்த்தம், வந்து—நல்ல வேளையில் வந்து, தனையன்—புதல்வன்.

காவற்பிரிவு — [நாடுகாத்தல் பிரிவு]

"தலைவன் உதவியிற் பிரிதல் தலைவிக் குரை யென்றல்"

விருப்பம தாகப் புரக்குநம் பூமியில் வேற்றரசர்
மருப்புக ரானை பிடிக்கவந் தாரவர் மண்டலத்தைக்
கருப்புற நூறிக் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
பொருப்பினி லேற்றிப் பொரப்போதல் சொல்லு நம் பூங்கொடிக்கே
[96]

[கு. ரை.] கருப்புர—(பி. ம்.)
புரக்கும்-பாதுகாக்கின்ற, பூமி-நாடு, கருப்பு-பஞ்சம், நூறி-அழித்து, பொருப்பினில் ஏற்றி-மலைமீதேறச்செய்து, பொரல்போதல்-போரிட நான் போவதை, பூங்கொடி-தலைவி.

பாங்கி தலைவிக்குக் கூற மறுத்தல்

விரியத் தாற்பொரு வேடன் படையை விலக்கலிங்கன்
நீரியற் றுகவே போயினை யேல்முன் னிசாசரரைக்
காரியத்தால் வெல் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
போரியற் றுநின்ற வேடன்படைக்குச் சொல் போம்விழியே [97]

[கு. ரை.] பொரு-போர் செய்கின்ற, வேடன்-வேடராசன், நீர் இயற்றுக-நீரின் இயல்பாக விரைந்து. நிசாசரர்-அசுரர், காரியம்-தேவர்களைக் காக்கும் காரியம், போர் இயற்ற நின்ற-தலைவியுடன் போர் செய்கின்ற, வேள்தன்-மன்மதனுடைய, போம்வழி-தப்பும் வழி.

பாங்கி விலக்கல்

வெண்ணான்கு கோட்டிபத் தோன்பாணி பற்றியவிற்புருவப்
பெண்ணான் குகமெனும் நீ யொருபோது பிரியில்மலர்க்
கண்ணான்கு மூவர் குழந்தைக் குமரர் கயிலைவெற்பில்
எண்ணான் கிரட்டி கலைபாயு மெங்கட் கிறையவனே [௯௮]

[கு. ரை.] வெண் நான்குகோடு இபத்தோன்-வெண்மையாகிய நான்கு கொம்புகளையுடைய (ஐராவத) யானையையுடைய இந்திரன், "கோட்டான நாற்கோட்டு வெண்ணிறத்த குஞ்சரமும்" (திருவிளையாடற் - வெள்ளையானை சாபம்—13) பாணி-கை, வில் புருவம் பெண்-வில்லைப் போல புருவமுடைய இந்திராணி போன்ற தலைவி. உவமையாகுபெயர். ஒரு போது-சிறிது நேரம், நான்கு உகம் எனும்-பிரிந்த அச்சிறு நேரத்தை நான்கு யுகங்கள் என்பாள் மாதொரி ராப்பன் னஞ்சுகமெனும் (மறைசையந்தாதி) இந்திராணி தலைவிக்கு உவமை "அண்டர் தம் மாதர் நடு விந்திராணியினையத் துறூஉம், வண்டிருமாதவள்" (கோடீச்சுவரக் கோவை—34) "அந்தரக் கோன்றுணை யென்றார் சிலர். (கோடீச்சுவரக் கோவை - 77)

அரசு நெறியுரைத்தல்

[பகைவரை வென்று வந்த தலைவன் நீதியோடு அரசாட்சி புரிதல்.]

வேற்றுப் புலிக ளினியில்லை யென்னத்தெவ் வேந்தர்தமைக்
கூற்றுக் கிரையிட்டு மீண்டுவந் தேமணங்கொண்டு தென்றற்
காற்றுப் பரவுங் குழந்தைக் குமரர் கயிலைவெற்பில்
நாற்றிக்கு நன்னெறியோடே செங்கோன்மை நடாத்தினனே [௯௯]

[கு. ரை.] வேற்றுப்புவிகள்-வேறு அரசர்களால் ஆளப்படும் வேற்று நாடுகள், இல்லை என்ன-வேறொன்றுமில்லை என்று சொல்லும்படி (எல்லா நாடுகளும் தன்னுடாகும்படி) தெவ்வெந்தர்-பகையரசர். கூற்று-யமன், இரையிட்டு-கொன்று, மணம் கொண்டு-தலைமகளைக் கூடி, நன்னெறி-நன்மையாகிய நூல் முறை, செங்கோன்மை-நீதி வழுவாத அரசாட்சி, 1—2. ''வையங்காவலர் வழிமொழிந்தொழுகல், போகம் வேண்டிப் பொதுச் சொற்பொறுஅ, திடஞ் சிறிதென்னு மூக்கந்து ரப்ப ஒடுங்காவுள்ளத் தோம்பா வீகைக் கடந்தடுதானைச் சேரலாதனை'' (புறம், சேரமான் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடியது-8) ''கொடியு முரசுங் கொற்ற வெண் குடையும் பிறர் கொளப் பொருஅன் றுனே கொண்டு'' (சிதம்பரமும் மணிக்கோவை-25) 2, 3 தென்றலசை வருஉஞ் செம்மற்றேயம்ம நின், குன்றத்தாற் கூடல்வரவு (பரிபாடல் - 8 பாட்டு) 27 28 (தென்றலசையுந் தலைமைத்து நின் குன்றத்தொடு கூடலிடை வழி'' பரிமேலழகர்) ஆடலினிளைப்பு, விடுக்க வாரமென் காரிரு முகத்திடை வீசி, மடுக்கவும் (திருவிளையாடற் புராணம்-நாட்டு-55) ''மலையத் தோங்கி மதுரையின் வளர்ந்து, புலவர் நாவிற் பொருந்திய தென்றல் (புறஞ்சேரி-25-29) '' புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பிற் பொதியிற் றென்றல் போலாதீங்கு, மதுரைத் தென்றல் வந்தது காணிர்''

(சிலம்பு-புறஞ்-130-1-2)

தலைவனும் தலைவியும் அறமும் பொருளும் சிறக்க அரசாட்சி புரிதல்

"செங்கோன் முறைமை செலுத்தி யெக்காலமும்
அங்கோரிருவரும் அறத்துடன் வாழ்தல்"

வையம் புகழ மனுநீதி யோங்க வளஞ்சிறக்கப்
பையம் புயங்க மெனப்புவி தாங்கினர் பன்னிரண்டு
கையம் புயத்நர் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
எய்யம்பு வேளு மிரதியும் போல விருந்தனரே [100]

[கு. ரை.] வையம் - பூமியிலுள்ளவர்கள், மனுநீதி - மனு என்பவன் செய்யப்பெற்ற நூலிற் சொல்லிய நீதி, வளம் - செல்வம், பை - படம், அம்புயங்கம் - படத்தையுடைய பாம்பு; ஆதிசேடன் புவி தாங்கினர் - பூமியிலுள்ளவரைப் பாது காத்தனர். "கனக்குங்குமப் புயமீராறுடைய கைவேலர் (திருச்செங்கோவை–337) கை அம்புயத்தர் - கரங்களையும் அழகிய தோள் களையும் உடையவர். கைகளாகிய தாமரை மலர்களையுடையவர் எனினுமாம். அம்பு - மலர்ப்பாணம். வேள் - மன்மதன், மன்மதனும் இரதியும் போல இணைபிரியாமல் கூடியிருந் தனர். "மன்மதனுமிரதியு போல் வருவிர்" (கோடீச்சரக் கோவை 356)

தலைவனுந் தலைவியும் துறவறமாகிய வானப் பிரத்தமெய்தியது

"ஏன்றவிப் புவியில் இல்லற முற்றித் தோன்றலுந்
தலைவியுந் துறவறத் துற்றல்"

வெளவிய ரேனுமெய் ஞானிக ளேனும்பின் மற்றவர்க்கு
மொவ்விய போனமிட் டில்லறங் காத்தன் றுமை முலைப்பால்
கௌவியே யுன்னுங் குழந்தைக் குமாரர் கபிலைவெற்பில்
செவ்விய லாகத் துறவறங் காக்கவுஞ் சென்றனரே [101]

[கு. ரை.] வௌவியர் - உலக வாழ்வில் பற்றுடையோர். மெய்ஞ்ஞானிகள் - உண்மையாகிய பரம் பொருளை யறிந்து பொய்யாகிய உலக வாழ்வைத் துறந்தோர். "திருந்தப் புவனங் களீன்ற பொற்பாவை திருமுலைப் பாலருந்தி" உமை முலைப் பாலுண்டது. "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மிரந்தார்க்கு மில்வாழ்வான் என்பான் துணை" என்பது திருக்குறளா கலான் "வௌவிய ரேனும் மெய்ஞ்ஞானி களேனும் மற்றெவர்க்கும் துவ்விய போன மிட்டு" என்ருர்.

துறவறம் - வானப் பிரத்தம் "மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து மிக்க காம வேட்கை தீர்ந்துழித், தலைவனும் தலைவியுந் தம்பதிநீங்கித் தொலைவில் சுற்ற மொடு துறவறங்காப்ப" (நம்பியகப்பொருள் - அகத்திணையியல்-116.) இச்செய்யுள் வானப் பிரத்தத்தின் கண் சென்ற தலைவன் தலைவியர்ப் பற்றிக் கூறுவது. வானப் பிரத்தநிலை கூறியது. தொல்காப்பியம்—கற்பி யலில் கூறியுள்ள "காமஞ்சான்ற கடைக் கோட்காலை, யேமஞ் சான்ற மக்களொடு துவன்றி, யறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும் சிறந்தது பயிற்றலிறந்ததன் பயனே" என்னும்-51-ம் சூத்திரத்தை நினைவிற் கொண்டதாம். ஒவ்விய - இசைவாகிய. போனம் - உணவு, செவ்வியல் - செம்மையா கிய தன்மை.

நூற்பயன்

கொற்றவர் போற்றுங் கபிலைக் குழந்தைக் குமாரர் தன்மேல்
சொற்ற வருக்கைக் கனித்துறை நன்னைத் துகளறவே
கற்றவர் கேட்டவ ரன்புற் றிருந்தவர் கந்தரருட்
பெற்றயி ராவத வானையு மேறப் பெறுவர்களே [102]

வருக்கைக் கலித்துறை: மொழிக்கு முதலாகும் உயிரெழுத்துகளும் உயிர்மெய்யெழுத்துக்களும் ஆகிய வருக்க எழுத்துக்களை ஒவ்வொரு செய்யுளின் முதலிலும் முறையே அமையும்படி பாடிய கலித்துறைப் பாடல்கள். இது கலிப்பா இனத்தைச் சார்ந்தது. இது வருக்கமாலை எனவும் பெயர் பெறும். ''மொழிக்கு முதலாகிய எழுத்துக் களெல்லாம் வருக்க முரைப்பது'' துகள்-எழுத்துப்பிழை முதலிய குற்றங்கள்.

அயில் வேலன் கவியை யன்பால், எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர் (கந்தரலங்காரம்) ஐராவதயானை-வெள்ளை வாரணம். இது இந்திரர்க் குரியது. ஐராவத யானை யேறுதல் இந்திர பதவியாம்.
(பன்னிருபடலம்-89)

சிறப்புப் பாயிரம்

நூற்பயி லுங்கலி நாலாயிரத் தெழு நூறதன் மேல்
நாற்பது வாம்பிர மாதிநைப் பூச நன் னாளதனிற்
பாற்பதி பாலர் குழந்தைக் குமாரர்க்குப் பாடல் செய்தான்
மேற்புகட் பாகைப் பிள்ளைப் பெருமாள் சிறைமீட்டவனே
[103]

[கு. ரை.] நூல்பயிலும்-நூல்களில் கூறப்படுகின்ற, கலி -கலியுகசகாத்தம் (4740, 5070—330) ஆண்டு களின் முன்பு. பார்வதி எதுகைநோக்கிப் பாற் பதி என்ருயிற்று, மேல் புகழ் - மேலான புகழ் பாகை-பாகை என்னும் ஊர். பிள்ளைப் பெரு மாள் பிள்ளைநாயகன் ''சோழிசர் மேல் மல்லை மாலை சொன்னுன் விந்தைப்புயன் பிள்ளை நாயகன் சொற்சிறை மீட்டவனே'' (மல்லைக் கோவை 102)

தலவரலாறு

கருவைப்பதியிற் பசுப்பிறந் தேகலங் காநிலையில்
நிருமித்து நிற்கின்ற நாளிற் கபிலை நெடும்பசியாற்
பருவிற் கிரி செல்லத் தன்பசியாற் புலி பற்றிவிடப்
பெருமைக் கிரியும் பதியுங் கபிலை தன் பேர் பெற்றவே
[104]

[கு. ரை.] கருவை – கருவை என்னும் நகரம், கலங்காநிலை கீழ்க்கரை அரைய நாட்டூர்களில் ஒன்று கலங்காநிலை. நிருமித்து – தன் வாழ்க்கையை யமைத்து. நிற்கின்ற – நிலைத்து நிற்கின்ற, கபிலை – பசு, காராம் பசு. வில்கிரி – பிணுகமலை, பற்றிவிடு – பிடித்துவிட்டு, அப்பெருமை கிரியும் – அந்தப் பெருமையான வரலாற்றினை யுடைய பிணுக கிரியும், பதி – அம்மலையைச் சார்ந்த, நகர் கபிலை தன் பெயர் பெற்ற–கபிலை மலை, கபிலைநகர் என்னும் பெயர்களைப் பெற்றன. இம்மலை திகழ்கபிலை என்றும் தென் கபிலை மாநகர் என்றும் கொங்கு நாட்டு ஊர்த் தொகைப் பாடல் கூறுகின்றது,

— சுபம் —

கபிலைக் கோவை முற்றும்.